# தமிழரசு

பிப்ரவரி 2001 ரூ.10/-

அறிவார்ந்த சிந்தனைகள்
ஐந்தாண்டுச் சாதனைகள் - II





# அறிவார்ந்த சிந்தனைகள்
# ஐந்தாண்டுச் சாதனைகள்

## தொகுப்பு - II


- மகளிர் உயர்வே மனித சமுதாயத்தின் உயர்வு — 98
- பழைய வரலாறு கொண்ட துறை; பயன் விளைக்கும் வருவாய்த்துறை — 105
- அரசின் செய்திகளை மக்களிடத்தில் எடுத்துச் செல்லும் செய்தித்துறை — 113
- தொழிலாளர் நலன் — 121
- கைத்தறி நெசவாளரின் காவலன் இந்த அரசு — 130
- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன் — 137
- அரசு அலுவலர் - ஆசிரியர்களின் பொற்காலம் இது — 145
- கடமை ஆற்றிட அரசு தரும் ஆக்கம் — 152
- தலைநகரில் தடைபடாத் தண்ணீர் விநியோகம் — 159
- வரிக்கொள்கை மற்றும் வணிக சமுதாய முன்னேற்றம் — 164
- எங்கெங்கு காணினும் திட்டங்கள் எண்ணிலடங்காச் சாதனைகள் — 169



**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2032

தை – மாசி

பிப்ரவரி 1–28, 2001

மலர் : 32 இதழ் : 15 & 16

விலை ரூ.10

**பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே
ஊமை என்று பெண்ணை உரைக்கு மட்டும்
உள்ளடங்கும் ஆமை நிலைமைதான்
ஆடவர்க்கும் உண்டு**

என்ற புரட்சிக் கவிஞரின் வாக்கினை நன்கு அறிந்துள்ள இந்த அரசு; வகுக்கும் திட்டங்கள் அனைத்திலும் மகளிர்க்கு முக்கியமான இடம் அளித்தே வருவதை அனைவரும் அறிவர். ஒவ்வொரு துறையிலும் சாதனை படைத்துள்ள இந்த அரசு மகளிருக்கு ஆற்றியுள்ள சாதனைப் பட்டியலையும் பார்ப்போம் :

## மகளிர் உயர்வே

## மனித சமுதாயத்தின் உயர்வு

பெற்றோர் சொத்தில் பெண்களுக்கு உரிமை வழங்கும் தனிச் சட்டத்தினை முன்னோடி மாநிலமாக 1989–ஆம் ஆண்டில் மே திங்கள் 6ஆம் நாள் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றிய கலைஞர் அரசு; மேலும் அடுக்கடுக்காக நிறைவேற்றிவரும் திட்டங்கள் மகளிர் சமுதாயத்தின் எழுச்சிக்கு வழி வகுத்துள்ளன. அது போலவே இந்த அரசு, ஊனமுற்றோரின் ஊன்றுகோலாகவும் திகழ்கிறது.

1996–க்குப்பின் மகளிர் முன்னேற்றத்திற்காகவும் நலிந்தோர் மற்றும் ஊனமுற்றோர்க்காகவும் அரசு ஆற்றியுள்ள பணிகள் விவரம் வருமாறு:

### திருமண உதவித் திட்டங்கள்

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்**

1989இல் அரசில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் தரப்பட்ட உதவித்தொகை ரூ.5,000; 1996இல் நிதியுதவி ரூ.10,000 என உயர்த்தப்பட்டது. முந்தைய அரசில் ஐந்தாண்டுகளில் ரூ.5,000/– வீதம் 53,229 மகளிருக்கு 26 கோடியே 61 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக 1996க்குப்பின் ரூ.10,000/– வீதம் 2 இலட்சத்து 28 ஆயிரத்து 593 ஏழைப் பெண்களுக்கு 228 கோடியே 59 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்**

1989இல் கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு உதவித்தொகை ரூ.5000 என்பது 1996இல் ரூ.10,000 என உயர்த்தப்பட்டதோடு மணமக்களில் ஒருவர் ஆதி திராவிடர் எனில் 2–10–1997 முதல் உதவித்தொகை ரூ. 20,000 என அதிகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1996க்குப்பின் 3,281 தம்பதியர்க்கு 4 கோடியே 72 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம்**

1975இல் அறிமுகம் செய்யப்பட்ட இத்திட்டத்திற்கான உதவித் தொகை 1989இல் ரூ.5,000 என்றும், 1997–98இல் ரூ.7000 என்றும், 1999–2000இல் ரூ.10 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டது. 1996க்குப்பின் 904 விதவைப் பெண்களுக்கு ரூ.66.88 இலட்சம் இத் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்**

1996–97இல் இத்திட்டத்திற்கு நிதியுதவி 2000 ரூபாய் என்றிருந்து 1997–98இல் ரூ.3000 என்றும், 1998–99இல் ரூ. 5000 என்றும், 1999–2000இல் ரூ.7,000 என்றும் படிப்படியே இந்த ஆட்சியில் உயர்த்தப்பட்டுள்ளது. 1996க்குப் பின் 452 மகளிர்க்கு ரூ.22.72 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப்படிப்பு திட்டம்**

1989–90இல் கலைஞர் அரசு அமைந்த போது குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் 12 ஆயிரத்திற்கு



உட்கொள்வதற்காக பேறு காலத்தின் முன் இரண்டு மாதங்களுக்கும், பின் இரண்டு மாதங்களுக்குமாக 4 மாதங்களுக்கு 50 ரூபாய் வீதம் மொத்தம் 200 ரூபாய் வழங்கப்பட்டது. 1998இல் இந்நிதியுதவி 500 ரூபாய் என உயர்த்தப்பட்டது. 1996 முதல் இதுவரை 7,33,731 கருவுற்ற மகளிர்க்கு 28 கோடியே 74 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், முந்தைய அரசு 5 ஆண்டுகளில் 1,95,883 மகளிர்க்கு 5 கோடியே 87 இலட்சத்து 65000 ரூபாய் மட்டுமே வழங்கியது.

குறைவாக உள்ள மாணவிகளுக்கு பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி வழங்க ஆணையிடப்பட்டது. மீண்டும் 1996இல் இந்த அரசு அமைந்தவுடன் ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாய் என்பது 24 ஆயிரம் ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ளது

**ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைகளின் மகள் திருமண உதவித் திட்டம்**

1990இல் நிதியுதவி ரூ.1000; 1996இல் நிதியுதவி ரூ.2000 என உயர்வு; 1997இல் ரூ.3000; 1998இல் ரூ.5000; 1999இல் ரூ.7,000 என உதவிநிதி உயர்த்தப்பட்டது. 1996க்குப்பின் 5,207 பெண்களுக்கு ரூ.2 கோடியே 44 இலட்சத்து 98,000 நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**சத்தியவாணி முத்து அம்மையார் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்**

ஆண்டுக்கு 4,000 தையல் இயந்திரம் என்பது 2000–2001இல் 5,500 என அதிகரித்ததோடு இதில் 500 தையல் இயந்திரத்தை ஊனமுற்றவர்களுக்கு வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. 1996க்குப்பின் 14,365 ஆதரவற்ற ஏழைப் பெண்களுக்கு 2 கோடியே 30 இலட்சத்து 3,000 ரூபாய் செலவில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம்**

1989ல் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. கருவுற்ற தாய்மார்கள் சத்துணவு

**சத்தியா அம்மையார் குழந்தைகள் காப்பகங்கள் திட்டம்**

வேலைக்குச் செல்கின்ற மகளிர் மற்றும் நோயுற்ற தாய்மார்களின் குழந்தைகளைப் பராமரித்திட 1996 வரை இருந்த குழந்தைகள் காப்பகங்கள் எண்ணிக்கை 37; 1996க்குப்பின் புதிதாக அரசினால் உருவாக்கப்பட்ட குழந்தைகள் காப்பகங்களின் எண்ணிக்கை 175; இதன் காரணமாக 96க்குப் பின் 17,700 குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர். பராமரிப்புச் செலவு 2 கோடியே 21 இலட்சத்து 1 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**சிவகாமி அம்மையார் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்**

ஆண் குழந்தை இன்றி இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் உள்ள வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் 40 வயதுக்குட்பட்ட தாய் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் ஒவ்வொரு குழந்தையின் பெயரிலும் 1500 ரூபாய் தமிழ்நாடு அரசு நிதி நிறுவனத்தில் 5 வருட காலத்திற்கு வைப்புத் தொகையாக வைக்கப்பட்டு, ஒவ்வொரு ஐந்தாண்டிலும் புதுப்பிக்கப்பட்டு அப்பெண் குழந்தைகளுக்கு 20 வயது முடியும்போது வட்டியுடன் பெற்றுக் கொள்ளலாம் என 97இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஒரே பெண் குழந்தையுடன் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் பெற்றோர்களுக்கு 3000 ரூபாய் 5 ஆண்டு காலத்திற்கு வைப்புத் தொகையாக வைக்கப்பட்டு ஒவ்வொரு ஐந்தாண்டுக்கும் புதுப்பிக்கப்பட்டு பெண் குழந்தைக்கு 20 வயது முடியும்போது வட்டியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

1996க்குப்பின் 1500 ரூபாய் வீதம் 1,15,895 பெண் குழந்தைகளுக்கும், 3000 ரூபாய் வீதம் 1,241 பெண் குழந்தைகளுக்கும் – ஆக மொத்தம் 1,17,136 பெண் குழந்தைகளுக்கும் 19 கோடியே 20 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியாக உருவாக்கப்பட்டுள்ளது.

**பங்காரு அம்மையார் மகளிர் குழுக்கள் திட்டம்**

கிராமப்புற ஏழை எளிய பெண்களை சமூக, பொருளாதார நிலைகளில் உயர்த்திடும் நோக்கில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியுதவியுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் 1989ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் கலைஞர் அரசினால் தொடங்கப்பட்டு தமிழகம் முழுவதும் படிப்படியாக செயல்படுத்தப்பட்டது. 1996ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றவுடன் தயாரித்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதித் திட்டம் முழுவதுமாக புதிதாக உருவாக்கப்பட்ட மகளிர் திட்டத்தோடு இணைக்கப்பட்டு எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1997–98இல் 14 மாவட்டங்களிலும், 1998–99இல் 7 மாவட்டங்களிலும், 1999–2000இல் 7 மாவட்டங்களிலும் என சென்னை நீங்கலாக 28 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 10 இலட்சத்து 6 ஆயிரத்து 969 மகளிர், 58,391 சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களாகச் சேர்க்கப் பட்டுள்ளனர்.

மகளிர் திட்டச் செயலாக்கத்தில் அரசு சார்பில்லாத தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் திட்டத்தின் வெற்றிக்கு ஆற்றி வரும் அரும்பணி பாராட்டிற்குரியது.

இவர்களில் 1,26,882 மகளிர்க்கு பல்வேறு தொழில்களைத் தொடங்கிட ரூ.73.25 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் இவர்களுக்கு வழங்கப் பட்ட வங்கிக்கடன் ரூ.28.43 கோடி; மானியம் ரூ.48.42 கோடி. இவர்களுடைய சேமிப்புத் தொகை மட்டும் ரூ.52.18 கோடி. இத்திட்டம், கிராமப்புறப் பெண்களை சமூக, பொருளாதார முன்னேற்றத்தை நோக்கி வழிநடத்திடும் ஒரு புரட்சிகரமான திட்டமாகும்.

சிறந்த முறையில் செயல்படும் சுயஉதவிக் குழுக்களுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கும் திட்டம் 1999–2000ஆம் ஆண்டுமுதல் செயல்படுத்தப் படுகிறது. 21 மாவட்டங்களில், 1999ஆம் ஆண்டில் சிறப்பாகச் செயல்பட்ட 63 சுயஉதவிக் குழுக்களுக்கும், 7 வட்டாரக்குழு கூட்டமைப்புக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

சிறந்த முதல் குழுவிற்கு ரூ.2,000/– என்றும், இரண்டாவது குழுவிற்கு ரூ.1,000/– என்றும், மூன்றாவது குழுவிற்கு ரூ.500/– என்றும், வட்டாரக் குழு கூட்டமைப்புக்கு ரூ.2,000/–என்றும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.



**ஊனமுற்றவர்களை மணந்துகொள்ளும் ஊனமற்றவர்களுக்கு ஊக்க நிதி**

காதுகேளாத, வாய்பேசாதவர்களை மணம் செய்துகொள்ளும் ஊனமற்றவர்களுக்கும்; ஒரு கை அல்லது கால் இழந்தோரை திருமணம் செய்து கொள்ளும் ஊனமற்றவர்களுக்கும் வழங்கப்படும் நிதியுதவி ரூ.5,000 என்பது ரூ. 7,000 என 2000–2001இல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்து வந்த பயனாளிகளின் எண்ணிக்கை 6,400 என்பது 11.07.2000 முதல் 7,400 ஆக

உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டுத் தொகை 1 கோடியே 33 இலட்சத்து 20,000 ரூபாய் ஆகும்.

உடல் ஊனமுற்றோருக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியத் தொகை 6.7.2000 முதல் ரூ.1000லிருந்து ரூ.2000 ஆக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 800லிருந்து 1000ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**நலிந்தோர் ? தவித்தொகை**

மாத ஒய்வூதியம் ரூ.100 என்பது, 1997இல் ரூ.150 ஆகவும், 2000இல் ரூ.200 ஆகவும் உயர்த்தப்பட்டதோடு பயனாளிகள் எண்ணிக்கைக்கு இருந்த உச்சவரம்பு 1997இல் ரத்து செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், முதியோர், நெசவாளர்கள், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஆதரவற்ற விதவையர், உடல் ஊனமுற்றோர்/ கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் போன்ற பிரிவினரில் 1996க்குப்பின் 9,53,719 பேர் பயன் பெற்றுள்ளனர்.

விதவைப் பெண்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட மகன் இருந்தாலும் முதியோர் உதவித்திட்டத்தின்கீழ் உதவித்தொகை வழங்கிட 2.6.1998 அன்று ஆணையிடப்பட்டது.

**விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல்களும், குறிப்பேடுகளும்**

ரூ.12,000த்திற்குள் ஆண்டு வருவாய் உள்ள விதவைப் பெண்களின் குழந்தைகள் அனைவருக்கும் இலவசப் பாடநூல்களும், குறிப்பேடுகளும் வழங்கப் படுகின்றன. 1996க்குப்பின் 54,852 குழந்தைகள் இத்திட்டத்தில் பயன்பெற்றுள்ளனர். இதற்கான செலவு 57.33 இலட்சம் ரூபாய்

**மகளிர் தொழில் முனைவோருக்கு நிதியுதவி**

முதல் தலைமுறையாக தொழில் முனையும் மகளிர் 250 பேருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை மானிய உதவி வழங்கும் திட்டம் 1996இல் அறிமுகம் செய்யப்பட்டு உதவிகள் வழங்கப்படுகின்றன.

**தொழில் மனை ஒதுக்கீட்டில் முன்னுரிமை**

தொழில் வளாகங்களில் – தொழில் மனை ஒதுக்கீட்டில் மகளிர் தொழில் முனைவோருக்கு முன்னுரிமை வழங்கும் திட்டம் 96 முதல் தொடங்கப்பட்டது.

**மீனவ மகளிருக்கு உதவிகள்**

மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மோட்டார் பொருத்திய 25 வாகனங்கள் இலவசமாக வழங்கப்பட்டு, மீனவ மகளிர் மீன் விற்பனைக்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

**உள்ளாட்சித் தேர்தல்களில் 33 விழுக்காடு இட ஒதுக்கீடு**

இந்தியாவிலேயே முதலாவதாக உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு தமிழகம் முழுவதிலும் 44,143 பெண்கள் உள்ளாட்சி நிர்வாகங்களில் தற்போது பதவி பெற்றுள்ளனர்.

**மகளிர் நடத்தும் நியாயவிலைக் கடைகள்**

1998இல் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம் முதலில் மதுரையிலும், பின்னர் பல பகுதிகளிலுமாக மொத்தம் 230 இடங்களில் முழுவதும் மகளிர் நடத்தும் நியாய விலைக் கடைகள் தொடங்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெறுகின்றன. மேலும் கூடுதலாக மகளிர் நடத்தும் நியாயவிலைக் கடைகள் திறக்க அரசு முடிவு செய்துள்ளது.

**மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம்**



1.1.1999இல் சென்னையில் அறிமுகம் செய்யப்பட்டு பின்னர் மற்ற மாநகராட்சிகளுக்கும் 2.5.1999 முதல் அனைத்து நகராட்சி, பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டுவரும் மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தின்கீழ் 535 மகளிர் குழுக்களுக்கு 2000ஆம் ஆண்டு அக்டோபர் வரை ரூ.2.33 கோடி கடன் வழங்கப் பட்டுள்ளது.

திருவள்ளூர், கோவை மாவட்டங்களில் கிராமப்புறங்களுக்கும் பரிட்சார்த்தமாக இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, அது பெற்றுவரும் வரவேற்பின் காரணமாக அனைத்து மாவட்டங்களின் கிராமப் புறங்களுக்கும் தற்போது விரிவு படுத்தப்பட்டுள்ளது.

தினசரி வழங்கப்படும் கடன் தொகை ரூ.100 முதல் ரூ.5000 வரை. இதுவரை பயன்பெற்ற மகளிர் 1.59 இலட்சம். வழங்கப்பட்டுள்ள கடன் தொகை 20.02 கோடி ரூபாய்.

**தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியைகள்**

இந்த அரசு வெளியிட்ட ஆணைகளின் மூலம் தொடக்கப் பள்ளிகளில் பெண்கள் அதிக அளவில் ஆசிரியைகளாக நியமனம் செய்யப்படுவதற்கு வழி ஏற்பட்டது. தற்போது பள்ளிகளில் பணிபுரியும் மொத்த ஆசிரியர்கள் 1,66,187 பேரில் ஆசிரியைகள் 98,291.

இந்த அரசு பிறப்பித்த ஆணையின்படி, அரசுப் பணிகளில் 30 விழுக்காடு பெண்களுக்கு ஒதுக்கீடு.

**காவல்துறையில் பெண்கள்**

காவல்துறையில் பெண்களை நியமனம் செய்யும் திட்டம் கலைஞர் அரசில் 1973இல் தொடங்கப் பட்டதின் காரணத்தால் தற்போது காவல் துறையில் பணி வாய்ப்புப் பெற்றுள்ள பெண்கள் 4,570 பேர்.

முந்தைய அரசு ஐந்து ஆண்டுகளில் நியமனம் செய்த பெண் காவலர்களின் எண்ணிக்கை 389 என்பதற்கு மாறாக 1996க்குப்பின் இதுவரை இந்த அரசு நியமனம் செய்த பெண் காவலர்களின் எண்ணிக்கை 3,636.

**ஆதரவற்ற விதவைப் பெண்கள் / கணவனால் கைவிடப்பட்டோர்க்கு நலிந்தோர் உதவித்தொகை**

1.6.1975–இல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் தற்போது எண்ணிக்கை வரம்பின்றி விதவைப் பெண்கள் எல்லோருக்கும் உதவித்தொகை வழங்கப் படுகிறது. 1996 முதல் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்ற விதவைப் பெண்கள் 3,86,149 பேர். 1996 முதல் இத்திட்டத்தின்கீழ் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் 63,566 பேர் பயன்பெற்றுள்ளனர்.

**டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

சத்துணவுத் திட்டத்தில் மட்டும் ஏறத்தாழ 2 இலட்சம் மகளிர் வேலை செய்கின்றனர்.

இத்திட்டத்தின்கீழ் சாப்பிடுபவர்களுக்கு 1989–90இல் 2 வாரங்களுக்கு ஒரு முட்டையும்; 1.6.1998 முதல் வாரம் ஒரு முட்டையும் வழங்க ஆணையிட்டது இந்த அரசு.

1995–96இல் சத்துணவுத் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 360 கோடி; 2000–2001இல் ரூ. 581 கோடி – கூடுதல் ஒதுக்கீடு ரூ.221 கோடி.

பள்ளிச் சத்துணவுப் பணியாளர்கள் பணியிலிருக்கும்போது இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு குழுக்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் (Group Insurance Scheme) குடும்ப நலநிதி வழங்க 7.11.1990 அன்று கலைஞர் அரசு ஆணையிட்டது;

ஆனால் முந்தைய அரசு இந்த ஆணையை 1994ஆம் ஆண்டில் நிறுத்தி வைத்ததன் காரணமாக இறந்துபோன சத்துணவுத் திட்டப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு குடும்ப நலநிதி வழங்கப் படாமலேயே இருந்தது.

1996ல் கலைஞர் அரசு மீண்டும் அமைந்த பிறகு இந்த ஆணையை மீண்டும் செயல்படுத்தியதுடன் முந்தைய ஆட்சி காலத்தில் இறந்துபோன சத்துணவுத் திட்டப் பணியாளர்களின் குடும்பங்களுக்கும் குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்கிட ஆணையிடப்பட்டது.

சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரப் பகுதி நேரப் பணியாளர்கள் (Permanent part time employees) என்று 16.4.1989இல் ஆணையிட்ட இந்த அரசு சத்துணவுப் பணியாளர்களுக்கு சிறப்பு சேம நல நிதித் திட்டத்தையும் (Special Provident Fund) 25.4.1998 முதல் விரிவுபடுத்தியது.

சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள் நிலை–1 மற்றும் நிலை–2, ஊட்டச்சத்து பணியாளர்கள் ஆகியோருக்கு ரூ.200–5–250–10–400 என வழங்கப்பட்ட ஊதியத்தினை ஆண்டுக்கு ரூ. 140 கோடி செலவில் 1.1.1996 முதல் ரூ.600–10–700–20–1100 என உயர்த்தி, புதிய ஊதிய விகிதத்தை வழங்கி, குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் ரூ.840, அகவிலைப்படி ரூ.319 சேர்த்து ரூ.1159 என நிர்ணயித்து வழங்கப்படுகிறது.

அதே போல சமையலர்களுக்கு மாதம் ரூ. 175 வீதம் வழங்கப்பட்ட மதிப்பூதியம் 1.1.96 முதல் ரூ.450/– எனவும், உதவியாளர்களுக்கு மாதம் ரூ. 125 வீதம் வழங்கப்பட்ட மதிப்பூதியம் 1.1.96 முதல் ரூ.400/– எனவும் உயர்த்தி 25.4.98 அன்று ஆணையிடப்பட்டது. தற்சமயம் இது ரூ.610 மற்றும் ரூ.450 என வழங்கப்படுகிறது.

சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர், உதவியாளர்கள் ஒய்வு பெறும் வயது 55 என்பது 58 ஆக உயர்த்தி 25.4.98 அன்று ஆணையிடப்பட்டது.

சத்துணவுப் பணியாளர்கள் பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால் சத்துணவுப் பணியாளர்களுக்கு கோடை விடுமுறை காலத்திற்கும் ஊதியம் வழங்கப்படும் என 27.6.1998 அன்று சத்துணவு ஊழியர் மாநாட்டில் முதல்வர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் சமையலர், உதவியாளர்கள் ஆகியோர் பணிக் காலத்தில் இறக்க நேர்ந்தால் அவர்களுடைய வாரிசுகளுக்கும் கருணை அடிப்படையில் வேலை வழங்கப்படும் என 27.6.1998 அன்று சத்துணவு ஊழியர் மாநாட்டில் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் சத்துணவு மானியம் 13 காசுகள் என்பது 18 காசுகளாக 23.12.1996 அன்று உயர்த்தப்பட்டது.

தற்போது 18 காசுகள் என்பது 23 காசுகளாக உயர்த்தப்படுமென நிதிநிலை அறிக்கையில் (2000–2001) அறிவிக்கப்பட்டு, உயர்த்தப்பட்டுள்ளது.

சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் உலக வங்கி உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்–3 ஆகிய மூவகைத் திட்டங்களில் உள்ள அமைப்பாளர், சமையலர் மற்றும் உதவியாளர் நிலையில் உள்ள எல்லா சத்துணவுப் பணியாளர் களையும் அஞ்சலகத் துறையின் கீழ் உள்ள பொதுமக்கள் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் சேர்க்க 29.9.2000இல் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

### வட்டார பயிற்சி மையம் மற்றும் கிடங்குக் கட்டடம் (Block Resource Centre and Godown)

மத்திய அரசு 159 வட்டாரப் பயிற்சி மையம் மற்றும் கிடங்குக் கட்டடம், கட்ட தலா ரூ.5 இலட்சம் செலவில் அனுமதியளித்துள்ளது. இதில் 60 கட்டடங்கள் கட்ட அரசு ஆணை (டி) எண்.10, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 4.2.2000 மூலம் பெறப்பட்டு மாவட்ட கட்டிட மையத்தின் மூலம் கட்டடங்கள் கட்ட வேலை தொடங்கப்பட்டுள்ளது.

### அங்கன்வாடி மையங்கள்

அரசுக் கட்டடம் இல்லாத 82 அங்கன்வாடி மையங்களுக்கு கட்டடங்கள் கட்ட 5.10.2000 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டிற்குள் கட்டி முடிக்கப்படும்.

### அங்கன்வாடி மையங்கள் பழுது பார்த்தல்

அரசுக் கட்டடங்களில் இயங்கும் 15,139 அங்கன்வாடி மையங்களில் 10,000 மையங்களுக்கு தலா ரூ.7000/– வீதம் மூன்றாண்டுகளில் பழுது பார்க்க 1.3.2000 ஆணையின்படி, 6,250 மையங்கள் ரூ.437.50 லட்சம் செலவில் பழுதுபார்க்க ஆணை வழங்கப்பட்டு, அத்தொகை மாவட்ட ஆட்சியாளர்

களுக்கு வழங்கப்பட்டு, பழுது பார்க்கும் பணி அந்தந்த மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டுள்ளது. மீதமுள்ள 3,750 மையங்களின் கட்டடங்களும் அடுத்த ஆண்டில் பழுதுபார்க்கப்படும்.

சத்துணவுத் திட்டத்துறையில் சிறப்பாகப் பணியாற்றிய 5 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25,000 பரிசு வழங்க 10.7.2000 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது. உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3வது திட்டத்தின்கீழ் 1999–2000 ஆம். ஆண்டில் சிறப்பாகப் பணியாற்றிய 4 அங்கன் வாடிப் பணியாளர்களுக்கும் பரிசு வழங்கப்படவுள்ளது.

சத்துணவுத் திட்டத்துறையில் சிறப்பாகப் பணியாற்றிய 100 அங்கன்வாடிப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.2,500/– வீதம் பரிசு



வழங்க 10.7.2000 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1999–2000ஆம் ஆண்டில் சிறப்பாகப் பணியாற்றிய 74 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கும் தலா ரூ.2,500/– வீதம் பரிசு வழங்கப்படவுள்ளது.

1999–2000 ஆண்டிற்கு சிறப்பாகப் பணியாற்றிய மாவட்ட/வட்டார அளவில் பணியாற்றும் மண்டல ஊட்டச்சத்துத் திட்ட அலுவலர்களுக்கு ரூ.4,000/–மும், பயிற்றுநர்களுக்கு ரூ.500/–ம், மேற்பார்வையாளர் களுக்கு ரூ.500/–ம், குழந்தை நல அமைப்பாளர் களுக்கு ரூ.300/–ம் மற்றும் உதவியாளர்களுக்கு ரூ.240/–ம் (மொத்தம் 1005 நபர்களுக்கு) மொத்தம் ரூ.3 இலட்சத்திற்கு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்க 9.3.2000 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

**சமூகப்பாதுகாப்புத் துறை**

ஆதரவற்ற மற்றும் புறக்கணிக்கப்பட்ட சிறார்களுக்கு அரசு சாரா நிறுவனங்கள் மூலம் இளைஞர் இல்லம் தொடங்குதல்.

1999–2000 ஆம் ஆண்டில் இளைஞர் இல்லங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு பராமரிப்பு மானியத் தொகை (ரூ.90 மற்றும் ரூ.135லிருந்து) மாதம் ஒன்றுக்கு ரூ.200 என உயர்த்தி வழங்கப்பட்டது. செலவினம் ரூ.20 இலட்சம். பயன்பெற்றோர் 1000 இல்லவாசிகள்.

1999–2000 ஆம் ஆண்டில் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையினை ரூ.30லிருந்து ரூ.50 எனவும், ரூ.50லிருந்து ரூ.70 எனவும் உயர்த்தப் பட்டது. செலவு ரூ.1.14 இலட்சம். பயன்பெறுவோர் 150 இல்லவாசிகள்.

1999ஆம் ஆண்டு முதல் குடும்ப உதவித் திட்டத்தின் கீழ் பெற்றோர் வசம் ஒப்படைக்கப்படும் சிறார்களின் பராமரிப்பிற்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப் பட்ட ஊக்கத் தொகை ரூ.100 என்பது ரூ.200 என உயர்த்தி வழங்கப்பட்டது. செலவினம் ரூ.1.20 இலட்சம். பயன்பெறுவோர் 1000 சிறார்கள்.

சாலையோரச் சிறார்களுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் புகலிடங்கள் அமைத்தல்.

1995–96 ஆண்டிலிருந்து அரசு சாரா நிறுவனங்கள் எண்ணிக்கை 6; 1997–98ஆம் ஆண்டில் கூடுதலாக 10 புகலிடங்கள் தொடங்கப்பட்டன. செலவினம் ரூ.6.55 இலட்சம். பயன்பெறுவோர் 5,000 சிறார்கள்.

• • •

# பழைய வரலாறு கொண்ட துறை; பயன் விளைக்கும் வருவாய்த்துறை!

நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டதும், அரசு நிர்வாகத்தின் எல்லாத் துறைகளுக்கும் தாய்த் துறையாக, தலைமைத் துறையாக விளங்கி வருவதுமான வருவாய்த் துறையின் மூலம் இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் அரசு தமிழ்நாட்டு மக்களுக்காக நிகழ்த்தியுள்ள சாதனைகள் பின்வருமாறு :

**வருவாய்த் துறை வரலாற்றுச் சுருக்கம்**

வருவாய்த் துறை வாரியம் (Board of Revenue) என்ற அமைப்பு 1786 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அப்பொழுது கிழக்கிந்தியக் கம்பெனியின் அனுபவம்மிக்க சிவில் பணியாளர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எனப் பெயர் சூட்டப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொறுப்பாக அமர்த்தப் பட்டனர். தகவல் தொடர்பு வசதிகள் மிகவும் குறைவாக இருந்த அந்தக் கால கட்டத்தில், சட்டம்-ஒழுங்கு, நிலவரி வசூலித்தல், பொதுச்சட்டங்களை செயல் படுத்துதல் போன்ற உள்நாட்டு நிர்வாகம் தொடர்பான அதிகாரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டு இருந்தன. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பணிகளை வருவாய்த் துறை வாரியம் முறைப்படுத்தி, மேற்பார்வையிட்டு வந்தது.



வருவாய்க் கிராமம் (Revenue Village), தாலுக்கா, வருவாய்க் கோட்டம் (Revenue Division), மாவட்டம் என்கிற அமைப்பெல்லாம் பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்கத்திலேயே உருவானவை. அப்பொழுது நில வருவாய் (Land Revenue) மட்டுமே மாநில நிதிநிலையின் ஊற்றுக் கண்ணாக இருந்தது. வருவாய்த் துறையின் வாரியமும், மாவட்ட ஆட்சியாளர்களும் நிலவரி வசூலுக்குப் பொறுப் பாக்கப்பட்டு இருந்தனர்.

**தொடர்ந்து வரும் கலைஞர் அரசின் சாதனைகள்**

கலைஞர் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் போதெல்லாம் ஆற்றிவரும் பணிகள், வருவாய்த் துறையின் சரித்திரத்தில் சாதனை அத்தியாயங்களாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. எண்ணிலடங்காச்

சாதனைகள் எனினும், ஒருசில எண்ணியெண்ணிப் பெருமை கொள்ளத்தக்கவை. அவைகளில் சில :-

### புஞ்சை நிலவரி ரத்து

1967ஆம் ஆண்டு அண்ணா தலைமையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், அரசு செய்த முதல் காரியங்களில் ஒன்று, அதுவரை புன்செய் நிலங்களின் மீது விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு வந்த அடிப்படைத் தீர்வையை ரத்து செய்ததுதான்.

### மனுநீதித் திட்டம்

கிராமங்களில் வாழும் ஏழை, எளிய, நலிந்த பிரிவினர் தங்கள் குறைகளைத் தெரிவிக்க அலுவலர்களைத் தேடிச் சென்று காத்திருக்க வேண்டியிருந்த நிலைமையை மாற்றி, அதிகாரிகள் மக்களைத் தேடிச் சென்று, மனுக்களைப் பெற்று, குறைகளை முடிந்த அளவில் அங்கேயே உடனுக்குடன் தீர்த்து வைத்திட மாபெரும் பொதுமக்கள் தொடர்புத் திட்டமான "மனுநீதித் திட்டம்" **15.9.1969** முதல் கலைஞர் அரசில் செயல்படுத்தப்பட்டது. இந்த மனுநீதித் திட்டப்படி **15.9.1969** முதல் **30.9.1974** வரை ஐந்தாண்டு காலத்தில் **8** இலட்சத்து **35** ஆயிரத்து **34** மனுக்கள் பெறப்பட்டு, **7** இலட்சத்து **70** ஆயிரத்து **616** மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு, மக்கள் குறைகளைத் தீர்த்த அளவு என்பது **92.2** சதவீதம் என்ற சாதனை படைக்கப்பட்டது.

தற்பொழுது நான்காவது முறையாக கலைஞர் அரசு பொறுப்பேற்ற **1996**, மே மாதத்திற்குப் பிறகு, **2000**ஆம் ஆண்டு நவம்பர் வரை மனுநீதித் திட்டத்தின்கீழ் **11** இலட்சத்து **5** ஆயிரத்து **961** மனுக்கள் பெறப்பட்டு, **5** இலட்சத்து **42** ஆயிரத்து **607** மனுக்களில் இருந்த கோரிக்கைகள் ஏற்கப்பட்டன; **4** இலட்சத்து **31** ஆயிரத்து **187** மனுக்களில் இருந்த கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன; ஆக மொத்தம் **9** இலட்சத்து **73** ஆயிரத்து **794** மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

### நிலச் சீர்திருத்தம்

சமுதாய ஏற்றத்தாழ்வுகளைப் போக்க நில உடைமைகளுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து, மிகை நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கி, உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டும் என்ற நோக்கத்தோடு, நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. **1970**ஆம் ஆண்டு உச்சவரம்பு **15** ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று திடீரென்று அறிவித்து சட்டம் இயற்றப்பட்டது. இதன் விளைவாக முந்தைய ஆட்சியில் **19** ஆயிரத்து **20** ஏக்கர் நிலம் மட்டுமே உபரியாக அறிவிக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, கலைஞர் அரசு நிறைவேற்றிய சட்டத்தின் காரணமாகத்தான், ஒரு இலட்சத்து **78** ஆயிரத்து **880** ஏக்கர் நிலம் உபரி நிலம் என்று கைப்பற்றப்பட்டு தகுதியுள்ள, நிலமற்ற ஒரு இலட்சத்து **37** ஆயிரத்து **236** ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அதில், **61** ஆயிரத்து **985** பேர் ஆதிதிராவிடர்கள்; **204** பேர் பழங்குடியினர்.

### குடியிருப்பு உரிமைச் சட்டம்

**1971**ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதன் முறையாக "குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டத்தை" கொண்டுவந்து, விவசாயத் தொழிலாளர்களுக்கு, அவர்கள் குடியிருக்கும் வீட்டுமனைகள் அவர்களுக்கே சொந்தமாக்கப் பட்டன.

### நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன்
### (Administrative Reforms Commission)

மக்களுக்காக அரசு செய்திடும் பணிகளை விரைவாகவும், முழுமையாகவும் ஆற்றிடவும், அரசுத் துறைகளின் செயல்பாடுகளை வரையறை செய்திடவும், வருவாய்த் துறை உள்ளிட்ட அரசுத் துறைகளை விரிவாக ஆய்வு செய்து, பரிந்துரைகளைச் செய்யவும், வருவாய்த் துறை வாரியத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்யவும், **1973**ஆம் ஆண்டில் டி.ஏ.வர்கீஸ் அவர்களைத் தலைவராகவும், கே.எஸ்.சிவசுப்பிரமணியன், வி.கார்த்திகேயன், ஏ.ஆர்.சுப்பையா முதலியார், வி.கிருஷ்ணசுவாமி ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் அமைக்கப்பட்டது. கமிஷன் அளித்த பரிந்துரைகளில் பெரும்பாலானவற்றை அரசு ஏற்று உடனடியாகச் செயல்படுத்தியது. வருவாய்த் துறை வாரியத்தைக் கலைக்க வேண்டுமென்ற நீண்ட நாள் எண்ணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து கமிஷன் செய்த பரிந்துரையை ஏற்று வருவாய்த் துறை வாரியம் கலைக்கப்படாமல், தொடர்ந்து பணியாற்ற கலைஞர் அரசில் முடிவெடுக்கப்பட்டது என்பதும், வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க இந்த வருவாய்த் துறை வாரியம் பின்னர் **1980**ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது என்பதும், கடந்த காலத்தின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும்.

முன்னாள் தலைமைச் செயலாளர் திரு.பி. சபாநாயகம் அவர்கள் தலைமையில் வருவாய்

நிர்வாகச் சீர்திருத்தக் குழு 1996இல் அமைக்கப்பட்டு அக்குழு செய்த 99 பரிந்துரைகள் ஏற்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

#### புதிய நிர்வாக அமைப்புகள்

நீண்ட காலத்திற்குப் பிறகு, மாவட்ட எல்லைகளை மாற்றி அமைத்து, புதிய மாவட்டங்களை அமைக்கும் முயற்சி தொடங்கப்பட்டது. 14.1.1974 அன்று புதுக்கோட்டை மாவட்டம் அமைக்கப்பட்டது. 1989–91 காலகட்டத்தில் திருவண்ணாமலை, நாகப்பட்டினம் ஆகிய இரண்டு மாவட்டங்களும், வேலூர் வருவாய்க் கோட்டமும், பரமத்தி வேலூர் வருவாய் வட்டமும் புதியதாக உருவாக்கப்பட்டன. 1996க்குப் பின்னர் நாமக்கல், திருவள்ளூர், தேனி, திருவாரூர் ஆகிய 4 மாவட்டங்களும், திருச்செங்கோடு, மதுராந்தகம், திருத்தணி, பொன்னேரி, உத்தமபாளையம், திருவாரூர், குளித்தலை, ஆத்தூர் ஆகிய 8 வருவாய்க் கோட்டங்களும், எடப்பாடி, கங்கவள்ளி, தாம்பரம், திருக்கழுக்குன்றம், பூவிருந்தவல்லி, அம்பத்தூர், தேனி, போடிநாயக்கனூர், கீழ்வேளூர், மணச்சநல்லூர், கிருஷ்ணராயபுரம், வேப்பந்தட்டை, குந்தா, பந்தலூர், எட்டயபுரம், திருக்குவளை, வாழப்பாடி, மணமேல்குடி, இலுப்பூர், ஆலங்குளம், வீரகேரளம்புதூர், காட்பாடி, காரியாப்பட்டி, தொட்டியம் ஆகிய 24 வருவாய் வட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. பெரம்பலூர் மாவட்டத்தைப் பிரித்து, அரியலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய அரியலூர் மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இஃதன்னியில், 11 புதிய பிர்க்காக்களும் உருவாக்கப் பட்டுள்ளன. மேலும், இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், சருகனி உள்வட்டத்தில் (பிர்க்கா) 22 கிராமங்களும், ஆனந்தூர் உள்வட்டத்தில் ஒரு கிராமமும் 1.9.1998 முதல் சிவகங்கை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன.

#### வருவாய்த் துறைக் கட்டடங்கள்

1991 முதல் 1996 வரை கடந்த ஆட்சிக் காலத்தில் வருவாய்த் துறை அலுவலகங்கள் கட்ட 10 கோடியே 12 இலட்சம் ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டது. ஆனால், இந்த ஆட்சியில் 1996க்குப் பின்னர், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் தூத்துக்குடியில் 4 கோடி ரூபாய்ச் செலவிலும், சென்னையில் 9 கோடி ரூபாய்ச் செலவிலும், விழுப்புரத்தில் 4 கோடியே 3 இலட்சம் ரூபாய்ச் செலவிலும், திருவண்ணாமலையில் 5 கோடியே 77 இலட்சம் ரூபாய்ச் செலவிலும், நாமக்கல்லில் 6 கோடியே 14 இலட்சம் ரூபாய்ச் செலவிலும், கரூரில் 6 கோடியே 16 இலட்சம் ரூபாய்ச் செலவிலும், திருவாரூரில் 6 கோடியே 93 இலட்சம் ரூபாய்ச் செலவிலும், நாகப்பட்டினத்தில் 6 கோடியே 49 இலட்சம் ரூபாய்ச் செலவிலும், திருவள்ளூரில் 5 கோடியே 61 இலட்சம் ரூபாய்ச் செலவிலும் திராவிட கட்டடக் கலையம்சங்களை அடிப்படையாகக் கொண்டு, கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன; தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 5 கோடியே 94 இலட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டு விரைவில் திறந்து வைக்கப்பட உள்ளது. ஆக, 10 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் 60 கோடியே 7 இலட்சம் ரூபாய்ச் செலவில் இதுவரை கட்டப்பட்டுள்ளன. அத்துடன், 15 கோடியே 34 இலட்சம் ரூபாய்ச் செலவில் 11 வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களும், 13 வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன. ஒரு கோடியே 7 இலட்சம் ரூபாய்ச் செலவில் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கான குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன; 38 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய்ச் செலவில் வருவாய்த் துறை அலுவலகங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தைத் தொழில் மயமாக்கிட தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்திட புதிய சட்ட முன்வடிவு ஒன்று நிறைவேற்றப்பட்டு 14–3–2000 அன்று குடியரசு தலைவரின் ஒப்புதலையும் பெற்று 23–3–2000 அன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

#### வருவாய்த்துறைக்கு வாகனங்கள்

கடந்த ஆட்சியில் வருவாய்த் துறைக்கு 3 கோடியே 39 இலட்சம் ரூபாய்ச் செலவில், 129 வாகனங்களே வழங்கப்பட்டன என்பதற்கு மாறாக, கலைஞர் ஆட்சியில் இந்த நான்கரை ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே 7 கோடியே 83 இலட்சம் ரூபாய்ச் செலவில் 196 ஜீப்புகளும், 60 கார்களும் வழங்கப்பட்டன.

#### வீட்டுமனை ஒப்படை

சமுதாயத்தில் பொருளாதார ரீதியாக நலிவுற்றவர்களை முன்னேற்றுவதற்கு அவர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டும் என்பது இந்த அரசு தொடர்ந்து பின்பற்றி வரும் குறிக்கோளாகும். ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக உள்ள குடும்பங்களுக்கு இலவசமாக வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டு வந்ததை மாற்றி, அதிக

எண்ணிக்கையிலான ஏழை எளியோர் பயன்பெற வேண்டும் என்பதற்காக, தற்பொழுது **31.5.2000** முதல் அந்த ஆண்டு வருமானம் நகர்ப் புறங்களில் **24** ஆயிரம் ரூபாய் என்றும், கிராமப் புறங்களில் **16** ஆயிரம் ரூபாய் என்றும் உயர்த்தப்பட்டுள்ளது. **1996** ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு **2000** ஆம் ஆண்டு செப்டம்பர் வரை **7** இலட்சத்து **51** ஆயிரத்து **235** வீட்டுமனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்கப் பட்டுள்ளன; இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்களில் **2** இலட்சத்து **44** ஆயிரத்து **879** பேர் ஆதிதிராவிடர்கள்; **8** ஆயிரத்து **654** பேர் பழங்குடியினர்; **4** இலட்சத்து **97** ஆயிரத்து **702** பேர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் உள்ளிட்ட ஏனையோர்.



மேலும், அரசுக்குத் தேவைப்படாத புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டிக் குடியிருந்து வருபவர்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்வது பற்றி பரிசீலித்துப் பரிந்துரை செய்ய **5.2.2000** அன்று ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், நீர்வழிப் புறம்போக்கு நிலங்கள், மேய்ச்சல், மந்தைவெளி, மயானம், பாட்டை என வகைப்பாடு செய்யப்பட்ட அரசு நிலங்கள், தற்போது அத்தகைய உபயோகத்தில் இல்லாமல் நத்தமாக இருந்து, அதில் **10** ஆண்டுகளுக்கு மேலாக வீடுகளைக் கட்டி குடியிருப்பவர்களுக்கு, அந்த நிலங்கள் அரசின் உபயோகத்திற்குத் தேவையில்லை யெனில், அத்தகைய குடியிருப்புகளை பட்டா வழங்கி முறைப்படுத்தலாம் என **27.3.2000** அன்று ஆணையிடப்பட்டது. இதுகாறும் தமிழகத்தில் அமல் படுத்தப்படாத இந்தச் சிறப்புத் திட்டத்தின்கீழ் **30.11.2000** வரை ஒரு இலட்சத்து **63** ஆயிரத்து **348** வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தால் **41** ஆயிரத்து **159** ஆதிதிராவிடர் வகுப்பினர்; **3** ஆயிரத்து **488** பழங்குடியினர்; **50** ஆயிரத்து **233** மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்; **64** ஆயிரத்து **734** பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்; **3** ஆயிரத்து **734** இதர பிரிவினர் குடும்பங்கள் பலனடைந்துள்ளன.

### இலவசமாக விவசாய நிலம் ஒப்படை

நிலமற்ற ஏழைகளுக்கு இலவசமாக விவசாய நிலம் ஒப்படை செய்யும் திட்டத்தின்கீழ், **1996** ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு **2000** ஆம் ஆண்டு செப்டம்பர் வரை ஆதிதிராவிடர்களுக்கு **13** ஆயிரத்து **753** பட்டாக்கள், பழங்குடியினருக்கு **529** பட்டாக்கள், ஏனைய பிரிவினருக்கு **38** ஆயிரத்து **510** பட்டாக்கள் என்று மொத்தம் **35** ஆயிரத்து **696** ஏக்கர் பரப்பளவுக்கு **52** ஆயிரத்து **792** விவசாய நிலப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் **29** ஆயிரத்து **591** நிலப்பட்டாக்களே வழங்கப்பட்டன.

மேலும், **1996**க்குப் பின்னர், **30.11.2000** வரை நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் **12** ஆயிரத்து **43** ஏக்கர் விவசாய நிலம், **9** ஆயிரத்து **426** பேருக்கு ஒப்படை செய்யப்பட்டது.

### தண்ணீர்த் தீர்வையில் புதியமுறை

கீழ்பவானி பாசனத் திட்டத்தின்கீழ், தண்டத் தீர்வைக்குப் பதிலாக, ஏக்கர்வாரியாக தீர்வை நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகவே இருந்து வந்தது. கீழ்பவானி பாசனத் திட்டத்தில் பருவகால சுழற்சிமுறை நீர்ப்பாசனத் திட்டம் (Seasonal Sluice Turn Sys-

tem.) நடைமுறைப்படுத்தப்பட்டு, இருபோக விவசாயத்திற்கு 36 டி.எம்.சி. தண்ணீர், 75 ஆயிரம் ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களுக்கு வழங்கப்படுகிறது. இரண்டாம் போகத்தில் தடை செய்யப்பட்டுள்ள நஞ்சைப் பயிர்களை பயிரிட்டால் தண்டத்தீர்வையாக முதல்முறை ஐந்து மடங்கு சாதாரண தண்ணீர்த் தீர்வை என்று தொடங்கி, நான்காவது முறை மற்றும் அதற்குப் பிறகு இருபது மடங்கு சாதாரண தண்ணீர்த் தீர்வை என்று தண்டத் தீர்வைகள் வசூல் செய்யப்பட்டு வந்தன. இதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளை ஆய்வு செய்து, தீர்வு காண அமைக்கப்பட்ட குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், கீழ்பவானி பாசன ஆயக்கட்டு நிலங்களுக்கு தண்ணீர்த் தீர்வை விதிக்கும்போது, பயிர் வகையை அடிப்படையாகக் கொள்ளாமல், இனி நிலத்தின் பரப்பளவு, அதாவது ஏக்கர் அடிப்படையில் ஒரேமாதிரியான தண்ணீர்த் தீர்வையினை (Flat Rate) விதிக்க 21.11.2000 அன்று ஆணை வெளியிடப்பட்டது. அரசின் இந்த முடிவினால், கீழ்பவானி ஆயக்கட்டுதாரர்கள் நீண்டகாலமாக எதிர்கொண்டு வந்த பிரச்சினைக்கு நல்ல தீர்வு ஏற்பட்டுள்ளது.

நீர்ப்பாசன மேம்பாட்டு வரிவிதிப்பில் இருந்து விலக்களிக்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பாசனத் திட்டப் பணிகளின் மதிப்பீட்டு உச்சவரம்பை, ஒன்றரை இலட்சம் ரூபாயில் இருந்து, 25 இலட்சம் ரூபாயாக உயர்த்துவதற்கு, 1955ஆம் ஆண்டின் தமிழ்நாடு நீர்ப்பாசன மேம்பாட்டு வரிவிதிப்புச் சட்டம் 11.11.2000 அன்று திருத்தப்பட்டது.

**நிவாரண உதவி உயர்வு**

இயற்கை இடர்ப்பாடுகளின் (Natural calamities) காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவியாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வந்ததை, 16.10.1996 முதல் 15 ஆயிரம் ரூபாய் என்று இந்த அரசு உயர்த்தியது. இயற்கைச் சீற்றங்களினால் முழுவதுமாக சேதமடைந்த குடிசைகளுக்கு, தலா 500 ரூபாய் என்று வழங்கப்பட்டு வந்ததை 1000 ரூபாயாகவும், பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு தலா 250 ரூபாய் என்று இருந்ததை 500 ரூபாயாகவும் உயர்த்தி 22.6.1996 முதல் அரசு வழங்கி வருகிறது. மேலும், இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் மனித உயிரிழப்புக்கு வழங்கப்படும் நிவாரணம் போன்றே, இயற்கைச் சீற்றங்களினால் உயிரிழக்கும் கால்நடைகளுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற முடிவு கலைஞர் அரசால் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டு, பசு, எருது, எருமைக்கு தலா 5000 ரூபாய், பசு மற்றும் எருமைக்கன்றுக்கு தலா 3000 ரூபாய், செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டுக்கு தலா 1000 ரூபாய் என்று 12.6.1996 முதல் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. 1996ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1999ஆம் ஆண்டு வரை புயல் மற்றும் மழையினால் ஏற்பட்ட சேதங்களைச் சீர் செய்ய நிவாரணப் பணிகளுக்காக மட்டும் 342 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதைப் போலவே, 1996ஆம் ஆண்டு முதல் இதுவரை வறட்சியினால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக மட்டும் 138 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

29.11.2000 அன்று வீசிய புயலாலும், பெய்த கன மழையாலும் ஏற்பட்ட சேதாரங்களின் நிவாரணப் பணிகளுக்காக, 14.12.2000 அன்று 8 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

புயல், மழையின்போது பாதிப்புக்குள்ளாகும் ஏழை எளிய மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்காக கடலோர மாவட்டங்களில் அமைந்துள்ள 91 மையங்களைச் செப்பனிட, 87 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டது.

இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்படும் ஏழை எளியோருக்கு உதவிட அரசின் அனுமதி கிடைக்கும் வரை காத்திராமல், உடனடியாக நிவாரணம் வழங்குவதற்காக வருவாய்த் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிதி உச்சவரம்பு 1999ஆம் ஆண்டு முதல், வருவாய் நிர்வாக ஆணையாளருக்கு 20 இலட்சம் ரூபாயில் இருந்து 50 இலட்சம் ரூபாயாகவும், மாவட்ட ஆட்சியருக்கு 10 இலட்சம் ரூபாயில் இருந்து 20 இலட்சம் ரூபாயாகவும், வருவாய்க் கோட்ட ஆட்சியருக்கு 2 இலட்சம் ரூபாயில் இருந்து 3 இலட்சம் ரூபாயாகவும், வருவாய் வட்டாட்சியருக்கு 1 இலட்சம் ரூபாயில் இருந்து 2 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.

**விபத்து நிவாரணத் திட்டம்**

ஏழைத் தொழிலாளர்கள் தாம் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது, விபத்தினால் இறக்க நேரிட்டால் அல்லது காயங்களினால் அங்கங்களை இழக்க நேரிட்டால், அவர்களது குடும்பங்களுக்கு விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் நிவாரண உதவி வழங்கப்படுகிறது. விபத்தில் பாதிக்கப்பட்டு, உயிரிழப்போர் குடும்பத்திற்கு நிவாரணமாக

10 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை, 28.8.1996 முதல் 15 ஆயிரமாக உயர்த்தப்பட்டது. விபத்தில் உடல் ஊனமுற்றால், ஊனத்தின் தன்மைக்கு ஏற்றவாறு 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை, 27.10.1999 முதல் 7 ஆயிரத்து 500 ரூபாய் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1996ஆம் ஆண்டிற்குப்பின் 30.11.2000 வரை 6,064 குடும்பங்களுக்கு மொத்தம் 7 கோடியே 17 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டது.

தீ விபத்தில் மனித உயிரிழப்பு ஏற்படும்போது, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு கடந்த கால ஆட்சியில் நிவாரண உதவி 10 ஆயிரம் ரூபாய் மட்டுமே என்பது, 16.10.1996 முதல் 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், தீ விபத்தின் காரணமாக முழுமையாகச் சேதமடையும் குடிசைகளுக்கு தலா 600 ரூபாயும், பகுதியாகச் சேதமடையும் குடிசைகளுக்கு தலா 300 ரூபாயும்; மற்ற மாவட்டங்களைப் பொறுத்தவரை முழுமையாகச் சேதமடையும் குடிசைகளுக்கு தலா 500 ரூபாயும், பகுதியாகச் சேதமடையும் குடிசைகளுக்கு தலா 250 ரூபாயும் கடந்த கால ஆட்சியில் வழங்கப்பட்டு வந்தது. சென்னை மாநகரிலும், மற்ற மாவட்டங்களிலும் நிவாரண உதவி வழங்குவதில் முன்பிருந்த பாகுபாட்டை அகற்றி, 22.6.1996 முதல் தீ விபத்தால் முழுமையாகச் சேதமடையும் குடிசைகளுக்கு தலா 1000 ரூபாய், பகுதியாகச் சேதமடையும் குடிசைகளுக்கு தலா 500 ரூபாய் என உயர்த்தி நிவாரண உதவியாக வழங்கப்பட்டு வருகிறது. இயற்கைச் சீற்றங்களினால் உயிரிழக்கும் கால்நடைகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க முதல்முதலாக முடிவு மேற்கொள்ளப்பட்டதைப் போலவே, தீ விபத்தில் இறந்து போகும் கால்நடைகளுக்கும் இழப்பீட்டுத் தொகை 12.6.1996 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**நலிந்தோர் குடும்பநலத் திட்டம்**

பொருளீட்டிக் குடும்பத்தைக் காப்பாற்றக்கூடிய குடும்பத் தலைவர் மரணமடைந்தால், அவரை இழந்து, நலிவுற்று வாடும் குடும்பத்தின் துயர் துடைக்கும் பொருட்டு, இத்திட்டத்தின்கீழ் நிவாரண உதவி வழங்கப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் மட்டுமே நிவாரண உதவியாக வழங்கப்பட்டு வந்ததை, 28.8.1996 முதல் 7,500 ரூபாயாகவும், 1.8.1998 முதல் 10 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 30.11.2000 வரை இத்திட்டத்தின்கீழ் 1 இலட்சத்து 86 ஆயிரத்து 536 குடும்பங்களுக்கு, 130 கோடியே 10 இலட்சம் ரூபாய் நிவாரண உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

**முன்னாள் கிராம அலுவலர்களுக்குச் சலுகைகள்**

14-11-1980-இல் கடந்த அரசின் அவசரச் சட்டத்தினால் பணியிழந்து, வாழ்ந்து வந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மூன்றாவது முறையாக கலைஞர் 1989ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றதும் தகுதியுள்ள முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளித்தார். அத்துடன் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தையும் பரிசீலித்து, அத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன் அரசு கலைக்கப்பட்டு விட்டது. பின்னர் வந்த ஆட்சியில் ஓய்வூதியத் திட்டத்தைப் பரிசீலிக்க முன் வரவில்லை. இதனை எதிர்த்து முன்னாள் கிராம அலுவலர்கள் நீதிமன்றம் சென்று ஓய்வூதியம் பெற ஆணை பெற்றனர். அதற்குப் பிறகும் முந்தைய ஆட்சியில், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க முன்வரவில்லை. எனவே நீதிமன்ற அவமதிப்பு வழக்காக கிராம அலுவலர்கள் சங்கத்தினர் உச்ச நீதிமன்றம் சென்றனர். அதனை எதிர்த்து முந்தைய அரசு உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தது. நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் உச்ச நீதி மன்றத்தில் முந்தைய அரசு செய்த மேல் முறையீட்டை கலைஞர் அரசு திரும்பப் பெற்று முன்னாள் கிராம அலுவலர்கள் 8500 பேர் பயன்பெறும் வகையில் ஆணை பிறப்பித்தது. அதாவது ஒவ்வொரு மாதமும் 175 ரூபாயை ஓய்வூதியமாக அதற்குரிய படிகளுடன் வழங்க 23-8-1996இல் ஆணையிட்டது. அத்துடன் 14.11.1980-இல் பணியிழந்தவர்களில் மறைந்துவிட்ட முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு 100 ரூபாயைக் குடும்ப ஓய்வூதியமாக வழங்கவும் அரசினால் 23.8.1996 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டன. இவ்வாணைகளின்படி 5-12-1986 முதலே முன் தேதியிட்டு முன்னாள் கிராம அலுவலர்கள் சிறப்பு ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டதால், ஒவ்வொரு முன்னாள் கிராம அலுவலரும் சிறப்பு ஓய்வூதிய நிலுவைத் தொகையாக ஏறத்தாழ 23,000/- ரூபாய் மொத்தமாகப் பெற்று மகிழ்ந்து இந்த அரசைப் பாராட்டினர்.

மேலும் 22.7.1998 அன்று மீண்டும் இந்த அரசு சிறப்பு ஓய்வூதியம் 175/- ரூபாய் என்பதை 250

ரூபாயாக உயர்த்தியும், குடும்ப ஓய்வூதியத்தை 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தியும் ஆணைகள் வெளியிடப்பட்டது. இதனால் இதர படிகளுடன் சேர்த்து தோராயமாக மாதமொன்றுக்கு 800 ரூபாய் அளவில் தற்போது பெற்று வருகிறார்கள்.

முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மேலும் சலுகைகள் வழங்கும் நோக்கத்தில் பதவி ஒழிப்பு நாளான 14-11-1980 அன்று பணியிலிருந்த வர்களுக்கு மட்டுமல்லாமல், அன்றைய நாளில் தற்காலிகப் பணி நீக்கத்தில் இருந்தவர்களுக்கும், விடுப்பில் இருந்தவர்களுக்கும் இச்சிறப்பு ஓய்வூதியச் சலுகை 9.9.1998 அன்று நீட்டிக்கப்பட்டது.

பணி வரன்முறை செய்யப்பட்டு, 1.6.1995க்குப் பிறகு பணியில் இருக்கும்போது இறந்த கிராம உதவியாளர்களது வாரிசுகளுக்கு நடைமுறையில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்க 7.7.1999 அன்று ஆணையிடப்பட்டது.

**நிலவரி தள்ளுபடி**

1995ஆம் ஆண்டு 19 மாவட்டங்களில் நிலவிய வறட்சியினை அடிப்படையாகக் கொண்டு, 22 கோடியே 30 இலட்சம் ரூபாய் அளவுக்கு அரசுக்கு வசூலிக்கப்பட வேண்டிய நிலவரி முதலியவை, இந்த அரசு பொறுப்பேற்றதும், 31.5.1996ல் தள்ளுபடி செய்யப்பட்டது. 1996ஆம் ஆண்டில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட விருதுநகர், திருநெல்வேலி, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 2 கோடியே 41 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் அளவுக்கு அரசுக்குச் சேரவேண்டிய நிலவரி முதலியவை 1998, ஜூன் மாதத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது. அதைப்போலவே, 1996ஆம் ஆண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 87.85 இலட்சம் ரூபாய் அளவுக்கு அரசுக்குச் சேரவேண்டிய நிலவரி முதலியவை தள்ளுபடி செய்யப்பட்டது. 1997ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு முழுவதும் நிலவரி ரத்து செய்யப்படும் என 6.4.1998 அன்று சட்டமன்றத்தில் அறிவித்ததற்கு இணங்க, 43 கோடியே 48 இலட்சம் ரூபாய் அளவுக்கு நிலவரி முதலியன ரத்து செய்யப்பட்டன. கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் மட்டும் இந்த அரசு 69 கோடியே 8 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிலவரியினை ரத்து செய்துள்ளது.

முந்தைய அரசால் உயர்த்தப்பட்ட 2சி மரப்பட்டா வரி விகிதம் குறைக்கப்பட்டு 30-8-1996 அன்று பழைய வரி விகிதமே செயல்படுத்தப்படும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது.

**சான்றிதழ்கள் வழங்கிடப் புதிய முறை**

பள்ளிப் படிப்பை முடித்தபின், மேற்படிப்பிற்காகவும், வேலைவாய்ப்புக்காகவும் குடும்ப வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவற்றை பெறுவதற்கான முறை எளிமைப்படுத்தப் பட்டு, பள்ளிகளிலேயே இவைகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய முறையின்படி, 1999-2000 கல்வியாண்டில் 19 இலட்சத்து 68 ஆயிரத்து 375 சான்றிதழ்களும், 2000-2001 கல்வியாண்டில், நவம்பர் வரை 15 இலட்சத்து 7 ஆயிரத்து 427 சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

**விவசாயத் தொழிலாளர்கள் நலன்**

அமைப்பு சாராத ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் நோக்கத்துடன், அவர்களின் நிலைகளைப் பரிசீலனை செய்து, பரிந்துரை வழங்க குழு ஒன்று அமைக்கப்படும் என்று 5.3.1997 அன்று அறிவிக்கப்பட்டு, திரு.பி.கோலப்பன்,ஐ.ஏ.எஸ்., தலைமையில் 27.8.1997 அன்று குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு 17.2.1998 அன்று அரசுக்குத் தனது அறிக்கையைத் தந்தது. 4.4.1999 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் பற்றி கோலப்பன் குழு பரிந்துரைகள் விரிவாக விவாதிக்கப்பட்டு, உரிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு, 5.4.1999 அன்று அறிவிக்கப்பட்டன.

**வேளாண்மைத் தொழிலாளர் நலவாரியம்**

அமைப்பு ரீதியில் அல்லாத வேளாண்மைத் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்களைச் சிறப்பான முறையில் மேற்கொள்ள அவர்களுக்கென்று தனியே நலவாரியம் அமைத்திட வேண்டும் என்ற கோலப்பன் குழு பரிந்துரையையும், இந்த அரசு ஏற்று, "தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியம்" ஒன்றை 27.11.2000 அன்று அமைத்துள்ளது. வருவாய்த் துறை அமைச்சரைத் தலைவராகவும்; எட்டு துறைகளைச் சேர்ந்த உயரதிகாரிகளை உறுப்பினர் களாகவும்; நில உரிமையாளர்கள் பிரதிநிதிகளாக ஒன்பது பேரையும் விவசாயத் தொழிலாளர்



குடவாசல், ஈ.ரோடு, கோபி செட்டிப்பாளையம் ஆகிய நான்கு வருவாய் வட்டங்களில் ஒரு கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் புலப் படங்களை(Field sketches) கணினி மயமாக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கணினி வசதிகள் கீழ் மட்டத்தைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் கிராமத்தில் தொடங்கி மாவட்டத் தலைநகர் வரை அனைத்து நிலநிர்வாக நடைமுறைகளையும் கணினி மயமாக்கும் முன்னோடித் திட்டம் 42 இலட்சம் ரூபாய் செலவில் பெரம்பலூர் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. பாரம்பரியமான "கடாஸ்ட்ரல்" நிலஅளவை முறை அதிகமான காலத்தை எடுத்துக்கொள்வதுடன், மிகப் பழமையான கருவிகளைக் கொண்டு மேற்கொள்ளப் படுவதால், சில சமயங்களில் துல்லியமாக இல்லாததாலும், நிலவியல் குறியீடு இல்லாதது இதிலுள்ள பெரும் குறை என்பதாலும், நிலவியல் தகவல் முறைக்கு அதிக முக்கியத்துவம் மற்றும் நம்பகத்தன்மை ஏற்பட்டுவரும் இன்றைய நிலையில் மிகத் துல்லியமான "டிஜிட்டல் கடாஸ்ட்ரல்" நிலஅளவையின் தேவை உணரப்பட்டு, விண்கோள் சமிக்ஞை கொண்டு அளவிடும் (Global Positioning System) ஒரு முன்னோடித் திட்டம் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வருவாய் வட்டத்தில் மேற்கொள்ளப்படுவதற்கான ஆணை 3.11.2000 அன்று வழங்கப்பட்டுள்ளது. இதனால், நில அளவையில் அதிநவீனத் தொழில்நுட்பம் செயல் முறைக்கு வரும்.

நத்தம் நிலவரித் திட்டத்தின்கீழ் மனைவரி (Ground Rent) விதிக்கப்பட்டு வந்ததால், வழிவழியாக அனுபவ பாத்தியதை அடிப்படையில் எந்தவிதக் கட்டணமும் இன்றி வீட்டுமனைகளை அனுபவித்து வந்த மக்கள், நிர்ணயிக்கப்பட்ட மனைவரியைச் செலுத்த வேண்டியிருந்த சங்கடமான நிலை, ஆட்சிப் பொறுப்பேற்ற முதல்நாளான 13.5.1996 அன்றே, முதல்வர் கலைஞர் அவர்கள் இட்ட முதல் கையெழுத்து மனைவரி ரத்து தொடர்பான கோப்பில்தான். ●

பிரதிநிதிகளாக ஒன்பது பேரையும் உறுப்பினர் களாகவும் கொண்டு இவ்வாரியம் அமைக்கப் பட்டுள்ளது.

**கணினி மயமாகிவரும் வருவாய்த் துறை**

ஒளிவு மறைவில்லாத, வெளிப்படையான நடைமுறைகளில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ள இந்த அரசில், வருவாய்த்துறை நிர்வாகம் வழங்கும் சேவைகள் தங்குதடையின்றி விரைவாகவும், முழுமையாகவும் மக்களைச் சென்றடைந்திட வேண்டும் என்ற நோக்கத்துடன் தஞ்சை, திருவாரூர், திருவள்ளூர் மாவட்டங்களில் மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் முழுமையாகக் கணினி மயமாக்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஒரு கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில், 50 வருவாய் வட்டங்களுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து நிலப்பதிவுருக்களை கணினி மூலம் மேற்கொள்ளும் செயல்முறை அமலுக்கு வந்துவிட்டது. இதனால் இந்த 50 வருவாய் வட்டங்களிலும் நில உடைமைதாரர்கள் "அ" பதிவேடுகள் மற்றும் சிட்டா நகல்களை கணினி மூலம் பெறுவதற்கான வசதி ஏற்பட்டுள்ளது. மேலும், சம்பளப்பட்டியல் முறை, முதியோர் ஒய்வூதியம் வழங்கும் முறை ஆகியவையும் கணினிகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. மீதமுள்ள 156 வருவாய் வட்டங்களிலும் 4 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் கணினி மயமாக்கும் நடவடிக்கை முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இந்த மாதம் இறுதிக்குள் பணி முடிக்கப்பட வேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு,



அரசின் செய்திகளை மக்களிடத்தில் எடுத்துச் செல்லும் தூதுவர்களாக செய்தி மக்கள் தொடர்புத் துறை விளங்கி வருகிறது.

**அய்யன் திருவள்ளுவருக்கு அழகிய சிலை**

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் ஆற்றிய பணிகளில் தலையாய பணி, தலைமுறைகளுக்கும் தனித்தோங்கி நிற்கும் பணி, சூழும் தென்கடல் ஆடும் குமரியில் அய்யன் திருவள்ளுவருக்கு அகிலமே கண்டு வியக்கும் அளவுக்கு 133 அடி உயரத்தில் 7000 டன் எடை கொண்ட மாபெரும் சிலை 9 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்திட்ட பணியாகும்.

**குறளோவியக் கண்காட்சி**

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் உள்ள குறள் மணிமாடத்தில் 12.60 இலட்சம் ரூபாய் செலவில் காண்போரின் கருத்தைக் கவரும் வகையில் வண்ண ஓவியங்கள் இடம்பெறும் குறளோவியக் கண்காட்சி அமைக்கப்பட்டு 15-1-2000 முதல் பல்லாயிரக் கணக்கானவர் பார்த்து மகிழ்ந்து வருகின்றனர்.

**வாழ்வாங்கு வாழ்ந்த செம்மல்களுக்கு நினைவகங்கள்**

1996க்குப் பின் இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் ரூ.3 கோடியே 31 இலட்சம் செலவில் பொலிவூட்டப்பட்டது. வள்ளுவர் கோட்டத்தில்

# அரசின் செய்திகளை மக்களிடத்தில் எடுத்துச் செல்லும் செய்தித்துறை

ரூ.91 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. காஞ்சிபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா நினைவில்லம் ரூ.4.20 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள மகாகவி பாரதியார் நினைவில்லத்தில் ரூ.10.20 இலட்சம் செலவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. முந்தைய ஆட்சியில் சரிவர பராமரிக்கப்படாமல் சிதிலமடைந்திருந்த பூம்புகாரைச் சீரமைத்திடவும் மேலும் அங்கே பேருந்து நிலையம் கட்டுதல், ஒளிவிளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை உருவாக்கிட 1998–ல் 93 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. தில்லையாடி வள்ளியம்மை நினைவில்லம் ரூ.5.91 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளது எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் மணிமண்டபம், செலவில் மேம்படுத்தப்பட்டது. திருச்சிராப்பள்ளியில் வ.வே.சு.அய்யர் இல்லத்தில் நூல்கள், தளவாடங்கள் ரூ.1.20 இலட்சம் செலவில் வாங்கித் தரப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள மூதறிஞர் இராஜாஜி நினைவிடத்தில் ரூ.2.67 இலட்சம் செலவில் ஓவியங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. கிண்டியில் உள்ள காந்தி அருங்காட்சியகம் ரூ.3.75 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. சென்னை காந்தி மண்டபம், பெருந்தலைவர் காமராசர் நினைவிடம், மூதறிஞர் இராஜாஜி நினைவிடம், பெரியவர் பக்தவத்சலம் நினைவிடம் ஆகியவற்றின் முகப்பு, தோட்டம் அமைப்பு, மின் விளக்குகள் ஆகியவை அமைக்கின்ற பணிகள் ரூ.50 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டன. காந்திமண்டப வளாகத்தில் ரூ.25 இலட்சம் செலவில் பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம் அமைக்கப்பட்டது.



பாரதியாரின் இல்லம் ஆகியவற்றில் ரூ.4.15 இலட்சம் செலவில் சீரமைப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டு ரூ.97 ஆயிரம் செலவில் புகைப்படங்கள் அமைத்து நூல்கள் வாங்கித் தரப்பட்டுள்ளன. கன்னியாகுமரி காந்திமண்டபத்தில் ரூ.2.60 இலட்சம் செலவில் சீரமைப்புப் பணிகள் நடத்தப்பட்டன. சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கம் ரூ.21.12 இலட்சம்

நாகர்கோவிலில் பொதுவுடைமை வீரர் ஜீவா அவர்களின் மணிமண்டபம் ரூ.15 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்ட தியாகிகளை போற்றும் வகையில் ரூ.30 இலட்சம் செலவில் சென்னையில் தியாகிகள் மணிமண்டபமும், சிப்பாய்க் கலகத்தில் உயிர் நீத்த வீரர்களை நினைவுகூரும் வகையில் வேலூரில் ரூ.3 இலட்சம் செலவில் நினைவுச் சின்னமும் உருவாக்கப்பட்டுள்ளன .

மதுரை திருமங்கலத்தில் தியாகி.விஸ்வநாததாஸ் நினைவில்லம் ரூ.50 இலட்சம் செலவிலும், திருநெல்வேலி நெற்கட்டும்செவல் கிராமத்தில் விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் நினைவு மண்டபம் ரூ.50 இலட்சம் செலவிலும், பட்டுக் கோட்டையில் மக்கள் கவிஞர் கல்யாணசுந்தரம் மணிமண்டபம் ரூ.20.50 இலட்சம் செலவிலும், கன்னியாகுமரியில் பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபம் ரூ.50 இலட்சம் செலவிலும், மருதூரில் வள்ளலார் இராமலிங்க அடிகளார் இல்லம் ரூ.2 இலட்சம் செலவிலும், உடுமலையில் பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி அவர்களுக்கு மணிமண்டபம் ரூ.20.50 இலட்சம் செலவிலும், குன்றக்குடியில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நினைவு மண்டபம் ரூ.22.87 இலட்சம் செலவிலும், திருப்பத்தூரில் மருதுபாண்டியர் நினைவிடம் ரூ.20.50 இலட்சம் செலவிலும் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

காந்தி மண்டபம் வளாகத்தில் மொழிப்போர் காவலர்களுக்கு ரூ.33 இலட்சம் செலவில் மணிமண்டபம் எழுப்பப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டம், கட்டாரம் குளத்தில் வீரன் அழகுமுத்துக் கோன் நினைவுமண்டபம் ரூ.35 இலட்சம் செலவில் கட்டப்பட இருக்கிறது. கண்ணியமிகு காயிதேமில்லத் அவர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் மணி மண்டபம் சென்னையில் உள்ள காயிதேமில்லத் அரசினர் கலைக் கல்லூரி வளாகத்தில் கட்டப்பட இருக்கிறது. நாமக்கல்லில் உள்ள கவிஞர் இராமலிங்கனார் வாழ்ந்த இல்லம் ரூ.9.50 இலட்சத்திற்கு தமிழக அரசால் வாங்கப்பட்டு நினைவில்லமாக மாற்றப்பட்டு இருக்கிறது.

மதுரை மாவட்டம் தும்பப்பட்டியில் தியாகி கக்கன் அவர்களுக்கு ரூ.25 இலட்சம் செலவில் நினைவு மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட விருக்கிறது. விடுதலை வீரர் பூலித்தேவன் வாரிசு தாரர்களுக்கு ரூ.3.04 இலட்சம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட கயத்தாற்றில் ரூ.15.97 இலட்சம் செலவில் பூங்கா அமைக்கப்பட்டிருக்கிறது.



**தியாகிகளுக்கும், சிந்தனையாளர்களுக்கும் சிலைகள்**

தியாகி கக்கன் அவர்களின் முழு உருவச் சிலை ரூ.4.45 இலட்சம் செலவிலும், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் மார்பளவு சிலை ரூ.78 ஆயிரம் செலவிலும், நேதாஜி அவர்களின் முழு உருவச் சிலை ரூ.7.40 இலட்சம் செலவிலும், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மார்பளவு சிலை ரூ.78 ஆயிரம் செல விலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவு சிலை ரூ.78 ஆயிரம் செலவிலும், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் முழு உருவச்சிலை ரூ.3.90 இலட்சம்

செலவிலும், தீரன் சின்ன மலையின் முழு உருவச் சிலை ரூ.4.25 இலட்சம் செலவிலும், தியாகி சங்கரலிங்கனார், தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம் ஆகியோரின் மார்பளவு சிலை ரூ.2.20 இலட்சம் செலவிலும், புதுக்கோட்டை மன்னர் இராஜகோபால தொண்டைமானின் முழு உருவச் சிலை ரூ.4.35 இலட்சம் செலவிலும் உருவாக்கப்பட்டு, இந்தச் சிலைகள் அனைத்தும் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. இராமசாமி படையாச்சியார் திருவுருவச்சிலை சென்னையில் ரூ.3.75 இலட்சம் செலவிலும், குன்றக்குடி அடிகளாரின் சிலை குன்றக் குடியில் ரூ.3.50 இலட்சம் செலவிலும் நிறுவப்பட்டு வருகின்றன. மொரீஷியஸ் அரசுக்கு 3 இலட்சம் ரூபாயில் உருவாக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை தமிழக அரசின் சார்பில் நன்கொடையாக அனுப்பப் படவுள்ளது. விடுதலைப் பொன்விழா நினைவுத்தூண் ரூ. 3.75 இலட்சம் செலவில் சென்னையில் அமைக் கப்பட்டுள்ளது.

### தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமை

1999ஆம் ஆண்டினை தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமை ஆண்டாக கடைப் பிடிக்கப்பட்டது. மக்கள் அனைவரும் மனிதாபிமான உணர்வோடு வாழ்வதற்கு தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் பிரச்சார இயக்கங்களும் விளம்பரப் பணிகளும் ரூ.1 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன. சாதி மத ஒற்று மையை வலியுறுத்தும் வகையில் மாவட்டந்தோறும் மனிதச் சங்கிலி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்ற கருத்து விளக்கப் படம் தயாரித்து வெளியிடப்பட்டது. சமூக வேற்றுமைகளை களைந்திடும் நோக்குடன், கல்லூரி, பள்ளிகளில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டன. வாரந்தோறும் திங்கட் கிழமை பள்ளிகளில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டு வருகிறது.

### பல்துறை பணிவிளக்க முகாம்

தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம், சமூக ஒற்றுமை மற்றும் அரசின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை விளக்குகின்ற வகையில் பல்துறை பணிவிளக்க விழிப்புணர்வு முகாம்கள் 28 மாவட்டங் களில் ரூ.30.80 இலட்சம் செலவில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. அரசின் திட்டங்கள், சாதனைகளை மக்கள் மத்தியில் பரப்பும் வகையில், பல்துறை பணி விழிப்புணர்வு முகாம் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பல துறையினரும் இணைந்து, அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் 2 கிராமங்கள், 3 கிராமங்கள் என்ற வகையில் தேர்வு செய்து விளம்பர சாதனங்களை பயன்படுத்தி நடத்தப் பட்டு வருகின்றன. இந்த விழிப்புணர்வு முகாம்களில் அந்தந்தப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு வீட்டுமனை பட்டாக்கள், நிலப்பட்டாக்கள், நலத்திட்ட உதவிகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

### சுதந்திரப் பொன்விழா

சுதந்திரப் பொன்விழா 1997–98ஆம் ஆண்டு சென்னை நகரிலும், அனைத்து மாவட்டங்களிலும் ரூ.115.18 இலட்சம் செலவில் மிகச் சிறப்பாகவும், கோலாகலமாகவும் கொண்டாடப்பட்டது. இப்பொன் விழா ஆண்டையொட்டி சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகச் செம்மல்கள் பல்லாற்றானும் பாராட்டப் பட்டார்கள்.

### இந்தியக் குடியரசு பொன்விழா

26–1–2001 இந்தியக் குடியரசிற்கு பொன்விழா நாளாகும். இப்பொன்விழா தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது. அதற்காக மாவட்டங் களில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட் டுள்ளன. இப்பொன்விழாவினை சிறப்பாக நடத்து வதற்கு அரசு ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

### நினைவாஞ்சலி

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டு 200வது ஆண்டினை நினைவு கூர்ந்திடும் வகையில் அஞ்சல் தலை வெளியீடும் புகழாஞ்சலி நிகழ்ச்சியும் 16–10–1999 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடத்தப்பட்டது. மானங் காத்த சீமையின் மருது பாண்டியர் தூக்கிலிடப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவுபெறுவதை நினைவு கூர்ந்திடும் வகையில் 2001ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் புகழாஞ்சலி நிகழ்ச்சி அரசு சார்பில் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

### பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம்

1989–ல் ரூ.400/–ஆக இருந்த பத்திரிகையாளர் ஓய்வூதியம் 1996–ம் ஆண்டில் ரூ.1000/–ஆகவும், 1999–ம் ஆண்டில் ரூ.1500/– ஆகவும், 2000–ம் ஆண்டில் ரூ.2000/– ஆகவும், உயர்த்தி வழங்க

ஆணையிட்டு தற்போது 76 பத்திரிகையாளர்கள் மாதம் ரூ.2000/- வீதம் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

**பத்திரிகையாளர்கள் குடும்ப ஓய்வூதியம்**

ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளர்கள் இறந்து விட்டால் அவர்களின் துணைவியாருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூ.500/- வாழ்நாள் முழுவதும் வழங்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, தற்போது 5 பத்திரிகையாளர் குடும்பத்தினர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

**பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்**

பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து பத்திரிகையாளர்கள் குடும்ப உதவி நிதி திட்டத்தின் கீழ் நிதி வழங்குவதற்கு முதன் முதலாக இந்த ஆட்சியிலே 1997ஆம் ஆண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.25 ஆயிரம் வீதம் உதவி நிதி வழங்கப்பட்டது. 1999ல் இத்தொகை ரூ.40 ஆயிரமாகவும், 1-4-2000 முதல் ரூ.50 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. இதுவரை பதினைந்து பத்திரிகையாளர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

**செய்தியாளர்களுக்கு குடியிருப்புக்கள் - வீட்டு மனைகள்**

1989-ஆம் ஆண்டு சென்னையில் உள்ள கொட்டிவாக்கத்தில் 5.5 ஏக்கர் நிலம் 136 பத்திரிகையாளர்களுக்கு குடியிருப்பிற்காக வழங்கப்பட்டு மேலும் 20 இலட்ச ரூபாய் நல்கையாக அறிவிக்கப்பட்டு ஆணையிடப்பட்டது. 1997ஆம் ஆண்டு மதுரை தல்லாகுளம் பகுதியில் 61 பத்திரிகையாளர்களுக்கு குடியிருப்புகளுக்காக 3.7 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. திருச்சியில் 52 பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



**தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி**

பட்டயம் பெற படங்கள் தயாரிப்பதற்காக தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனத்திற்கு 1996-97ஆம் ஆண்டுவரை ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டதற்கு மாறாக 1997-98ஆம் ஆண்டில் ரூ.15 இலட்சமாகவும், 1998-99ஆம் ஆண்டில் ரூ.17 இலட்சமாகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்திற்கு 1991-96 வரை ரூ.26.74 இலட்சத்திற்கு மட்டுமே கருவிகள் வாங்கித் தரப்பட்டன. ஆனால், 1996 முதல் 2000ஆண்டு வரை ரூ.126.13 இலட்சம் செலவில் நவீனக் கருவிகள் அரசின் நிதியுதவியால் வாங்கப்பட்டுள்ளன. இக்கருவிகள் திரைப்படத் துறையில் பயன்படுத்தப்படும் மிக நவீனக் கருவிகளுக்கு இணையானவை என்பதால் மாணவர்களுக்கு மிகுந்த பயன் விளைவித்து வருகிறது. ஒரு திரைப்படத்தை முழு அளவில் உருவாக்குவதற்கான அனைத்து நவீன தொழில்நுட்ப வசதிகளும் இந்நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

தோற்றுவிக்கப்பட்டு நாற்பதாண்டுகளுக்குப் பிறகு 1998-99-ஆம் கல்வி ஆண்டில்தான் இந்த நிறுவனம் அகில இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் (A.I.C.T.E.) அங்கீகாரத்தை பெற்றுள்ளது.

**மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்கள்**

வர்த்தக ரீதியாக முழுநீள திரைப்படங்களுக்கு மட்டுமே திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வந்தது. 1998-99ஆம் ஆண்டு முதல் திரைப்படக் கல்லூரி

மாணவர்களால் தயாரிக்கப்படும் சிறந்த குறும் படங்களில், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர், சிறந்த நடிகர், சிறந்த படம் பதனிடுவோர் ஆகியோருக்கு தலா 1 பவுன் தங்கப்பதக்கமும் ரூ.5000/– ரொக்கப் பரிசும் வழங்க அரசு ஆணையிட்டு இதுவரை ஆறு பேருக்கு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

'விடியலை நோக்கி' என்ற குறும்படம் 1997ஆம் ஆண்டில் சிறந்த குறும்படத்திற்கான தேசிய விருதினை பெற்றுள்ளது. 1998ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற உலக திரைப்பட விழாவில் 'இந்திய திரைப்பட வரிசை'யில் திரையிடுவதற்காக தமிழ்நாடு திரைப்படக் கல்லூரி மாணவர் இயக்கிய 'வானவில்' என்ற குறும்படம் தேர்வு பெற்றது. அமெரிக்காவில் நடைபெற்ற உலக வீடியோ பட விழாவில், தமிழ்நாடு திரைப்படக் கல்லூரி மாணவர்கள் தயாரித்த 'தேக்கம்', 'கனவுகள் நனவாகும்', 'இரண்டாம் கட்டளை', 'மூன்றாம் உலகப்போர்', 'மீண்டும் வராது' 'பண்டோரா', 'மக்கள் தொகையில் புதிய கொள்கைகள்' ஆகிய ஏழு செய்தி விளக்கப் படங்களுக்கு விருதுகள் கிடைத்தன. 1999ஆம் ஆண்டின் சிறந்த குறும்படத்திற்கான தேசிய விருதை 'மல்லி' என்னும் குறும் படம் பெற்றது.

மிகச்சிறந்த நவீன ஒளிப்பதிவு கருவிகளைக் கொண்டு படம் எடுக்கும் முறைகள் குறித்து ஹாலிவுட் திரைப்பட உலகின் மிகச்சிறந்த ஒளிப்பதிவாளர் திரு. கிரேக் ஹஸ்டன் இந்நிறுவனத்திற்கு வருகைதந்து ஒளிப்பதிவு குறித்து 16–10–2000 முதல் 5 நாள் பயிற்சி வழங்கினார்.

**தமிழ்நாடு திரைப்படப் பிரிவு**

பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் "அண்ணா வாழ்கிறார்" என்ற திரைப் படத்தை 1998ஆம் ஆண்டில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரித்து அளித்தது. இந்தப்படம் குடியரசுத் தலைவரின் விருதைப் பெற்றது. "அண்ணா வாழ்கிறார்" திரைப்படம் மிகச்சிறப்பாக அனைத்துத் தொழில்நுட்பத் திறனோடும் தயாரிக்கப்பட்டதாகும். தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் வரலாற்றில் குடியரசுத் தலைவர் விருது பெற்றது இதுவே முதல்தடவை என்பது நினைந்து போற்றத்தக்கதாகும்.

தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த 20 நிமிட திரைப்படம் தயாரிக்கப்பட்டு வருகிறது. விரைவில் திரையிடப்படவுள்ளது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் செய்திமலர் தயாரிப்புப் பணிகளுக்காக பல நவீனமயமாக்கப்பட்ட கருவிகள் ரூ.71.90 இலட்சம் செலவில் வாங்கித் தரப்பட்டிருக்கின்றன.

**திரைப்படங்களுக்கு மானியம்**

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு 17–7–1996 முதல் தலா ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தி மானியத் தொகை வழங்கப்படுகின்றது. 1994ஆம் ஆண்டே திரையிடப் பட்ட படங்களுக்கு கடந்த ஆட்சியில் வழங்கப் படாமல் இருந்த மானியத் தொகையை இந்த அரசு 96இல் அமைந்த பிறகு 94இல் திரையிடப்பட்ட படங்களில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 35 படங்களுக்கும், 1995ஆம் ஆண்டிற்கான 40 படங்களுக்கும், 1996ஆம் ஆண்டிற்கான 28 படங்களுக்கும், 1997ஆம் ஆண்டிற்கான 11 படங்களுக்கும், 1998ஆம் ஆண்டிற்கான 18 படங்களுக்குமாக மொத்தம் 4 கோடியே 55 இலட்சம் ரூபாய் மானியத் தொகையாக இந்த அரசில் வழங்கப்பட்டுள்ளது.

**படப்பிடிப்பு அனுமதி**

தொல்பொருள் ஆய்வுத்துறையின் கட்டுப்பாட்டில் வரும் புராதனச் சின்னங்கள் மற்றும் அதுபோன்ற கலைச் சின்னங்கள் உள்ள இடங்களில் படப்பிடிப்புகளை நடத்திட, படத் தயாரிப்பாளர்கள் செலுத்தி வந்த படப்பிடிப்புக் கட்டணம், ஓர் இடத்திற்கு ஒரு நாளைக்கு ரூ.5000/– என இருந்ததை ரூ.1000/– எனவும், ஏனைய இடங்களுக்கு ரூ.2500/– என் இருந்ததை ரூ.500/– எனவும் 1996இல் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் குறைக்கப்பட்டது.

**திரைப்படத் தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணம்**

தமிழ்த் திரைப்படங்களில் நடிக்கும் சண்டைப் பயிற்சியாளர்கள் சண்டைக் காட்சியின்போது உயிரிழக்க நேர்ந்தால் அவர்களுடைய குடும்பத்துக்கு ஒரு இலட்ச ரூபாயும், செயல்பட முடியாத அளவுக்கு காயம்பட்டு ஊனமடைய நேர்ந்தால் 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண உதவியாக வழங்கும் திட்டம் 1996 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**கேளிக்கை வரிவிலக்கு**

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தகுதி வாய்ந்த தமிழ்த் திரைப்படங்களுக்கு அவை வெளியிடப்பட்டது முதல் நான்கு வாரங்கள் வரை கேளிக்கை



வரியிலிருந்து விலக்கு அளிக்கும் திட்டம் முதன் முதலாக 12-12-1996 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் இதுவரை, மை இந்தியா, சாதி சனம், புதல்வன், குடும்பச் சங்கிலி, எல்லாம் பணத்துக்காக, நீதியின் வாசலிலே ஆகிய படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து நான்கு வாரகாலத்திற்கும், ஹவுஸ்புல், உயிரின் உயிரே, காந்தி மற்றும் பாரதி ஆகிய திரைப் படங்களுக்கு காலவரையறையின்றி முழு விலக்கும் அளிக்கப் பட்டுள்ளது.

**கலைத்துறை வித்தகர் விருதுகள்**

1989ஆம் ஆண்டுக்கு முன்பு ராஜா சாண்டோ விருது மட்டுமே தரப்பட்டு வந்தது. 15-6-89 அன்று கலைவாணர் மற்றும் எம்.ஜி.ஆர். பெயரிலும் விருதுகள் வழங்க ஆணையிடப்பட்டது. பின்னர் 22-11-90 அன்று அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதி தாசன் ஆகியோர் பெயரில் வித்தகர் விருதுகள் கூடுதலாக வழங்க ஆணையிடப்பட்டது. கவியரசு கண்ணதாசன் பெயரால் 20-3-97 அன்றும் நடிகர் திலகம் சிவாஜி பெயரால் 10-1-2000 அன்றும் தியாகராஜ பாகவதர் பெயரால் 30-8-2000 அன்றும் வித்தகர் விருதுகள் வழங்க இந்த அரசினால் ஆணையிடப்பட்டது. முந்தைய ஆட்சியில் வழங்கப் படாமல் இருந்த 94ஆம் ஆண்டிற்கான விருதுகளும் 1996க்குப் பின்னர்தான் வழங்கப்பட்டன.

**திரைப்பட விருதுகள்**

தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் சிறந்த படங்களுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு, சிறப்புப் பரிசு என வழங்கப்பட்டு வரும் பரிசுத் தொகையான ரூ.1,25,000/- ரூ.75,000/-, ரூ.50,000/- மற்றும் ரூ.50,000/- ஆகியவற்றை 1999ஆம் ஆண்டு முதல் முறையே ரூ.2,00,000/-, ரூ.1,00,000/-, ரூ.75,000/-, மற்றும் ரூ.75,000/- ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட் டுள்ளது. 1996ஆம் ஆண்டிற்குப் பிறகு இதுவரை திரைப்படப் பரிசுத்தொகையாக 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**திரைப்படக் கலைஞர்களுக்கு விருதுகள்**

தேர்வு செய்யப்பட்ட சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் என 20 பிரிவின் கீழ்வரும் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் 5 பவுன் தங்கப் பதக்கமும், நினைவுப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வந்தது. 1997ஆம் ஆண்டு முதல் கூடுதலாக சிறந்த வில்லன் நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர் ஆகிய கலைஞர்களுக்கும் வழங்க

ஆணையிடப்பட்டு, தற்போது 22 பிரிவின் கீழ் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**கேளிக்கை வரி குறைப்பு**

புதிய படங்களுக்குக் கேளிக்கை வரியை தமிழக அரசு 54 விழுக்காட்டில் இருந்து 40 விழுக்காடாக 1989 ஆம் ஆண்டில் குறைத்தது. 1-8-98 முதல் 40 விழுக்காட்டிலிருந்து 30 விழுக்காடாகவும், 2000இல் 25 விழுக்காடாகவும், மேலும் குறைக்கப்பட்டது. 10 ஆண்டுகளுக்கு முன் வந்த திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி 40 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டது. மொழி மாற்றுப் படங்களுக்கும், பிற தமிழ்ப் படங்களுக்கும் குறைக்கப்பட்டது போல் கேளிக்கை வரி 1-8-98 முதல் குறைக்கப்பட்டது. இதேபோல இணக்க வரி முறையும் (Compounding) அதற்கு ஏற்றாற் போல் குறைக்கப்பட்டது. இவ்வரிக் குறைப்புகள் மூலம் திரைப்படத்துறைக்கு 1.8.1998 முதல் ஆண்டுக்கு 40 கோடி ரூபாய் அளவுக்கும், 12.6.2000 முதல் ஆண்டுக்கு 60 கோடி ரூபாய் அளவுக்கும் வரிச் சலுகைகள் தமிழ்த் திரைப்பட வரலாற்றிலேயே இல்லாத வகையில் வழங்கப்பட்டன.

விற்பனை வரிச் சட்டத்தின்படி, திரைப்படங்களுக்கான உரிமை மாற்றம் மீது, 1-4-1986 முதல் 11-11-1999 வரை செலுத்தவேண்டிய வரியினைத் தள்ளுபடி செய்ததுடன், உரிமை மாற்றத்திற்கான விற்பனை வரியை 12-11-1999 முதல் 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடு எனவும் குறைக்கப்பட்டது. 1.4.2000 முதல் திரைப்படங்கள் குத்தகை மீதான 4 விழுக்காடு விற்பனை வரி அறவே நீக்கப்பட்டது.

திரைப்படத் துறையில் ஏற்படும் தகராறுகளை தீர்த்து வைப்பதற்காக மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**அரசுப் பொருட்காட்சி**

அரசின் திட்டங்கள், சாதனைகள், நலத்திட்ட உதவிகள் ஆகியவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் மாவட்டங்களின் தலைநகரங்களில் தமிழக அரசால் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பொருட்காட்சிகள் பொழுது போக்கிற்காக மட்டுமின்றி, பொதுமக்கள் அரசின் பல்வேறு நலத் திட்டங்களை அறிந்து பயன்பெறும் வகையிலும் நடத்தப்படுகின்றன. 1996 ஆம் ஆண்டு முதல் இதுவரை 15 பொருட்காட்சிகள் இத்துறையால் நடத்தப்பட்டு, அவற்றின் மூலம் அரசுக்கு நிகர இலாபம் 2 கோடியே 78 இலட்சம் ரூபாய் கிடைத்துள்ளது.

**தமிழரசு**

1970-ல் கலைஞர் அவர்களால் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டு அரசின் திட்டங்களை அனைவரும் உணரும் வண்ணம் எழுத்து ஓவியமாக மாதம் இருமுறை தமிழிலும், மாதம் ஒருமுறை ஆங்கிலத்திலும் "தமிழரசு" ஏடு வெளிவந்து கொண்டிருக்கிறது. 1997 முதல் 'அரசு செய்தி' என்ற புதிய வகை சுவரொட்டி கிழமை தோறும் அரசின் திட்டங்களையும், பயன்களையும் விளக்கும் கருத்துக் காட்சிகளோடு கூடிய உரைவிளக்கம் தாங்கி வெளி வந்து கொண்டிருக்கின்றது.

கால்நடை பாதுகாப்பு சிகிச்சை முகாம், கன்றுகள் பராமரிப்பு முறைகள், பசும் தீவனம், கோழிப்பண்ணை பராமரிப்பு, ஆடுகளின் நீலநாக்கு நோய் ஆகியவை குறித்தும் துண்டுப் பிரசுரங்கள், தமிழரசு அச்சகத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

வீட்டுக் காய்கறித் தோட்டம், நமக்கு நாமே, சமூக நலத் திட்டங்கள் போன்ற சிறப்பு வெளியீடுகள் தமிழரசு அச்சகத்தின் மூலம் வெளியிடப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. இலக்கிய மலர், கோட்டம் முதல் குமரி வரை ஆகிய சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**விளம்பரம்**

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, கூடுதல் செலவு ஏதுமின்றி, ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரை கலை விளம்பரங்கள் ஆங்கிலம் மற்றும் தமிழில் கணினி இணையத்தில் இலவசமாக வெளியிடப்பட்டு வருகின்றன. இதன் மூலம் உலகத்தில் எந்த மூலையில் உள்ளவரும் தமிழக அரசின் ஒப்பந்தப் புள்ளிகளில் பங்கேற்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் வெளிப்படையாக இருத்தல்வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998இன் கீழ் வெளியிடப்பட்ட ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல், மாநில அளவிலும், மாவட்டங்களிலும், அமலுக்கு வந்துள்ளன. இதன் அடிப்படையில் மாவட்ட மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வெளியிடப்பட்டு வருகின்றன. இச் செய்திமலரில் ஒப்பந்தப்புள்ளி கோரும் விளம்பரங்களுடன், ஒப்பந்தப்புள்ளி மீது மேற்கொள்ளப்படும் முடிவுகளும் வெளியிடப்படுகின்றன. •

# தொழிலாளர் நலன்

ஒரு நாட்டின் தொழில் வளம், பொருளாதார முன்னேற்றம் மற்றும் தொழில் அமைதி ஆகிய மூன்றும் ஒன்றையொன்று சார்ந்தவையாகும். தொழில் முன்னேற்றத்தை ஊக்குவிக்கின்ற அதே நேரத்தில், தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பேணுவதும் அரசின் நோக்கமாகும். இந்த அரசின் சரியான தொழிலாளர் கொள்கையின் மூலம் மாநிலத்தில் தொழில் அமைதி சிறப்பாக பராமரிக்கப்படுவதோடு வேகமான தொழில் முன்னேற்றமும், சிறப்பான தொழி லாளர் நலமும் பாதுகாக்கப்படுகிறது. ஒரு நாட்டில் தொழிற்சாலைகள் பெருகுவதற்கு அங்கு தொழில் அமைதி மிக அவசியமானது. தொழிலாளர் நலன் காக்கப்பட்டால்தான் தொழில் அமைதி நிலவும். இதனை மனதில்கொண்டு 1969ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்றபோதே தொழில், தொழிலாளர் நலம், கூட்டுறவு என்ற மூன்று துறைகளும் ஒன்றாக ஒரே துறையாக இருந்ததிலிருந்து தொழிலாளர் நலத்திற்கென தனித்துறையையும் தனி அமைச்சகத்தையும் உருவாக்கினார். அந்தத் தொழிலாளர் நலத் துறையின் சார்பில் கடந்த நான்கரை ஆண்டுகளில் செய்யப்பட்ட சாதனைகள் வருமாறு:–

- தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம் 15-6-1997 முதல் தமிழ்நாடு முழுவதற்கும் பொருந்துவதாக அறிவிக்கப்பட்டு அதன்படி செயல்படுத்தப் பட்டு வருகிறது.

**தொழில் அமைதியில் தமிழகத்திற்கு முதலிடம்:**

- கடந்த நான்கரை ஆண்டுகால ஆட்சியில் தொழிலாளர் தகராறு காரணமாக தமிழகத்திலே எந்தவொரு பெரிய தொழில் நிறுவனத்திலும் நீண்ட நாள் வேலை நிறுத்தம், கதவடைப்பு போன்ற ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்ற ஒன்றே இந்த ஆட்சியின் தொழிலாளர் நலக் கொள்கைக்கு முக்கிய எடுத்துக் காட்டாகும்.

- அகில இந்திய அளவில் ஒவ்வொரு மாநிலத்தின் வளர்ச்சியினை ஆராய்ந்து இந்திய தொழிற்குழுமம் **(Confederation of Indian Industry)** ஒரு அறிக்கை தயார் செய்துள்ளது. இந்த அறிக்கையில், இந்தியாவிலேயே தொழில் அமைதி நிலவுவதிலும், தொழிலாளர் நலன்களை பாதுகாப்பதிலும் தமிழகம் முதல் இடம் வகிக்கின்றது என்றும் குஜராத் இரண்டாவது இடம் என்றும் ஆந்திரப் பிரதேசம் மூன்றாவது இடம் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்திய தொழிற்குழுமம் **(C.I.I.)** தொழில் முனைவோரின் ஒரு கூட்டமைப்பு ஆகும். இந்த கூட்டமைப்பே, தமிழகத்தில்தான் இந்தியாவிலேயே சிறப்பான முறையில் தொழில் அமைதி நிலவுகிறது என்று கூறியுள்ளது நமது அரசிற்குப் பெருமை சேர்ப்பதாகும்.

அரசின் தொழிலாளர் நலத்துறையிடம் தொழிற்தகராறுகள் சட்டத்தின் கீழ் இந்த நான்கரை ஆண்டுகளில் பெறப்பட்ட 65,003 வழக்குகளில் 50,540 வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டன. தொழிற் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்ட முக்கிய தொழிற்சாலைகளில் சில — காவேரி சுகர்ஸ் அண்டு கெமிகல்ஸ், பேட்டைவாய்த்தலை; ஒட்டல் காஞ்சி; பீடித் தொழிலாளர்கள் கூலி உயர்வு; பாட்டா இந்தியா லிமிடெட், ஒசூர்; திருமலை கெமிகல்ஸ், ராணிப்பேட்டை; எவரெடி இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட், சென்னை; இந்துஸ்தான் மோட்டார் லிமிடெட், திருவள்ளூர்; பி அண்டு சி மில்ஸ், சென்னை; திரு ஆரூரான் சர்க்கரை ஆலை; ஸ்பிக் ஆர்கானிக்ஸ் லிமிடெட், மணலி; மணலி பெட்ரோகெமிகல்ஸ்; சேஷசாயி பேப்பர் அண்டு போர்ட்ஸ், ஈரோடு; சவுத்தர்ன் ஸ்விட்ச் கியர்; வேலூர் மாவட்ட தோல் பதனிடும் தொழிற்சாலை;

மதுரையிலே நடைபெற்ற போராட்டத்தையொட்டி சென்னையிலே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு பால்வள நிறுவனத்தைச் சேர்ந்த 1095 ஊழியர்கள் 1980இல் கடந்த கால ஆட்சியிலே வேலை நீக்கம் செய்யப் பட்டார்கள். 1989இல் கலைஞர் ஆட்சி பொறுப்பேற்றபோது பணி நீக்கம் செய்யப்பட்டவர்களில் 370 பேருக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. மீண்டும் 1997ஆம் ஆண்டு நீதிமன்றத்திலே இதுகுறித்த வழக்கு விசாரணையிலே இருந்தபோதும் அதன் முடிவிற்காக காத்திராமல் மேலும் 427 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கிட கலைஞர் அரசு ஆணை பிறப்பித்தது. இவர்களில் பணியிலே 316 பேர்தான் சேர்ந்தார்கள். மற்றவர்கள் எல்லாம் இடைக்



காலத்தில் வெவ்வேறு பணிகளிலே சேர்ந்து விட்டார்கள்.

- அதுபோலவே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிட்டங்கிகளில் பத்தாண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்த சுமைதூக்கும் தொழிலாளர்கள் சுமார் **2500** பேர் இந்த ஆட்சியிலே பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள்.

- தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் சொந்தமான நான்கு அனல் மின் நிலையங்களிலும் இரண்டு எரிவாயு சுழல் மின் நிலையங்களிலும் பணியாற்றி வந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் **7,651** பேர் இந்த ஆட்சியிலே **1–1–1999** முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள்.

**பதிவு செய்யப்பட்ட புதிய தொழிற்சாலைகள்**

- **1996**ஆம் ஆண்டின் துவக்கத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை **23,053** என்றிருந்தது. கடந்த **4** ஆண்டுகளில் மேலும் **4,938** தொழிற்சாலைகள் புதியதாக தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு **2000**ஆம் ஆண்டின் துவக்கத்தில் **27,991** பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் என்ற இலக்கை எட்டியுள்ளது.

- **1996**ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் மொத்தம் **10,38,535** தொழிலாளர்கள் பயனடைந்து வந்தனர். கடந்த நான்காண்டுகளில் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட கூடுதலான தொழிற்சாலைகளின் மூலம் மேலும் **1,23,876** தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**தொழிலாளர்களுக்கு நிரந்தர நிலை வழங்குதல்:**

- தொழிலாளர்களுக்கு பணி நிரந்தரம் வழங்குதல் சட்டம் **1981**இன்படி கடந்த நான்காண்டுகளில் மொத்தம் **87,580** தொழிலாளர்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் பணி நிரந்தரம் செய்யப் பட்டுள்ளனர்.

**போனஸ் பிரச்சினைக்குத் தீர்வு**

- ஒவ்வொரு ஆண்டும் தீபாவளிப் பண்டிகை காலங்களில் அரசு பொதுத்துறை நிறுவனங்கள், பஞ்சாலை மற்றும் பொறியியல் தொழில்களில் போனஸ் பட்டுவாடா செய்வது குறித்து எழுகின்ற தொழிற் தகராறுகள் மீது உரிய காலத்தில் தீர்வுகள் காணப்படவில்லையெனில், மாநில அளவில் அதிக தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடக் கூடிய ஒரு பிரச்சினையாக இது மாறக்கூடும். இதை உணர்ந்து, தொழிலாளர் நலத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக மிகுந்த கவனத்துடனும், திறமையுடனும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு வருகின்றனர்.

**மூடிக் கிடந்த நிறுவனங்கள் திறப்பு:**

- தொழிற்தகராறு காரணமாக மூடப்பட்டோ அல்லது நீண்ட காலமாக இயங்காமலோ உள்ள



நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இந்த நான்கரை ஆண்டுகளில் ஏதுமில்லை. குறிப்பிட்ட சில தொழில்களில் ஏற்பட்டுள்ள பொதுவான மந்தநிலை, வெளிநாடுகளில் இருந்து ஏற்பட்டுள்ள போட்டி, போதிய ஆர்டர்கள் கிடைக்காதது போன்ற காரணங்களினால் ஏற்படும் நிதிநெருக்கடி, பங்குதாரர்களுக்கிடையே ஏற்பட்ட உட்பூசல் வழக்குகள் ஆகிய காரணங்களினால்தான் சில தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டு இயங்காமல் இருந்தன. முக்கியமாக டன்லப் இந்தியா தொழிற்சாலை, கொங்குரார் காட்டன் மில்ஸ், தஞ்சாவூர் டெக்ஸ்டைல்ஸ், குவாலிட்டி ஸ்பின்னர்ஸ், பழனியாண்டவர் காட்டன் மற்றும் சிந்தடிக் டெக்ஸ்டைல்ஸ், காகா ஷூஸ், அண்ணாமலையார் டெக்ஸ்டைல்ஸ் போன்ற 27 மூடிக்கிடந்த நிறுவனங்கள் 1996க்குப் பின் இந்த அரசின் முயற்சியால் திறக்கப்பட்டுள்ளன.

**மூடிய தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு உதவித் தொகை:**

- நீண்டகாலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு ரூ.250/– மாதாந்திர உதவித் தொகை வழங்கும் புதிய திட்டத்தினை 1999 ஆம் ஆண்டில் மே மாதத்தில் இந்த அரசு அறிவித்தது. இவ்வாறு 87 தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இத் திட்டத்தின் மூலம் பயன்பெற வகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 7848 தொழிலாளர்களுக்கு ஒரு கோடியே 75 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- இவ்வரசு நீண்ட காலமாக மூடிக் கிடக்கும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு 1996 முதல் பண்டிகைகால நிவாரணமாக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 4 கோடியே 24 லட்சத்து 41 ஆயிரத்து 300 ரூபாய் வழங்கியுள்ளது. 1996, 1997ம் ஆண்டுகளில் ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ.400/– ஆக வழங்கி வந்ததை 1998 முதல் ரூ.500/– ஆக உயர்த்தி வழங்கி வருகின்றது.

**விபத்துக்கள் குறைவு:**

- வருடா வருடம் புதிய தொழிற்சாலைகள் ஏராளமாக தொடங்கப்பட்ட போதிலும், துறை ஆய்வர்களின் சீரிய முயற்சியாலும், பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தி பாதுகாப்பு மேம்பாட்டுப் பணிகளில் அயராது ஈடுபட்ட தாலும் கடந்த 4 ஆண்டுகளில் தொழிற் சாலைகளில் ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. 1996 ஆம் ஆண்டில் 61 மரண விபத்துக்கள் என்றிருந்தது, 1999 ஆம் ஆண்டில் 41 மரண விபத்துக்களாகக் குறைந்துள்ளது. அதேபோல், 1996 ஆம் ஆண்டில் 4,347 மரணமில்லாத விபத்துக்கள் ஏற்பட்டிருந்தும், 1999 ஆம் ஆண்டில் இது 2,647 என்ற அளவுக்கு குறைக்கப்பட்டுள்ளது.



**உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டிடத் தொழிலாளர்கள்) நலத் திட்டம் :**

- சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சிகளில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வந்த இந்தத் திட்டத்தை, 15-6-97 முதல் தமிழ்நாடு முழுவதும் இந்த அரசு விரிவுபடுத்தியுள்ளது. இதன் காரணமாக இவ்வாரியத்தில் பதிவு செய்துகொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை கடந்த ஆட்சிக் காலத்தில் வெறும் 25,000ஆக இருந்தது. இந்த ஆட்சியில் 2 லட்சத்து 70 ஆயிரத்து 170 ஆக உயர்ந்துள்ளது. கட்டிடத் தொழிலாளர்களின் நலத் திட்டங்களை அமல்படுத்துவதற்காக "உடல் உழைப்புத் தொழிலாளர்கள் பொதுநல நிதி" ஏற்படுத்தப் பட்டுள்ளது. தமிழ்நாட்டின் எல்லைக்குள் கட்டுமானப் பணியினை மேற்கொள்ளும் எந்த ஒரு நபரும் அக்கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தினை இந்நிதிக்கு செலுத்த வேண்டும். 14-6-97 வரை இத்தொகை கட்டுமான தொகையின் மொத்த மதிப்பீட்டில் 0.1 விழுக்காடு ஆக மட்டுமே இருந்தது. 15-6-97 முதல் இது 0.3 விழுக்காடு ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக வாரியத்தின் வருவாய் 1996-ல் 90 லட்சம் ரூபாயில் இருந்து தற்போது 25 கோடியே 88 லட்சத்து 35 ஆயிரத்து 157 ரூபாயாக உயர்ந்துள்ளது.

**கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்**

- 10-5-1995 முதல் 9-5-1996 வரையான காலத்தில் 21,946 கட்டுமானத் தொழிலாளர்கள் மட்டுமே தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்டனர். ஆனால் 13-5-1996 முதல் 30-11-2000 வரையுள்ள இந்த அரசின் நான்கரை ஆண்டு கால ஆட்சியில் 2,48,824 பேர் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ளார்கள்.

- பதிவு செய்து கொண்டுள்ள அனைத்து கட்டிடத் தொழிலாளர்களும் குழு விபத்துத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளனர். காப்பீடு செய்வதற்கான பிரிமியத் தொகையை வாரியமே செலுத்தி வருகிறது. பதிவு பெற்ற கட்டிடத் தொழிலாளி விபத்தில் இறந்தால் 1 இலட்சம் ரூபாய் காப்பீடு தொகையாகவும், விபத்தில் ஊனமுற்றால் ஊனத்தின் தன்மைக்கேற்ப அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் வரையும் நிவாரணத் தொகையாக வழங்கப் படுகிறது. 9-5-1998 வரை மரண விபத்திற்கு வழங்கப் பட்டு வந்த 50 ஆயிரம் ரூபாய் என்பதை 10-5-1998 முதல் ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. இயற்கை மரணத்திற்கு 5000 ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 30-11-2000 வரை 391 பேருக்கு 5 ஆயிரம் ரூபாய் வீதம் 19 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இந்த 5 ஆயிரம் ரூபாய் என்பது இனி 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

- 10-5-1995 முதல் 9-5-1996 வரையான காலத்தில் விபத்துக் காப்பீடு தொகை பெற்றவர்களின் எண்ணிக்கை ஒன்று. அவருக்கு வழங்கப்பட்ட காப்பீட்டுத் தொகை 50 ஆயிரம் ரூபாய். கடந்த நான்கரை ஆண்டு கால ஆட்சியில் மரண விபத்துக் காப்பீடு தொகை பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 75. வழங்கப்பட்ட காப்பீட்டுத் தொகை 66 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். காய விபத்துக் காப்பீடு தொகை பெற்ற பயனாளிகள் 29 பேர். அவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை 6 இலட்சத்து 70 ஆயிரத்து 750 ரூபாயாகும்.

- 3-11-98க்கு முன்பு விபத்துக் காப்பீடு தொகை மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. 3-11-98க்குப் பிறகு பின்வரும் நலத் திட்டங்கள் அமல்படுத்தப் பட்டு வருகின்றன.

- பதிவு பெற்ற கட்டிடத் தொழிலாளியின் மகன் அல்லது மகள் 10 ம் வகுப்பு தேர்வு பெற்றால் 750 ரூபாயும், 12 ம் வகுப்பு தேர்வு பெற்றால் 1000 ரூபாயும் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 30-11-2000 வரை 867 பேருக்கு பத்தாம் வகுப்பு தேர்வு பெற்றமைக்காக

ஆறு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், 450 பேருக்கு 12ஆம் வகுப்பு தேர்வு பெற்றமைக்காக நான்கு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது. இனி பத்தாம் வகுப்பு தேர்வு பெற்றால் ஆயிரம் ரூபாயும, 12ஆம் வகுப்பு தேர்வு பெற்றால் 1500 ரூபாயும் வழங்கப்படவுள்ளது.

- பதிவு பெற்ற கட்டிடத் தொழிலாளியின் மகன் அல்லது மகள் திருமணத்திற்கு ரூ. 1000/– உதவித் தொகை வழங்கப்படுகிறது. 30–11–2000 வரை 819 பேருக்கு ஆயிரம் ரூபாய் வீதம் 8 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் வழங்கப் பட்டுள்ளது. இனி இந்த ஆயிரம் ரூபாய் என்பது இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தப்படுகிறது.
- பதிவு பெற்ற கட்டிடத் தொழிலாளி மகப்பேறு அல்லது கருச்சிதைவுக்கு ரூ. 2000/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.
- பதிவு பெற்ற கட்டிடத் தொழிலாளியின் ஈமச் சடங்கிற்கு 2000 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 30–11–2000 வரை 566 பேருக்கு மொத்தம் 9 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் வழங்கப் பட்டுள்ளது.

**கட்டிடத் தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள் :**

**மத்திய அமைச்சர் பாராட்டு**

- மத்திய தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. சத்தியநாராயண ஜாட்டியா அவர்கள் தமிழ்நாட்டில் கட்டுமான தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுகின்றன என்றும், அவற்றை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்றும் கூறி தமிழ்நாடு அரசைப் பாராட்டி உள்ளார்.





**அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான வாரியங்கள்**

- அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்களுக்கு பல்வேறு தொழிலாளர் நலத் திட்டங்களின் பயன்கள் கிட்டுவதில்லை என்பதை மனதில் கொண்டு இந்த அரசு 1997ஆம் ஆண்டு ஒரு குழுவினை நியமித்து அவர்களிடமிருந்து பெற்ற பரிந்துரையின் அடிப்படையில் மாநில அளவிலான அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர் நல வாரியம் ஒன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் பல்வேறு தொழிலாளர் நல உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வாரியத்தின் கீழ் இருந்த 61 தொழில்களிலிருந்து பிரித்து, தனித்தனியாக தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம், தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம்,பனைமரத் தொழிலாளர் நலவாரியம், கைவினைத் தொழிலாளர் நலவாரியம், விவசாயத் தொழிலாளர் நலவாரியம், என்று மேலும் ஏழு வாரியங்கள் இந்தத் தொழிலாளர்களின் நலன்களுக்காக இந்த ஆட்சியிலே அமைக்கப்பட்டுள்ளது.
- பத்திரிகை சுவற்றோவியம் போன்று ஓவியத் தையே தொழிலாகக் கொண்டிருக்கும் ஓவியக் கலைஞர்களின் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கென தனியாக ஓவியர் நல வாரியம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.
- இந்த வாரியங்களின் தொடக்க விழா 16–12–2000 அன்று சென்னை சீரணி அரங்கிலே நடைபெற்றது. இலட்சக்கணக்கில் தொழிலாளர்கள் கூடினர். இவ்வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர் களுக்கு பின்வரும் நலத் திட்டங்கள் அமல்படுத்தப்படவுள்ளன. இந்த உதவிகள் பதிவு செய்து கொண்ட அமைப்பு சாரா தொழிலாளர்கள் அனைவருக்கும் கிடைக்கும்.

(அ) விபத்து நிவாரணத் திட்டம்

- மரண விபத்து ஏற்படும் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்படும். விபத்தில் ஊனமுறும் தொழிலாளர்களுக்கு விபத்தின் தன்மைக்கேற்ப இழப்பீட்டுத் தொகை அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும். இனி இயற்கையாக மரண மடையும் உறுப்பினர்களின் குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படும்.

(ஆ) மகப்பேறு நலத் திட்டம்

- பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவியாக முதல் இரண்டு குழந்தைகளுக்கு தலா ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும். கருச்சிதைவு ஏற்படும் பெண் தொழிலாளர்களுக்கு ரூபாய் ஐநூறு உதவித் தொகை வழங்கப்படும்.

- இதுவரை அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்கள் மாதம் 20 ரூபாய் கட்ட வேண்டுமென்றும் கட்டிய தொகை இறுதியில் வட்டியுடன் திருப்பித் தரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதை மாற்றி வாரிய உறுப்பினர்கள் முதலில் சேரும்போது 100 ரூபாய் ஒரேயொரு முறை கட்டினால் போதும், மாதாந்திர கட்டணம் கட்டத் தேவையில்லை, இரண்டாண்டிற்கு ஒரு முறை புதுப்பித்துக் கொள்ள பத்து ரூபாய் மட்டும் கட்டினால் போதும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

- இந்த வாரிய உறுப்பினர்களுக்கு திருமண உதவித் திட்டமாக 2000 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

- இந்த வாரிய உறுப்பினர்கள் பலன்களைப் பெற குறைந்தபட்சம் ஓராண்டு காலத்திற்காவது உறுப்பினராக இருந்திருக்க வேண்டுமென்று முன்பு இருந்தது. அது மாற்றப்பட்டு உறுப்பினரான தேதியிலிருந்தே பலன்கள் வழங்கப்படும் என்றும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

- இந்த வாரியங்களின் தொகுப்பு நிதியாக அரசின் சார்பில் ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும்.

- தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்நல வாரியம் 5–11–99 முதல் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இவ்வாரியத்தின் அமைப்பு ரீதியற்ற உடலுழைப்புத் தொழிலாளர்களை உறுப்பினராகச் சேர்க்கும் பொருட்டு, சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், மதுரை, திருநெல்வேலி ஆகிய மண்டல அளவிலான வாரியப் பணியாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

- இவ்வாரியத்தில் 3,40,465 அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர். இவ்வாரியத்திற்கு அரசு அளித்த நாற்பது இலட்ச ரூபாய் மானியத் தொகைக்கு மேலாக, மோட்டார் போக்குவரத்து வாகன வரி செலுத்து வோரிடமிருந்து பெறப்படும் வாகன வரியில், ஒரு சதவிகிதத் தொகையும் சேர்ந்து இன்றுவரையில் 3 கோடியே 24 லட்சத்து 52 ஆயிரத்து 356 ரூபாய் வாரிய நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர் நலம்

- தோட்டத் தொழிலாளர் சட்டவிதிகள் அமலாக்கத்தினை தீவிரமாக்கும் பொருட்டு இவ்வாண்டு முதல் தேனி, கோத்தகிரி மற்றும் பந்தலூர் ஆகிய இடங்களை தலைமையிடமாகக் கொண்டு, மூன்று புதிய தோட்ட நிறுவன ஆய்வர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி:

- தமிழ்நாட்டில் மொத்தம் 43,694 வீடுகள் தோட்டத் தொழிலாளர்களுக்காக அந்த நிர்வாகத்தினரால் கட்டப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வழங்குதலில் மொத்தமுள்ள தோட்டத் தொழி லாளர்களில் 98 சதவீதம் தொழிலாளர்கள் வீட்டுவசதி பெற்று தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலாவதாகத் திகழ்கிறது.

(இ) மருத்துவ வசதிகள்:

- தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் தற்போது 136 மருந்தகங்களும், 29 தோட்ட மருத்துவமனைகளும் மற்றும் 4 தொகுப்பு மருத்துவமனைகளும் உள்ளன. மருத்துவமனை வசதிகள் இல்லாத தோட்ட நிறுவனங்களில், பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் அருகில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுக்கொண்டு, அதற்கான செலவை நிர்வாகத்திடமிருந்து திரும்ப பெற்றுக் கொள்கின்றனர்.

(ஈ) மின்வசதி :

- தோட்டத் தொழிலாளர்களுக்கான 43,694 வீடுகளில், 41,055 வீடுகளுக்கு மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு மின்வசதி அளிப்பதில் முன்னேற்றம் குறித்து கண்காணிக்க அந்தந்த மாவட்ட ஆட்சியரின் கீழ் நிர்வாகத்தரப்பினர், தொழிலாளர்

தரப்பினர் மற்றும் அலுவலர்கள் அடங்கிய கண்காணிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

**(உ) பணி நிரந்தரம் :**

- இந்த அரசு எடுத்த தீவிர நடவடிக்கையினால் நீண்டநாட்களாக பணியில் நிரந்தரம் செய்யப்படாத 4391 தோட்டத் தொழிலாளர்கள் தற்போது நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

**குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு:**

- பள்ளிக்குச் செல்ல வேண்டிய சிறார்களை பணிக்கு அமர்த்தும் கொடுமை உலக அளவில் இருந்தாலும், இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் இந்த முறையை ஒழிப்பதில் அரசு மிகுந்த வேகத்துடன் செயல்பட்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படும் காரணங்கள் எதுவாக இருந்தாலும், இந்த முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் அரசு தீவிர ஆர்வம் காட்டி வருகின்றது. குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ள உரிமையாளர்கள் மீது வழக்கு தொடரப் பட்டுள்ளது.

**(அ) அரசு உதவித் தொகை:**

- உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களின் குடும்பத்தில் உள்ள ஒரு நபருக்கு அரசே வேலை அளிக்க வேண்டும், இல்லையென்றால் அரசு தன்பங்காக ரூ. 5,000/–





அளிக்கிறது. இதற்காக அரசால் ரூ. 4 கோடியே 75 இலட்சம் தொகை நிதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதியின் கீழ் இதுவரை 155 பேருக்கு 5000 ரூபாய் வீதம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) சிறப்புப் பள்ளிகள் :**

- விருதுநகர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி, சேலம், கோயம்புத்தூர், வேலூர் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர்களுக்காக 327 சிறப்புப் பள்ளிகள் அமைக்கப்பட்டு, அவற்றில் 15,405 குழந்தைகள் படிக்கின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் 2000ஆம் ஆண்டு முதல் குழந்தைத் தொழிலாளர் களுக்கான சிறப்புப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், குழந்தைத் தொழிலாளர் குடும்பத்திற்கு உதவித் தொகையாக மாதம் ரூ.100/– அளிக்கப்பட்டு வருகிறது. இத்துடன் குழந்தைகளுக்கு இலவச உணவு, நோட்டு புத்தகம் மற்றும் கல்விக்குரிய அனைத்து சலுகைகளும் அளிக்கப்படுகின்றன.

**(இ) குழந்தைத் தொழிலாளர் குறித்த விழிப்புணர்வு:**

- யுனிசெப் நிறுவனம் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்காக 1998 ஆம் ஆண்டு 24 லட்சத்து 31 ஆயிரத்து 500 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது. இதன் மூலம் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை பற்றிய விழிப்புணர்வு பேரணிகள், கருத்தரங்குகள்,

கலை நிகழ்ச்சிகள், மனிதச்சங்கிலி ஆகியவை நடத்தப்பட்டன. தொழிலாளர் நலத் துறையின் மூலம் அகில இந்திய வானொலி நிலையத்தில் குழந்தைத் தொழிலாளர் விழிப்புணர்வு விளம்பரங்கள் 60 நாட்களுக்கு ஒலிபரப்பப் பட்டன. மேலும், 20 இலட்சம் தபால் அட்டைகளில் இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான வாசகம் தபால் துறையின் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டது.

**குறைந்தபட்ச ஊதியம் :**

- 1996–ல் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் அமைப்பு ரீதியற்ற 17 தொழில் இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. 1996 முதல் இன்றுவரை 5 தொழில்களுக்கு முதல்முறையாக குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது தவிர, 64 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து வந்த 4292 புகார்கள் மீது விசாரணை நடத்தி அதில் 2880 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு 5 கோடியே 2 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் நிவாரணமாக வழங்க உத்தரவிடப்பட்டது.

**வேலையாள் இழப்பீட்டுச் சட்டம்:**

- பணியில் இருக்கும்போது விபத்து நேரிட்டு உயிரிழந்த மற்றும் காயம்பட்ட தொழிலாளர்கள் சார்பாக 1996 முதல் இன்று வரை தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளால் 7665 வழக்குகள் விசாரித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதன்படி 7 கோடியே 37 லட்சத்து 92 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.



**பீடித் தொழிலாளர்கள்**

- பீடித் தொழிலாளர்கள் குடும்பத்தினரின் விவரங்களுடன் கூடிய புகைப்பட அடையாள அட்டை அனைவருக்கும் வழங்கி முடிக்கப்பட்டுள்ளது. பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் வழங்கும் திட்டத்தை இவ்வரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. ஒவ்வொரு வீடும் ரூ. 34,000/– செலவில் கட்டப்படுகிறது. இதற்கான வீட்டுமனையை தமிழக அரசு வழங்குகிறது. இதற்கு கட்டுமான செலவில் ரூ. 20,000/– அல்லது 50 விழுக்காடு மானியமாக மைய அரசு வழங்குகிறது. மீதித் தொகையை நீண்டகால தவணைக் கடனாக ஹட்கோ நிறுவனம் வழங்கி வருகிறது. பீடித் தொழிலாளர்கள் நல நிதியிலிருந்து மத்திய அரசிடமிருந்து மானியத் தொகை பெற்று தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்களின் துயர் துடைப்பதற்காக மேலப்பாளையம் மற்றும் முக்கூடலில் 1000 வீடுகள் கட்ட பணி ஆரம்பிக்கப்பட்டு 148 வீடுகள் 13–3–2000–ல் திறந்து வைக்கப்பட்டது. மற்ற வீடுகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. மேலும், மாநிலத்தில் பல்வேறு இடங்களில் 1650 வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**வேலைவாய்ப்புத்துறை :**

- 1996ஆம் ஆண்டு 25,520 பேரும், 1997ஆம் ஆண்டு 34,785 பேரும், 1998ஆம் ஆண்டு 23,716 பேரும், 1999ஆம் ஆண்டு 25,506 பேரும் வேலைவாய்ப்புத் துறை மூலம் பல்வேறு பணியிடங்களில் பணியமர்த்தப்பட்டனர். வேலைவாய்ப்பு பதிவு நிறுவனங்களில் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் புதுப்பிக்க அளிக்கப்பட்டு வந்த கால அவகாசம் 12 மாதங்கள் என்பது 2.9.1996 முதல் 18 மாதங்களாக அதிகரிக்கப்பட்டது. 1993, 1994, 1995 ஆகிய ஆண்டுகளில் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியமையால் காலாவதியாக்கப் பட்ட பதிவுகளை மீண்டும் உயிர்ப்பித்துக்கொள்ள அவகாசம் அளித்து 28.10.1996 அன்று ஆணையிடப்பட்டது. இதன் மூலம் 1,08,201 விண்ணப்பதாரர்களின் காலாவதியான பதிவுகள் உயிர்ப்பிக்கப்பட்டன. அதே போல, 1996, 1997, 1998 ஆகிய ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கும் சலுகை அளிக்கும் நோக்கில் 25.5.1999 அன்று அளிக்கப்பட்ட சலுகை காரணமாக 51,886 பதிவுகள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டன. எஸ்.எஸ்.எல்.சி.க்கும் குறைவான கல்வித் தகுதியுடன் வேலை தேடி

பதிவு செய்துள்ளவர்களுக்கு, அவர்களுடைய பதிவு காலத்தில் ஒவ்வொரு மூன்று ஆண்டிற்கும் ஒரு ஆண்டு வீதம் அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகள் வரை வயது வரம்பில் சலுகை வழங்கிட 2.2.2000 அன்று ஆணையிடப்பட்டது. இதன் மூலம் 5 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் பயனடைகிறார்கள். புதிதாகத் தொடங்கப்பட்ட திருவள்ளூர், நாமக்கல், தேனி, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 7.2.1997 அன்றும், பெரம்பலூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் 4.11.1997 அன்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டன.



- தொழிற்சாலைகளுக்குத் தேவையான தேர்ச்சி பெற்ற கைவினைஞர்களை உருவாக்கிடும் அரசின் சீரிய முயற்சிகளை நிறைவு செய்திடும் வகையில் தொழிற் பயிற்சி அளிக்க தனியார் துறையின் பங்கு ஊக்குவிக்கப் படுகிறது. 1996–97ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், இளைஞர்கள் தொழிற் பயிற்சியின் பயனை அடையும் வகையில் 218 பஞ்சாயத்து யூனியன்களில் எங்கெல்லாம் தொழிற்பயிற்சி நிலையங்கள் இல்லையோ அங்கெல்லாம் மூன்று ஆண்டு காலத்தில் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தோற்றுவிக்கப்படும் என்று அறிவித்ததற் கிணங்க, அங்கீகாரம் பெற்ற தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை 438–லிருந்து 590–ஆக உயர்ந்துள்ளது. இத்தொழிற்பயிற்சி நிலையங்களின் மொத்த இருக்கைகளின் எண்ணிக்கை 60,796 ஆகும்.

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் (E.S.I)**

- 1995–96இல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 34.8 இலட்சம் பேர். இது இந்த ஆண்டில் 45.9 இலட்சம் பேர் என்ற அளவிற்கு பெருகியுள்ளது. 2 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் திருச்சியில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்று தொழிலாளர்களுக்காக ஏப்ரல் 99இல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ராசிபுரம், நாங்குனேரி, காரைக்குடி, சோளிங்கர், வானூர், கழுகுமலை, சங்கரலிங்காபுரம், காரியாப்பட்டி, நல்லாற்றுபாளையம் ஆகிய இடங்களில் புதிதாக ஈ.எஸ்.ஐ. மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கோவை கணபதியில் சுமார் 15 இலட்சம் ரூபாய் செலவில் புதிய ஈ.எஸ்.ஐ. மருந்தகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்காக 2 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதலாக 52 குடியிருப்புகள் புதிதாக ஏற்படுத்தப் பட்டுள்ளன. சென்னை அயன்புரத்தில் 3 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் 193 கூடுதல் குடியிருப்புகள் புதிதாக ஏற்படுத்தப் பட்டுள்ளன.



- 1969ஆம் ஆண்டு கலைஞர் முதன் முதலாக முதல்வர் பொறுப்பையேற்றபோதுதான் மே தினத்திற்கு ஊதியத்துடன் விடுமுறை அளிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- 1971ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முறையாக குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டத்தை நடைமுறைப்படுத்தி விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருந்த வீட்டு மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்கியது கலைஞர் அரசுதான். இதன் மூலம் வீட்டு மனைப்பட்டா பெற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஒரு இலட்சத்து 73 ஆயிரத்து 748 பேர்.

- 1990ஆம் ஆண்டு மே தினத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி சென்னை நேப்பியர் பூங்காவிற்கு மே தினப் பூங்கா எனப் பெயரிட்டு அங்கு மே தின நினைவுச் சின்னத்தை அமைத்ததும் கலைஞர் அரசுதான்.

தமிழகத்திலே தொழில் தொடங்குவோரை ஊக்குவிக்க இங்கே நிலவி வரும் தொழில் அமைதியும் ஒரு காரணமாகும். அந்தத் தொழில் அமைதியைக் காத்து, சுமூகமான தொழில் உறவினை நிலைநாட்டவும் தொழிலாளர்களின் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்படவும் இந்த அரசு பாடுபட்டு வருகின்றது.

• • •

தமிழகத்தின் மிகத் தொன்மையான தொழிலான நெசவுத் தொழில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியமான பங்கை வகிக்கிறது. போதிய அளவு தரமான பஞ்சு கிடைக்காமை மற்றும் பஞ்சு விலை ஏற்றம் இவற்றால் பெரும் இடர்ப்பாடுகளை சந்தித்து வரும் நிலையிலும், கைத்தறி நெசவாளர்களின் நூல் தேவையை கூட்டுறவு நூற்பாலைகள் நிறைவு செய்து வருகின்றன. கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், தறிக்கூடத்துடன் இணைந்த வீட்டு வசதித்திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் காப்பீட்டுத் திட்டம், நெசவாளர் நல்வாழ்வு திட்டம் போன்ற பல்வேறு நலத் திட்டங்களை இந்த அரசு முனைந்து செயல்படுத்தி வருகிறது. கூட்டுறவு நூற்பாலைகளை வலுப்படுத்தவும், நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகளை புனரமைக்கவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பல; வழங்கியுள்ள சலுகைகளும் பல.

**நெசவாளர் துயர் துடைக்க தனியாக ஜவுளிக் கொள்கை**

- தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாக தமிழகத்திற்கென தனியாக ஒரு ஜவுளிக் கொள்கை இந்த அரசால் 1997ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கொள்கையின் செயல்பாட்டினை கண்காணிக்க "துணிநெசவு பெருமன்றம்" (State Textile Council) ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இந்த மன்றம் அவ்வப்போது கூடி ஜவுளித் துறையில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வருகிறது.

**தேர்ந்தெடுக்கப்பட்ட கோ-ஆப்டெக்ஸ் நிர்வாகக் குழு**

- அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் (கோ–ஆப்டெக்ஸ்) 1971–ல் நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு மீண்டும் 27 ஆண்டுகளுக்குப் பின் இந்த ஆட்சியில் தான் 1998–ல் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு 1.9.98 முதல் பொறுப்பேற்றுள்ளது.

**கைத்தறி உயர்மட்டக்குழு**

- 1995–96ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் ஜவுளித் துறையில் ஒரு மிகப் பெரிய அவல நிலை ஏற்பட்டது. கூட்டுறவு சங்கங்களிலே உற்பத்தியாகியுள்ள சரக்குகள் விற்பனையாகாமல் மிக அதிக அளவில் தேங்கிக் கிடந்தன. நெசவாளர்களுக்கு நெய்வதற்கு பாவு கிடைக்காத ஒரு நிலை ஏற்பட்டு, அவர்களால் தொடர்ந்து நெசவுத் தொழில் செய்ய முடியாத நிலை தமிழகம் முழுவதும் காணப்பட்டது. 1996ஆம் ஆண்டு இந்த அரசு பதவியேற்ற பின் இந்த அவல நிலையை அறிந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையிலே ஒரு உயர்மட்டக் குழுவினை அமைத்தது. அந்தக் குழு மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, நெசவாளர் பகுதிகளுக்கு நேரில் சென்று, நெசவாளர்களைச் சந்தித்து, அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிந்து, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலே, ஒரே மாதத்தில் பரிந்துரைகளைச் செய்தது. இந்தக் குழுவின் பரிந்துரைகள் மீது

# கைத்தறி நெசவாளரின் காவலன் இந்த அரசு!



உடனடியாக முடிவுகள் எடுத்து அரசு சட்டசபையிலே ஜவுளித் துறை புனரமைப்புக்காக 24 அறிவிப்புகளை வெளியிட்டது.

- புரட்சிகரமான இந்த அறிவிப்பின் மூலம் நெசவுத் தொழிலுக்கே புத்துயிர் ஊட்டப்பட்டு, மிகப் பெரிய அபாயம் தவிர்க்கப்பட்டு, கைத்தறி நெசவாளர்களுக்கு புதிய வாழ்வு அளிக்கப்பட்டது.

- கைத்தறித் துணி விற்பனைக்கு வழங்கப்படும் தள்ளுபடி மானியத் தொகை ஆண்டுக்கு 100 நாள் என்றிருந்ததை மாற்றி 1.4.1998 முதல் ஆண்டு முழுவதற்கும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு அவ்வாறே வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ ரூபாய் 75 கோடி செலவில் தள்ளுபடி மானியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**தேங்கிய கைத்தறி துணிகளுக்கு கூடுதல் தள்ளுபடி**

- ரூபாய் 365 கோடி மதிப்புள்ள தேங்கியிருந்த கைத்தறித் துணிகளுக்கு மே 1998 முதல் அக்டோபர் 1998 முடிய 6 மாத காலத்திற்கு கூடுதலாக 10 விழுக்காடு சேர்த்து 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டது. இதனால் விற்பனையான துணியின் மதிப்பு ரூபாய் 202 கோடி.

- மேலும் சிறப்புக் கொள்முதல் திட்டத்தின் கீழ் 50 கோடி ரூபாய் அளவிற்கு சரக்குகள் கோ—ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்யப்பட்டது.

**கைத்தறி லுங்கி ரகத்திற்கு சிறப்புத் தள்ளுபடி**

- லுங்கி சரக்கு தேக்கத்தினை குறைக்க 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடியினை லுங்கி ரகங்களுக்கு 31.3.99 முடிய நீட்டித்து அனுமதிக்கப்பட்டது. இதனால், கூடுதலாக விற்பனையான லுங்கியின் மதிப்பு ரூபாய் 11.45 கோடி.

## கூட்டுறவு சங்கங்களுக்கு தள்ளுபடி நிலுவை

**மானியத் தொகை**

- 1994–95, 1995–96 ஆகிய ஆண்டுகளுக்கு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படாமல் இருந்த தள்ளுபடி நிலுவை மானியத் தொகை 43 கோடியே 25 இலட்சம் ரூபாய், இந்த அரசால் 1998–99 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

**கோ-ஆப்டெக்சின் மொத்த விற்பனை உயர்வு**

- இந்த அரசின் சீரிய முயற்சிகளின் காரணமாக 1995–96 ஆம் ஆண்டில் கோ—ஆப்டெக்சில் நடைபெற்ற மொத்த விற்பனையான 257 கோடியே 55 இலட்சம் ரூபாய் என்ற அளவிலிருந்து 1999–2000 ஆம் ஆண்டில் 326 கோடியே 79 இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.

**கோ-ஆப்டெக்சின் சில்லறை விற்பனை உயர்வு**

- தமிழக அரசினால் அளிக்கப்பட்ட 30 விழுக்காடு தள்ளுபடியின் காரணமாக, எந்த ஆண்டும் நடைபெறாத அளவிற்கு 1998–99 ஆம் ஆண்டில் கோ—ஆப்டெக்சில் சாதனை அளவாக 163 கோடியே 77 இலட்சம் ரூபாய் அளவிற்கு சில்லறை விற்பனை நடைபெற்றது.

**இழப்பிலிருந்து மீண்டு இலாபத்தில் இயங்கும் கோ-ஆப்டெக்ஸ்**

- 1995–96 ஆம் ஆண்டில் 7.28 கோடி ரூபாய் நிகர இழப்பில் இயங்கி வந்த கோ—ஆப்டெக்ஸ் இந்த அரசின் சீரிய முயற்சியால் நிகர லாபம் ஈட்டியுள்ளது. இழப்பை சரிக்கட்டி லாபகரமாக இயக்குவதற்கு கோ—ஆப்டெக்சில் சில்லறை விற்பனையை அதிகப்படுத்துதல், பட்டு விற்பனையை அதிகப்படுத்துதல், மொத்த விற்பனையை அதிகப்படுத்துதல், நூல் விற்பனையை அதிகப்படுத்துதல், புதிய ரகங்கள் மற்றும் புதிய வடிவமைப்புகளை உருவாக்கி மேம்படுத்துதல், பழைய சரக்குகளை விற்று தீர்த்தல் மற்றும் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய 7 அம்சத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

அதன் மூலம் அது வரையில் இழப்பில் இயங்கி வந்த கோ—ஆப்டெக்ஸ் தற்போது நிகர லாபம் ஈட்டத் தொடங்கியுள்ளது. 1995–96 ஆம் ஆண்டில் 7 கோடியே 28 இலட்சம் ரூபாய் நிகர இழப்பில் இயங்கிய கோ—ஆப்டெக்ஸ் படிப்படியாக சீரடைந்து 1996–97ல் 10 இலட்சம் ரூபாய், 1997–98ல் 20 இலட்சம் ரூபாய், 1998–99ல் 1 கோடியே 36 இலட்சம் ரூபாய் மற்றும் 1999–2000ல் 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் என மொத்தம் நான்காண்டுகளில் 2 கோடியே 71 இலட்சம் ரூபாயை நிகர இலாபமாக ஈட்டியுள்ளது.

**நெசவாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை உயர்வு**

- 60 வயதிற்குமுன் இறக்கும் நெசவாளர்களின் வாரிசுகளுக்கு நெசவாளர் காப்பீட்டுத் திட்டத்தின் (Group Insurance Scheme for Handloom Weavers) கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 1996-97ஆம் ஆண்டில் 15,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு 1999-2000ல் 40,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. 1.4.2000 முதல் இத்தொகை 50,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

- மேலும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் பங்குத்தொகை 18.9.96ல் 5,000 ரூபாய் என்றிருந்ததை 1.4.99 முதல் 8,000 ரூபாய் எனவும், 1.4.2000 முதல் 10,000 ரூபாய் எனவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

- இந்த நெசவாளர் காப்புறுதித் திட்டத்தின்கீழ் மட்டும், 1996-97 முதல் இதுவரையில் 68 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் 324 நெசவாளர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனால் முந்தைய ஆட்சிக் காலத்தில் ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்ட தொகை 48 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மட்டுமே.

**நெசவாளர்களுக்கு கூலி உயர்வு**

- 1997இல் நெசவாளர்களின் கூலியை இந்த அரசு பத்து விழுக்காடு அளவிற்கு உயர்த்தியது. மேலும் ஆண்டுதோறும் பத்து விழுக்காடு அகவிலைப்படி அளிக்கப்பட்டு வருகிறது.

**நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்**

- கைத்தறி நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் திட்டத்தினை இந்த அரசு 1-4-1997 முதல் அறிமுகப்படுத்தி, கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களாக இருந்து 60 வயதை அடைந்த நெசவாளர்களுக்கு மாதம் ரூபாய் 150 வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டது. 2000-2001ஆம் நிதி ஆண்டிலிருந்து இந்த ஓய்வூதியம் 150 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. 7,151 நெசவாளர்கள் இந்த ஓய்வூதியப் பயனைப் பெறுகின்றனர்.

**கைத்தறி பிரதம சங்கங்களிடமிருந்து துணி கொள்முதல் உயர்வு**

- கடந்த ஆட்சியில் பிற மாநிலங்களில் உள்ள கைத்தறி நிறுவனங்களிடமிருந்து கணிசமான அளவு துணிகள் கொள்முதல் செய்யப்பட்டதால் தமிழ்நாட்டில் உள்ள பிரதம கைத்தறி நெசவாளர் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்த துணிகளின் அளவு பெருமளவு குறைந்து மிகுந்த பாதிப்பு இருந்தது. 1996-97ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் தமிழ் நாட்டிலுள்ள சங்கங்களிடமிருந்து செய்யப்படும் கொள்முதல் கணிசமாக உயர்ந்துள்ளது. இந்தத் துணிகள் அனைத்தும் தமிழ்நாட்டில் உள்ள பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்க ளிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப் பட்டதால் நெசவாளர்களுக்கு நல்ல முறையில் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளித்ததுடன் பிரதம சங்கங்களிடம் சரக்கு தேக்கம் அதிக அளவில் இல்லாத சூழ்நிலையும் ஏற்பட்டது. பிரதம சங்கங்களின் உற்பத்தியை சீர்படுத்தவும், கோ-ஆப்டெக்சின் தேவையை சங்கங்களுக்கு முன்கூட்டியே தெரிவித்து அதற்கேற்றாற்போல் உற்பத்தியை மாற்றியமைக்கவும், அனைத்து பிரதம சங்கங்களுக்கும் உற்பத்தித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அத்திட்டத்தின்படி கொள்முதலும் நடைபெற்று வருகிறது.

- 1991-92முதல் 1995-96 வரை கொள்முதல் செய்யப்பட்ட துணிகளின் மதிப்பு 720 கோடியே 14 லட்சம் ரூபாய். ஆனால், 1996-97 முதல் இதுவரையில் 1067 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் கைத்தறி பிரதம



சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்யப் பட்டுள்ளன.

**தரமான சரக்குகள்**

- கைத்தறி துணிகளின் தரத்தை வாடிக்கை யாளர்களுக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் எற்கனவே இருந்த நீளம் மற்றும் அகலக் குறைவை சரி செய்து தரமான துணிகளுடன் குறிப்பிட்ட நீளம் மற்றும் அகலம் உள்ள துணிகளை உற்பத்தி செய்து வாடிக்கையாளர்களுக்கு வழங்க தரக் கட்டுப்பாட்டு முறை சீர் செய்யப்பட்டது.

**ரக அபிவிருத்தி**

- கைத்தறி துணி என்றாலே ஒரே மாதிரியான டிசைன், ஒரே மாதிரியான கலர் என்ற எண்ணங்களை முழுமையாகக் களையவும், கைத்தறியில் தொடர்ந்து புது வடிவமைப்பு மற்றும் புது வண்ணங்களில் துணிகளை வாடிக்கை யாளர்களுக்கு வழங்கும் நோக்கத்துடன் ரக அபிவிருத்தி திட்டம் தீவிரமாக செயல் படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டிற்கு ரூ.2 கோடி அளவிற்கு இருந்த ரக அபிவிருத்தி திட்டம் நடப்பு ஆண்டில் ரூ.20 கோடி அளவிற்கு விரிவாக்கம் செய்யப்பட்டு சேலைகள் மட்டுமல்லாமல் படுக்கை விரிப்புகள், துண்டுகள், வேட்டிகள், திரைச்சீலைகள் ஆகிய ரகங்களிலும் புதிய வடிவமைப்பு முறை அமல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்திற்கு முதன்முறையாக கணினிகள் உதவியுடன் உருவாக்கப்பட்ட வடிவமைப்புகள் நடைமுறைப்படுத்தப்படுவதால் அதிக அளவில் குறுகிய காலத்தில் வாடிக்கையாளர்கள் விரும்பும் வண்ணம் புதிய வடிவமைப்புகள் உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த முயற்சியினால் வாடிக்கையாளர்களின் தேவையை அதிக அளவில் நிறைவு செய்வதால் விற்பனை பெருகியதோடு சங்கங்களில் தேக்கம் என்ற நிலை வெகுவாக மாறிவருகிறது.

**இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம்**

- வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கும், நிலமற்ற ஏழை விவசாயிகள், கிராமப் புற கைவினைஞர்கள், இலங்கைத் தமிழ் அகதிகள் மற்றும் முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கும் ஆண்டுதோறும், பொங்கல் திருநாளையொட்டி இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மேலும் 5 விழுக்காடு கூடுதல் வினியோகம் செய்ய ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- கடந்த ஆட்சியில் இலவச வேட்டி சேலை திட்டத்தின் கீழ் நீளம் மற்றும் அகலம் குறைந்த வேட்டி, சேலைகளும் பிற மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வேட்டி, சேலைகளும் இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்தது. இதை முற்றிலுமாக மாற்றி முழுமையாக தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட தரமான வேட்டி, சேலைகள் இத்திட்டத்தில் வழங்கப்பட்டதால் பயனாளிகளிடம் அமோக வரவேற்பு இருந்ததுடன் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நெசவாளர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளில் வருடந்தோறும் 77 இலட்சம் பெண்களும், 70 இலட்சம் ஆண்களுமாக மொத்தம் 147 இலட்சம் பயனாளிகளுக்கு எவ்வித குறைபாடின்றி குறித்த காலத்தில் இந்த திட்டத்தை நிறைவேற்றியது அரசின் சாதனையாகும். நடப்பு ஆண்டில் 155 இலட்சம் பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் வேட்டி,சேலை வழங்கப்பட உள்ளது.

**பள்ளிச் சீருடை**

- கடந்த ஆட்சியில் இத்திட்டத்தின் கீழ் தனியார் மில் மூலமாக பெறப்பட்ட துணிகள் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆட்சியில் இந்த திட்டத்திற்கு தேவைப்படும் துணிகள் அனைத்தும் தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவே தயாரிக்கப்பட்டு வழங்கப்படுவதால் நெசவாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டதுடன் தரமான துணிகளை உற்பத்தி செய்வது உறுதி செய்யப்பட்டது.

**அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சித் துறைகளுக்கு சீருடை வழங்குவது.**

- கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து நல்ல வேலைவாய்ப்பினை அளிக்கும் வகையில் அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களின் அனைத்துத் துணித் தேவைகளுக்கும் கைத்தறித் துணிகளையே வாங்க வேண்டும் என அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது.



ஆகியவை ஏற்றுமதி செய்யப் படுகின்றன. சென்னிமலை, கவுந்தப்பாடி, விஜயமங்கலம், ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை மற்றும் கரூர் ஆகிய இடங்களில் ஏற்றுமதி ரகங்கள் தயாரிக் கப்படுகின்றன.

- 1995–1996–ல் ஒரு கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களே ஏற்றுமதி செய்யப்பட்டன. 1999–2000–ல் 5 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

**மகளிர் கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு விளிம்புத் தொகை (Margin Money)**

- கைத்தறி நெசவில் பெண்கள் அதிக அளவில் ஈடுபடுவதால் மகளிருக்காகவே தனியாக கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதை ஊக்குவிக்க, அந்த சங்கங்களில் உள்ள மகளிர் உறுப்பினர்களுக்கு அரசு வழங்கும் விளிம்புத் தொகை அல்லாது கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் மகளிர் உறுப்பினர்களுக்கு தலா 1000 ரூபாய் விளிம்புத் தொகையாக வழங்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**நூல் விநியோகம்**

- பிரதம சங்கங்கள் நூல் கொள்முதல் செய்வதை ஒழுங்குபடுத்தவும், பணத்தட்டுப்பாட்டினால் நெச வாளர்களின் தொழில் வாய்ப்பு பாதிக்கப்படாமல் இருக்கவும், தரமான நூல்கள் தடையின்றி கிடைக்க மாதந்தோறும் கோ–ஆப்டெக்ஸின் துணி கொள்முதல் தொகையில், ஒரு குறிப்பிட்ட அளவு சங்கங்களுக்கு நூல் விநியோகம் செய்ய நூல் பாஸ் புக் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு வங்கியில் பணம் இல்லாத நேரத்தில்கூட நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

**கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதி**

- கோ–ஆப்டெக்ஸில் 1975–ல் தொடங்கப்பட்ட ஏற்றுமதி பிரிவின் மூலம் மேசை விரிப்பு, படுக்கை விரிப்பு, பிளேஸ்மேட், துண்டுகள், சமையல் அறையில் உபயோகிக்கும் துணிவகைகள், திரைச்சீலைகள், வீட்டு உபயோக துணிவகைகள்

**நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகள் புனரமைப்பு**

- தொடர்ந்து இழப்பில் இயங்கி வந்த நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகளுக்கு புத்துயிர் அளித்திட ரூபாய் 185 கோடியே 76 இலட்சம் அளவிற்கு பணப்பயனும், பிற சலுகைகளும் அடங்கிய புனரமைப்புத் திட்டம் இந்த அரசினால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. மேலும், விருப்ப ஓய்வில் செல்லும் தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு அரசு நிதியுதவி ரூபாய் 17 கோடியே 50 இலட்சம் அளித்து விருப்ப ஓய்வுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

**அரசு திட்டங்களை அறிந்து கொள்ள நெசவாளர் கையேடு**

- அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களையும் நெசவாளர்கள் அனைவரும் அறிந்து, அனைத்துப் பயன்களையும் பெறும் வண்ணம் எல்லாத் திட்டங்களின் செயல்பாடு களையும் உள்ளடக்கிய ஒரு நெசவாளர் கையேடு தயாரிக்கப்பட்டு அனைத்து நெசவாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டம்**

- தறிக் கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 1996–97 ஆம் ஆண்டு முதல் 1999–2000 ஆண்டு வரை 3120 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 7 கோடியே 51 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 2000–2001 ஆண்டு இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1190 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதில், சென்னிமலையில் 25 நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு ஒரே இடத்தில் 1010 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

#### நெசவாளர் நல்வாழ்வு திட்டம்

- நெசவாளர் நல்வாழ்வு திட்டத்தின் கீழ் 1996–97ஆம் ஆண்டு முதல் 1999–2000 ஆண்டு வரை 29,980 நெசவாளர்கள் பயனடையும் வகையில் ரூபாய் 2 கோடியே 68 இலட்சம் அரசு மானியமாக வழங்கியுள்ளது.

#### பட்டு நூல் கடனுக்கு தண்டவட்டி ரத்து

- கடனில் வாங்கிய பட்டு நூலுக்கு தவணை தவறிய பாக்கிக்கு "டான்சில்க்" வசூல் செய்யும் 3 விழுக்காடு தண்டவட்டி 1998–ஆம் ஆண்டில் ரத்து செய்யப்பட்டது.

#### ஏற்றுமதியைப் பெருக்க திட்டங்கள்

- உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தால் ஏற்படும் தாக்கங்கள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டு ஒரு கருத்தரங்கு துறையால் நடத்தப்பட்டுள்ளது. இது போன்று, மீண்டும் ஒரு கருத்தரங்கம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், நெசவுத் துறையில் எதிர்கொள்ளவிருக்கும் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டுச் சந்தை வழி சவால்களை சமாளிப்பதற்கும், உலக அளவில் ஏற்றுமதியை பெருக்குவதற்கும் அரசால் தகுந்த திட்டங்கள் தீட்டப்பட்டு, 200 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் 10,000 தறிகளில் ஏற்றுமதி உற்பத்தி தொடங்கப்பட்டு 1999–2000 ஆண்டில் ரூபாய் 27 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டில் ரூபாய் 100 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டு இதுவரை ரூபாய் 52 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்றுமதி ரக உற்பத்தியில் ஈடுபடுவதன் மூலம் சங்கங்கள் காசுக்கடன் கணக்கில் பெறப்படும் கடன் தொகை குறைந்து சங்கங்களின் வட்டி இழப்பு குறைக்கப் பட்டுள்ளதுடன், நெசவாளர்கள் பெறும் கூலியும் கணிசமாக உயர்ந்துள்ளது.

#### கூட்டுறவு நெசவுத் துணி வகைகளுக்கு வணிகப் பெயர்

- நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி வகைகளுக்கு தனியாக வணிகப் பெயர் உருவாக்கி விற்பனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

#### நெசவுத் துணிவகைகளுக்கு சிறப்பு வணிக வளாகங்கள்

- "லூம் வேர்ல்டு" (Loom World) என்ற பெயரில் கோயம்புத்தூர் மற்றும் சென்னையில் வணிக வளாகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. பல்வேறு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணிவகைகள் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதற்கு நுகர்வோரிடையே நல்ல வரவேற்பு உள்ளதால் மற்ற முக்கிய நகரங்களிலும் இதுபோன்ற வணிக வளாகங்களை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

#### தனித்துவ பழம்பெருமை பெற்ற துணிவகைகளுக்கு காப்புரிமை

- பூகோளக் குறியீடு சட்டம் 1999ன் கீழ் காஞ்சிபுரம் பட்டு, மதுரை சுங்கடிச் சேலைகள், பவானி ஜமக்காளம் ஆகியவற்றைப் பதிவு செய்து காப்புரிமை (Patent Rights) பெற துறை தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

#### ஏற்றுமதியைப் பெருக்க ஏற்றுமதி மையம்

- ஏற்றுமதி விற்பனையை ஊக்குவிக்கும் முகத்தான் ஏற்றுமதி உற்பத்தி செய்யும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் இடையே ஒரு பாலமாக அமையும் வகையில் கைத்தறி இயக்ககத்தில் ஒரு ஏற்றுமதி மையம் (Export Interaction Centre) துவங்கப் பட்டுள்ளது. இம்மையத்தில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செய்யும் ஏற்றுமதி ரகத் துணி வகைகளின் மாதிரிகள் ஏற்றுமதியாளர்களின் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன.

#### கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் கணினிமயமாக்கம்

- இத்துறையின் அனைத்து அலுவலகங்கள் மற்றும் சங்கங்களின் செயல்பாடுகளை மேம்படுத்திட கணினி மயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

#### நெசவாளர் இடர் களைய குறை தீர்க்கும் பிரிவு

- நெசவாளர்களின் இடர்களை அவ்வப்போது களையும் நோக்கோடு ஒவ்வொரு அலுவலகத்திலும் குறை தீர்க்கும் பிரிவு துவங்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் குறைகள் தீர்க்கப்பட்டு வருகிறது. மேலும், ஒவ்வொரு சரகத்திலும் காலாண்டிற்கு ஒரு முறை சிறப்பு குறை தீர்க்கும் நாள் கைத்தறி இயக்குநர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் உயர் அலுவலர் முன்னிலையில் நடத்தப்படுகிறது. இதற்கு நெசவாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

- கடந்த 4 1/2 ஆண்டுகளில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 104 கோடியே 17 இலட்சம் ரூபாய் அளவிற்கு கதர் மற்றும் பட்டுத் துணி உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது. இவ்வாரியத்தின் மூலம் 115 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கதர் மற்றும் பட்டுத் துணி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் இதுகாறும் நூற்பாளர்கள், நெசவாளர்களுக்கு நலத்திட்டங்கள் ஏதும் இல்லாமல் இருந்து வந்தது. அவர்களது குடும்பங்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழக அரசு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் நூற்பு மற்றும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்க ஆணை யிட்டுள்ளது.

- இந்த அரசு பொறுப்பேற்றதும் கூட்டுறவு சங்கங் களுக்கு தேர்தல்களை நடத்திட உத்திரவிட்டது. அதன்படி தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் உள்ள 1,416 தொடக்க கூட்டுறவு சங்கங்களுக்கு முறையாக தேர்தல் நடத்தப்பட்டு தொழிற் கூட்டுறவு சங்கங்களின் பொறுப்புகள் யாவும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மற்றும் நிர்வாகக் குழுவினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

- பெண்களுக்கென தனியாக எல்லா இடங்களிலும் 33 சதவிகித ஒதுக்கீடு வேண்டும் என்ற கொள்கையினை ஆதரித்து வரும் இந்த அரசு, இந்த நிதியாண்டில் முழுக்க முழுக்க பெண்களே நிர்வகிக்கக்கூடிய 20 கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்ய முடிவு செய்து இதுவரை 14 கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் 33 பேரை 1997–98 ஆம் ஆண்டு நிரந்தரப் பணியாளர்களாக பணியமர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. 1999–2000 ஆம் ஆண்டில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வந்த 97 முதுநிலை நூற்பாளர்கள் மாத தொகுப்பூதியம் 1000 ரூபாய் விகிதத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- 1999 ஆம் ஆண்டு முதல் திறமை மிக்க நெசவாளர் மற்றும் கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறந்த கைவினைஞர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- தற்பொழுது கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் வகையில், நூற்பவர்கள் மற்றும் தறி நெய்பவர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு அளித்திடும் வகையிலும் கதர் ரகங்களை அனைத்து தரப்பு மக்களும் விரும்பி அணிந்திட ஏதுவாக இந்த ஆண்டு அனைத்து கதர் பருத்தி, பாலிவஸ்திரா ரகங்களுக்கு ஆண்டு முழுவதும் 30 சதவிகிதம் தள்ளுபடியும், கதர் பட்டு ரகங்களுக்கு 20 சதவிகிதம் தள்ளுபடியும் வழங்கி தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1996–97 ஆம் ஆண்டு தறிகளை நவீனப்படுத்திட 500 கதர் நெசவாளர்களுக்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிற்கு அச்சு விழுதுகள் மான்யத்தில் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 600 பட்டு நெசவாளர்கள் பயனடையும் வகையில் 200 ஜக்காடு பெட்டிகள் வழங்க 7 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மான்யமாக அரசு வழங்கியுள்ளது.



கதர் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள 6 கதிர் மற்றும் 12 கதிர் இராட்டைகளில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் பருத்தி மற்றும் பாலியஸ்டர் நூற்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. நவீன முறையில் நூல் உற்பத்தித்திறனை அதிகரித்திட 8 கதிர் கொண்ட இராட்டையினை கதர் ஆணைக்குழு அறிமுகம் செய்துள்ளது. இப்புதிய 8 கதிர் நவீன இராட்டையினை கதர் ஆணைக்குழுவிடமிருந்து பெற்று 5 பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் கிராமப்புறங்களில் வாழும் 125 பெண் நூற்பாளர்கள் பயன் பெறுகிறார்கள்.

• • •

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் சீர் மரபினர் நலன்!

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் நலனுக்காக இந்த அரசு இந்த நாலரை ஆண்டுகளில் ஆற்றிவரும் பணிகளைத் தொகுத்து வழங்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கான வரலாற்றில் **1951**ஆம் ஆண்டு ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் செயலுக்கு வரத் தொடங்கியவுடன், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அரசாணையைச் செயல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அரசாணையை கல்வி நிறுவனங்களில் செயல்படுத்துவதை எதிர்த்து செண்பகம் துரைராஜன் என்பவரும், அரசுப் பணிகளுக்கான நியமன விஷயத்தில் இந்த அரசாணைச் செயல்படுத்துவதை எதிர்த்து திரு. வெங்கட ரமணா என்பவரும் வழக்கு தொடர்ந்தனர். இவ்விரண்டு வழக்குகளிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அரசாணை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்பதால் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பினையடுத்து, தமிழகமெங்கும் கிளர்ச்சிகளும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. எதிர்ப்புகளின் விளைவாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் முதல்முறையாக திருத்தப்பட்டு, **15(4)** எனும் புதிய பிரிவு சேர்க்கப்பட்டு அதன்படி கல்வி மற்றும் சமூக நிலையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு ஏற்படுத்த வேண்டுமென்ற நடைமுறை தோன்றியது! அப்போது நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர் பண்டித நேரு அவர்கள், “சென்னை மாகாணத்தில் நடைபெற்ற சில சம்பவங்கள்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டதற்கு அடிப்படைக் காரணம் என்பதை இந்த அவை நன்கு அறியும். அதனை மூடி மறைத்து, பூசி மெழுக வேண்டிய அவசியமில்லை என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் இடஒதுக் கீட்டுக் கொள்கையை மறு ஆய்வு செய்யும் பிரச்சினை பலமுறை எழுப்பப்பட்டு வந்தாலும், முதல்முறையாக கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் **1969**–ஆம் ஆண்டில், திரு.ஏ.என். சட்டநாதன் அவர்கள் தலைமையில் **13.11.1969** அன்று பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காகவும், அவர்தம் நிலையை மேம்படுத்தவும் அரசு அதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளை ஆராயவும், கல்வி வசதிகள், அரசுப் பணிகளில் பிரதிநிதித்துவம், வீட்டுவசதி, மானிய உதவிகள்,



சமுதாய நல வளர்ச்சி ஆகிய முனைகளில் அவர்களுடைய நிலையை மேம்படுத்த மாநில அரசு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று பரிந்துரை செய்யவும், தமிழ்நாட்டு வரலாற்றில், முதன்முதலில் அமைக்கப்பட்ட குழு இதுதான். இக்குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில், அதுவரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு

16 சதவீதம்; பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு 25 சதவீதம்; பொதுப் போட்டிக்கு 59 சதவீதம்; என்றிருந்த இடஒதுக்கீட்டு அளவை மாற்றியமைத்து, 7.6.1971 அன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18சதவீதம்; பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 31 சதவீதம்; பொதுப் போட்டிக்கு 51 சதவீதம் என்று ஆணை வெளியிடப்பட்டது;

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு உரிய சலுகைகளைப் பெற வேண்டுமானால், அவர்களது ஆண்டு வருமானம் 9 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு இருக்கக் கூடாது என்ற உச்சவரம்பு விதித்து, 2.7.1979 அன்று அதற்குப் பொதுமக்களிடையே எழுந்த எதிர்ப்பின் காரணமாகவும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அன்றைய எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு எதிராக இருந்ததாலும், வருமான உச்சவரம்பு விதிப்பதை 1.2.1980 அன்று அரசு திரும்பப் பெற்றுக் கொண்டு, அன்றைய தினமே, பிற்படுத்தப் பட்டோருக்கான இடஒதுக்கீடு 31 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள பல்வேறு வகுப்புகள், கல்வி நிலையங்கள் மற்றும் வேலை வாய்ப்புகளில் தங்களுக்குரிய பங்கினை பெறமுடியவில்லையென்ற உணர்வு மேலோங்கி, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்க்கு தனி ஒதுக்கீடு வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்று வந்ததையொட்டி, பிற்படுத்தப் பட்டோருக்கான 50 சதவீத இடஒதுக்கீட்டில், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்க்கு 20 சதவீதம் ஒதுக்கியும், மீதமுள்ள 30 சதவீதத்தை பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கியும், கலைஞர் மூன்றாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப் பேற்றதற்குப் பின்னர் 28.3.1989 அன்று ஆணையிடப்பட்டது;

1990–ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பினையொட்டியும் தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியினர் மக்கள் தொகையை கருத்தில்கொண்டும் பொதுப் போட்டிக்கான ஒதுக்கீட்டிலிருந்து தனியே ஒரு விழுக்காடு பழங்குடியினருக்கும், 18 விழுக்காடு தாழ்த்தப்பட்டோருக்கும், 20 விழுக்காடு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கும், 30 விழுக்காடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், 31 விழுக்காடு பொதுப் போட்டிக்கும் என 22.6.1990 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அத்துடன், இட ஒதுக்கீடு என்பது மாநிலத்தில் உள்ள கல்வி நிலையங்கள், மற்றும் பணி நிலைகளில் மட்டுமின்றி அகில இந்திய அளவிலும் வழங்கப்பட வேண்டுமென்று நீண்ட காலமாகவே கலைஞர் குரல் எழுப்பி வந்தார். அதன் தொடர்ச்சியாக 21.8.1990 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மிகுந்த மகிழ்ச்சியோடும், பெருமையோடும் கலைஞர் முன்மொழிந்த நன்றி அறிவிப்புத் தீர்மானம் பின் வருமாறு :

*“நீண்ட நெடுங்காலமாகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிறைவேறாத கோரிக்கையாக இருந்த, மத்திய அரசின் பணிகளிலும் மற்றும் மத்திய அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனங்களின் பணிகளிலும் இட ஒதுக்கீடு என்பதை அரசியல் சட்டத்தின் 340வது பிரிவின்படி அமைக்கப்பட்ட மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று, 27 விழுக்காடு ஒதுக்கீடு செய்து, ஆகஸ்ட் 7ஆம் நாள் பாராளு மன்றத்தில் தேசிய முன்னணி அரசின் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் அறிவித்ததுடன், அதனை அன்று முதலே நடைமுறைப்படுத்த ஆணையும் பிறப்பித்துள்ளதை இந்தப் பேரவை மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறது.*

*12.5.1989 அன்று இந்தப் பேரவை பல ஆண்டுகளாக கவனிக்கப்படாமல் இருந்த மண்டல் குழு பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்குப் பல வேண்டுகோள்கள் விடப்பட்டன என்பதை நினைவு கூர்கிறோம். இந்திய வரலாற்றிலேயே புதியதோர் சகாப்தமாக சமூக நீதி வழங்கிடும் இந்தப் புரட்சிகரமான முடிவையெடுத்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும் பிரதமர் திரு.வி.பி.சிங் அவர்களுக்கும் இந்தப் பேரவை தனது இதயமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.”*

அரசின் நிதிநிலை அறிக்கைகளிலே அறிவிக்கப்படும் திட்டப் பயன்கள் பெருமளவுக்கு நலிந்த பிரிவினரையே சென்றடைகின்றன எனினும், இதுவரை பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் நலத்துறை மூலம் விளைந்துள்ள நன்மைகள் இதோ!

**கலைஞர் ஆட்சியில்தான் தனித் துறை**

பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென தனியாக ஒரு இயக்குநரகம் 1969ம் ஆண்டு அரசால்



தொடங்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென தனியே ஓர் அமைச்சரை நியமித்ததும், அதற்கென மானியக் கோரிக்கை ஒன்றை அறிமுகப்படுத்தியதும் 1971–ம் ஆண்டு கலைஞர் அரசில்தான்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலனுக்குத் தனியே திட்டங்களையும், செயல்முறைகளையும் வகுத்தளித்திடத் தலைமைச் செயலகத்தில் தனியாக ஒரு துறை 1989–ஆம் ஆண்டிலேதான் தோற்றுவிக்கப்பட்டது.

மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான திட்டங்களைச் செயலாக்குவதில் தனிக் கவனம் செலுத்தும் பொருட்டு 1989ம் ஆண்டு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இயக்குநரகம் கலைஞர் அரசால் தோற்றுவிக்கப்பட்டது.

**உயர்ந்துள்ள நிதி ஒதுக்கீடு**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஆட்சிக் காலத்தில் 1995–96ல் ரூ.47.27 கோடி என்றிருந்ததற்கு மாறாக, 2000–2001ல் ரூ.175 கோடியாக, அதாவது மூன்றரை மடங்கிற்கு மேலாக உயர்த்தப்பட்டுள்ளது.

**பெரியார் விருது**

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கு அரிய பணி ஆற்றியுள்ள ஒருவருக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் பெரியார் விருதுக்கு 5 சவரன் தங்கப் பதக்கம் மட்டுமே என்றிருந்ததை மாற்றி 1996 மற்றும் 1997–ஆம் ஆண்டுகளில் இவ்விருது பெறுவோருக்கு ரூபாய் 20,000 ரொக்கமும், மூன்று சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு, 1998ஆம் ஆண்டு முதல் பரிசுத் தொகை ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு அத்துடன் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வருகிறது. 1996–ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த அரசில் திரு.திருவாரூர் கே.தங்கராசு, திரு.எஸ்.தவமணிஇராசன், திரு.நாத்திகம் இராமசாமி, திரு.நன்னிலம் நடராசன், திரு.திருச்சி என்.செல்வேந்திரன் ஆகியோருக்குப் பெரியார் விருது வழங்கப்பட்டுள்ளது.

**இலவச வீட்டுமனைகள்**

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு கடந்த கால ஆட்சியில் 1 கோடி ரூபாய் என்றிருந்ததை, 1996ல் ரூ.2 கோடியாகவும், 1997ல் ரூ.10 கோடியாகவும், 2000–2001ல் ரூ.14 கோடியாகவும் உயர்த்தப் பட்டுள்ளது. மிகப் பிற்படுத்தப் பட்டோருக்கு இலவச வீட்டுமனை வழங்க கடந்த ஆட்சியில் 1991 முதல் 1996வரை செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 5 கோடி ரூபாய் மட்டுமே; ஆனால் 1996 முதல் இதுவரை நிதி ஒதுக்கீடு 46 கோடி ரூபாய்.

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் பிற்படுத்தப் பட்டோருக்கும் முன்னேறிய வகுப்பினருக்கும் முறையே ரூ.5 கோடி செலவிலும், ரூ.3 கோடி செலவிலும் 1997ல் விரிவுபடுத்தப்பட்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

1996–97 முதல் 30.9.2000 வரை 55193 மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கும், 1997–98 முதல் 30.9.2000 வரை 35541 பிற்படுத்தப்பட்டோருக்கும் 1875 முன்னேறிய பிரிவினருக்கும் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. வீட்டுமனை பெற பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ.12000/லிருந்து கிராமப்புறங்களில் ரூ. 16000/–ஆகவும், நகர்ப் புறங்களில் ரூ.24000/–ஆகவும் 27.11.2000 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12000 என்று 1989–ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு, பயன் பெறுவோர் எண்ணிக்கையை உயர்த்திட வேண்டும் என்னும் நோக்கத்தில் 1996ல் ரூ.25000 ஆகவும், 31.5.2000ல் ரூ.50,000 ஆகவும் உயர்த்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

1996க்குப் பின் இந்த நான்கரை ஆண்டுகளில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்காக 137 புதிய விடுதிகள் 4 கோடி ரூபாய்ச் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டு ஆட்சியில் இதற்காக 1 கோடியே 67 லட்சம் ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டது.

இந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியரின் மாத உணவுக் கட்டணம் ரூ.135 என்பது ரூ.180 ஆக 1997–98லும், ரூ.225 ஆக 1998–99லும் உயர்த்தப்பட்டது.

கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் மாத உணவுக் கட்டணம் ரூ.250 என்று 2.5.97–ல் நிர்ணயிக்கப் பட்டது, 1.10.1997ல் ரூ.300 எனவும், 1998–99ல் ரூ.400 எனவும் உயர்த்தப்பட்டது.



10ஆம் வகுப்பு மாணவ–மாணவியர்க்கு அனைத்துப் பாடப் புத்தகங்களும் இலவசமாக 1996ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. அதைப் போலவே 1999–2000 ஆண்டு முதல் 9ம் வகுப்பு மாணவ, மாணவியருக்கும் அனைத்து பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்கான செலவினம் ரூ.64.48 இலட்சம்.

மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் அதிகமாகப் படிக்க முன்வரவேண்டும் என்பதை கவனத்தில் கொண்டு அவர்களது கல்வியை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு 1999–2000 ஆண்டிலிருந்து மூன்றாம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் அறுபதாயிரம் மிகப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.500 என்றும், ஆறாம் வகுப்பு படிக்கும் முப்பதாயிரம் மாணவிகளுக்கு ஆண்டுக்கு 1000 ரூபாய் என்றும் வழங்க ஆறு கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிகளில் சேர்வதற்கு குடும்ப வருமான வரம்பு ரூ.15000 என்பது ரூ.50000 ஆக 1998–99ல் உயர்த்தப்பட்டது.

2000–2001 முதல் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரில் மேல்நிலைப்பள்ளித் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தொழிற் கல்வியில் சேரும் 500 மாணவர்கள் மற்றும் 500 மாணவியர்க்கு ஆண்டொன்றுக்கு ரூ.1500/– வீதம் ஐந்தாண்டுகள் அல்லது முதல் பட்டப்படிப்பு முடியும் வரையில் சிறப்பு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

1998ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளைச் சார்ந்த குடும்பங்களின் முதல் நபருக்கு பாலிடெக்னிக் நிறுவனங்களில் பட்டயப் படிப்பில் (டிப்ளமா கோர்ஸ்) இலவசக் கல்வி வழங்கிட ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். தேர்வுகளுக்கு பிற்படுத்தப் பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் தனிப் பயிற்சி நிலையத்தில் தங்கியுள்ள மாணவரின் மாத உணவுக் கட்டணம் ரூ.250 என்பது ரூ.500 ஆக 1996ல் உயர்த்தப்பட்டது. 1998ல் பயிற்சி பெறுவோரின்

எண்ணிக்கை 50 என்பது 100 ஆகவும் உயர்த்தப்பட்டது.

1999–2000 முதல் சென்னையிலுள்ள பிற்படுத்தப் பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் அகில இந்திய பணித் தேர்வுக்காக நடத்தப்பட்டு வரும் தனிப்பயிற்சி நிலையத்தையும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தனிப்பயிற்சி மையத்தையும் ஒருங்கிணைத்து, அகில இந்தியப் பணிகளுக்கான பயிற்சியின் தரத்தை உயர்த்தவும், தேர்வு செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் முடிவு செய்து அண்ணா மேலாண்மை நிலையத்திடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்புப் பயிற்சிகள்.**

1999–2000 ஆண்டில் பட்டப் படிப்பு படித்த 1500 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு ரூ.59.66 இலட்சம் செலவில் சிறப்பு கணினி பயிற்சி அளிக்கப்பட்டது.

2000–2001ம் ஆண்டு முதல் பிற்படுத்தப் பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 5000 மாணவ, மாணவியர்களுக்கு 6 கோடியே 90 லட்சம் ரூபாய்ச் செலவில் உயர்நிலை சிறப்பு கணினி பயிற்சி அளிக்க ஆணை வெளியிடப்பட்டது.

1998–99ம் ஆண்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் பிரிவுகளைச் சேர்ந்த 2000 பேருக்கு 3 மாத பயிற்சி காலத்திற்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிக்கான கட்டணத் தொகை தலா ரூ.9000லிருந்து ரூ.12200 ஆக உயர்த்தி அரசால் வழங்கப்பட்டது. இந்த பயிற்சிக் கட்டணத்தை 30.12.1999 முதல் 15500 ஆக உயர்த்தி, அதனால் ஏற்படும் ரூபாய் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் கூடுதல் செலவுத் தொகையை அரசே ஏற்பதற்கு ஒப்புதல் அளித்து ஆணையிடப்பட்டது.

இவை நீங்கலாக தானியங்கி பொறியியல், குளிர்சாதன மற்றும் குளிர்பதனப் பெட்டி பழுது பார்த்தல், ஆடை தயாரிப்பு, கணினியில் ஆடை வடிவமைப்பு, பிளாஸ்டிக் செய்முறை, இயந்திரம் இயக்குதல், தோல் பொருட்கள் தயாரித்தல்,காலணி தயாரிப்பு,தையல் இயந்திரம் இயக்குதல், மருத்துவ சோதனைக்கூட தொழில் நுட்பம், செவிலியர் உதவியாளர், ஆடை வடிவமைப்பு, அலங்கார ஆடை விரிவாக்கம், ஆடை உற்பத்தித் தொழில்நுட்பவியல், தட்டச்சு, சுருக்கெழுத்து, தொலைபேசி இயக்குதல் ஆகியவற்றில் 1996க்குப் பின்னர் ஆண்டு தோறும் 2477 நபர்களுக்கு 8.15 கோடி ரூபாய்ச் செலவில் வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 21 மகளிருக்கு ஆண்டு தோறும் செவிலியர் உதவியாளராகப் பயிற்சி அளித்து வந்ததை உயர்த்தி 250 மகளிருக்கு பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

1998–99 முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் பிரிவுகளைச் சேர்ந்த 60 பெண்களுக்கு கணினி உதவியுடன் ஆடை வடிவமைப்பு, அலங்கார ஆடை விரிவாக்கம் மற்றும் ஆடை உற்பத்தி தொழில்நுட்பவியல் ஆகியவற்றில் 11.80 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புப் பயிற்சிகளுக்கு கடந்த கால ஆட்சியில் 1991–96 வரை 1 கோடியே 24 லட்சம் ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததற்கு மாறாக, இந்த ஆட்சியில், 1996க்குப் பின்னர் இதுவரை 27 கோடியே 15 லட்சம், அதாவது இருபது மடங்கிற்கு மேல் உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலை வாய்ப்புப் பயிற்சிகள் மிகச் சிறப்பான முறையில் வழங்கப்பட்டு வருகின்றன. வேலை வாய்ப்புப் பயிற்சிகளுக்கென 2000–2001ஆம் ஆண்டில் மட்டும் நிதி ஒதுக்கீடு 20 கோடியே 38 லட்சம் ரூபாயாகும்.

**இதர உதவிகள்**

கடந்த ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 20,000 சலவைப் பெட்டிகளே வழங்கப்பட்டன. மாறாக இந்த நான்கரை ஆண்டுக் கால ஆட்சியில் 3 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 32,000 சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

2000–2001 முதல் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இயற்கை எய்தினால் இறுதிச் சடங்கிற்கு ரூ. 500/– வழங்கப்படுகிறது.

**போராட்டத்தில் பலியானோர் குடும்பத்திற்கு நிதி உதவி**

20 விழுக்காடு இட ஒதுக்கீடு கோரி 1987ல் நிகழ்ந்த சமூக நீதிப் போராட்டத்தில் பலியான 23 தியாகிகளின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 3 இலட்ச ரூபாய் நிவாரண உதவியும், அவர்களின் குடும்பத்தினருக்கு மாத ஓய்வு ஊதியமாக ரூ.1500



விதமும் அனுமதித்து 7.4.1998 அன்று ஆணையிடப் பட்டது.

**பணியிடங்களில் பங்கீட்டை ஆராய உயர்நிலைக் குழு**

அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் பணியிடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பிரதிநிதித்துவம் குறித்து ஆய்வு செய்ய பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் தலைமையில் 1.6.1998 அன்று உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் வ. வேலுச்சாமி, மீ.அ. வைத்திய லிங்கம், வாசுகி முருகேசன், ஆர்.ஆர். சேகரன், பி. வேல்துரை, நா. பெரியசாமி, ஏ.வி. அப்துல் நாசர், இரா. தாமரைக்கனி, ஜி.கே. மணி, எல். சந்தானம், டி. மணி, ஆ. ராசேந்திரன் என்கிற தீரன், ஆ. வெங்கடாசலம், ஆகிய சட்டமன்ற அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாகச் செயல்பட்டார்கள். இந்த உயர்நிலைக்குழு வழங்கிய பரிந்துரைகள் ஆய்வு செய்யப்பட்டு, பத்தும் அதற்கு மேலும் எண்ணிக்கை உள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கு மட்டுமே இடஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டும் என்னும் விதி 21.9.1999 அன்று மாற்றப்பட்டது.

ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கை உள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கும் இடஒதுக்கீடு முறை பின்பற்றலாம் என்று 21.9.1999 அன்றும், பணிமாறுதல் முறை மூலம் செய்யப்படும் நியமனங்களில் நிரப்பப்படாத பணியிடங்களை முன்கொணர் முறை (carry forward), ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினருக்கு உள்ளது போல், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கும் விரிவுபடுத்தலாம் என்று 2.5.2000 அன்றும், நேரடி நியமன முறையில் தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கும் உள்ள முன்கொணர் முறையை, பிற்படுத்தப்பட்டோருக்கும் விரிவு படுத்தலாம் என்று 2.5.2000 அன்றும், இட ஒதுக்கீட்டு முறையை பல்கலைக்கழகங்கள், தலைமை கூட்டுறவு நிறுவனங்கள், வங்கிகள், பொதுத்துறை நிறுவனங் களுக்கும் விரிவுபடுத்தலாம் என்று 28.10.1999 அன்றும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு உரிய பிரதிநிதித்துவம் இல்லையெனில், எத்தனை பணியிடங்கள் குறைகின்றதோ, அப்பணியிடங்களை ஒவ்வொரு பதவியிலும் 1.4.89 முதல் கணக்கில் கொண்டு அத்துறையிலுள்ள நுழைவுப் பதவியில் (Entry Level post) படிப்படியாக ஐந்தாண்டு காலத்திற்குள் நியமனம் செய்யலாம் என்று 2.5.2000 அன்றும், எங்கெல்லாம் இடஒதுக்கீட்டு முறைக்கு வகை செய்யப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் இன சுழற்சி முறையை பின்பற்றாதவர்கள் மீது குடிமைப்பணி விதியின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து கடும் தண்டனை வழங்கலாம் என்று 21.9 1999 அன்றும் முடிவு செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்யப்படும் போது, முதல் 10 இடங்களில் மிகப் பிற்படுத்தப் பட்டோருக்கு 13.8.1992 முதல் வழங்கப்பட்டு வந்த ஒரு இடம் என்பது, 2000-2001ல், இரண்டு

இடங்களாக மாற்றி அமைக்கப்பட்டது. இதன் மூலம் ஒவ்வொரு பத்து இடங்களிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இரண்டு இடங்கள் என்பது உறுதி செய்யப்பட்டது.

**சட்டமன்றத்தில் வெள்ளை அறிக்கை**

2000–2001ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை 24.3.2000 அன்று சட்டமன்றப் பேரவையில் வைத்து ஆற்றிய உரையில் கலைஞர் குறிப்பிட்டபடி, மாநில அரசுப் பணியிடங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் இடஒதுக்கீடு, அவர்களின் தற்போதைய பிரதிநிதித்துவம் மற்றும் இதன்மீது அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கை 11.5.2000ல் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டது. இந்த அறிக்கையில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான பின்னடைவுப் பணியிடங்கள் என்று தெரிவிக்கப்பட்ட 5263 பணியிடங்களை ஐந்து ஆண்டு காலத்திற்குள் நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டதோடு அதற்கான நடவடிக்கைகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கள்ளர் சீரமைப்பு**

கள்ளர் சீரமைப்புத் துறையில் 20 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 7 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 7 உயர் நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் 1996ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் ரூ.1.62 கோடி செலவில் நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 28 பள்ளிகளுக்கு 42.72 இலட்சம் ரூபாய் செலவில் ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. 57 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கென 1996 முதல் இதுவரை 45.27 இலட்சம் ரூபாய்ச் செலவில் கழிவறை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 52 பள்ளிகளில் 1996 முதல் இதுவரை 40.70 இலட்சம் ரூபாய்ச் செலவில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 36 பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் 1996 முதல் இதுவரை 49.93 இலட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டன.

ரூ.135 லட்சம் செலவில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளிலும், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் விடுதிக் கட்டடங்களிலும் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகள் 1996 முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்டன.

**பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**

இந்தக் கழகத்தின் சார்பில் கடந்த ஆட்சியில் 1991–96 காலகட்டத்தில் 9 கோடியே 46 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. ஆனால் இந்த ஆட்சியில், 1996 முதல் இதுவரையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர்க்குச் சிறுதொழில்கள் தொடங்கி, பொருளாதார முன்னேற்றம் காண 16 கோடியே 78 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு சிறுபான்மையினர்**
**பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**

தமிழகத்திலுள்ள சிறுபான்மையினர் நலனுக்காக வும், அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற் காகவும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1.7.99அன்று தனி அமைப்பாக உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு.அபுல்ஹசன் பணியாற்றி வருகிறார். 31.10.2000 வரையில் 591 சிறுபான்மையினருக்கு 2 கோடியே 51 இலட்சம் ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

**சிறுபான்மையினர் நல ஆணையம்**

தமிழகத்தில் முதன்முதலில் சிறுபான்மையினர் நல ஆணையம், கலைஞர் ஆட்சியில் 13.2.1989 அன்று தொடங்கப்பட்டது. அதன் தலைவராக முதன் முதலில் திரு.வி.எம். அப்துல் ஜப்பார் அவர்களும், துணைத் தலைவராக பேராசிரியர் ஏ.எஸ்.எம்.மரியநல்லு அவர்களும், உறுப்பினர்களாக திரு.எம்.சாந்திலால் ஜெயின், திரு.கே.பி. கொட்டாரக்கரா, திரு.பி.ஒபுல் ரெட்டி, திரு.கே.எஸ்.ஷெட்டி ஆகியோரும் நியமிக்கப் பட்டனர். 1996 செப்டம்பரில் இந்த ஆணையம் திருத்தி அமைக்கப்பட்டு, பேராயர் எஸ்றா சற்குணம் தலைவராகவும், திரு.சேலம் அமானுல்லாகான் துணைத் தலைவராகவும், அருள்திரு. வின்செண்ட் சின்னதுரை அமைப்பாளராகவும், சட்டமன்ற உறுப்பினர் ஹாஜி முகமது இஸ்மாயில், திரு.தமன் பிரகாஷ் மற்றும் திருமதி சரோஜா சதாசிவம் ஆகியோர் உறுப்பினர்களாகவும் பணியாற்றி வருகின்றனர். இந்த ஆணையம், சிறுபான்மை யினரின் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசுக்குப் பரிந்துரை செய்கிறது.

### உருது அகாடமி

இஸ்லாமிய சமுதாயத்தினரின் நீண்டநாள் கோரிக்கை ஏற்கப்பட்டு, தமிழகத்தில் உருது அகாடமி 15 இலட்ச ரூபாய் தொடக்க முதலீட்டுடன் அமைக்கப்பட்டு, அதனை 21.7.2000 அன்று முதல்வர் கலைஞர் தொடங்கி வைத்தார். இந்த அகாடமிக்கு கல்வி அமைச்சர் தலைவராகவும், டாக்டர் சையது சஃபியுல்லா துணைத் தலைவராகவும் உள்ளனர். மேலும் இந்த அகாடமி, அரசால் நியமனம் செய்யப்படும் செயலர் மற்றும் பதிவாளர், நிதித் துறைச் செயலர், உயர்கல்வித் துறைச் செயலர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை செயலர், பேராசிரியர் டாக்டர் நிசார் அகமது, பேராசிரியர் டாக்டர் சையது சஜ்ஜத் உசைன், திரு.வி.கவிஷ் பத்ரி, டாக்டர் பர்வீன் பாத்திமா, டாக்டர் சையது ஜலாலுதீன், டாக்டர் பி.அகமது பாஷா, திரு.சபருல் ஹக் ஷக்கீர், மௌல்வி பஷீருல் ஹக், திருமதி.சபா முஸ்தபா, திரு.அப்துல் ரஷீத், திரு.ஹர்பஜன் சிங், திரு.சையது பசுல்லா, மற்றும் மூன்று ஆட்சிக் குழு நியமன உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது.



### உலமாக்களுக்கு ஒய்வூதியம்

கடந்த ஆட்சிக் காலத்தில் உலமாக்களின் மாத ஒய்வூதியம் ரூ.400 என்றிருந்தது, இந்த ஆட்சியில் 1996–97ல் ரூ.500 ஆக உயர்த்தப்பட்டது. கடந்த ஆட்சிக் காலத்தில் 2000 உலமாக்கள் ஒய்வூதியம் பெற்று வந்ததற்கு மாறாக, 1998க்குப் பின்னர் 2200 உலமாக்கள் ஒய்வூதியம் பெற்று வருகின்றனர். 19.7.2000 முதல் உலமாக்களுக்கு வழங்கும் உலமா ஒய்வூதியத் திட்டம் தர்க்காக்களில் பணிபுரியும் முஜாவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### வக்ஃபு வாரியத்திற்கு மானியம்

1998–99–ஆம் ஆண்டில் மதுரை வக்ஃபு வாரிய கல்லூரிக் கட்டடங்களை பராமரிப்பதற்கென முதன் முதலாக ரூ.5.95 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. 1999–2000–ஆம் ஆண்டில் வக்ஃபு சொத்துக்களைப் பராமரிப்பதற்கென முதல் முறையாக ரூ.40 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்தது. ஒவ்வொரு நிதியாண்டிற்கும் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு நிர்வாக செலவிற்கென வழங்கப்பட்டு வந்த அரசின் மானியத் தொகை ரூ.30 இலட்சத்திலிருந்து ரூ.45 இலட்சமாக 2000–2001ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது.

### ஹஜ் குழுவிற்கு மானியம்

ஆண்டுதோறும், தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு வழங்கப்பட்டு வந்த நிர்வாக மானியம் ஐந்து இலட்சம் என்பது 1998–99ஆம் ஆண்டிலிருந்து ஏழு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஹஜ் புனிதப் பயணத்திற்கென 1800 பேருக்கு மிகாமல் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட முறை கைவிடப்பட்டு, 1999–ஆம் ஆண்டு முதல், மனுச்செய்யும் அனைத்து ஹஜ் புனிதப் பயணிகளும், பயணம் மேற்கொள்ள இவ்வரசு வழிவகை செய்துள்ளது.

• • •

இந்த ஆண்டு 24-3-2000 அன்று கலைஞர் அளித்த நிதி நிலை அறிக்கையிலே தெரிவித்தவாறு தமிழக அரசின் வருவாய்க் கணக்கிலே வரவு 18,406 கோடி ரூபாயாகும். இதில் வரி வருவாய் மூலமாக மாத்திரம் வரவு 12,500 கோடி ரூபாயாகும். இந்தத் தொகையில் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஒய்வூதியதாரர்கள் ஆகியோருக்கான ஊதியம், ஒய்வூதியம் ஆகியவற்றுக்கான செலவு மட்டும் 12,100 கோடி ரூபாயாகும். அதாவது வரி வருவாயில் 96 சதவிகிதமாகும். இவ்வளவு பெரிய தொகை ஏதோ தனிப்பட்டவர்களுக்காக தரப்படுவது என்று பொருள் கொள்ளக் கூடாது. அரசு அலுவலர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியத்தொகை என்பது திட்டத்தோடு சேர்ந்து செலவழிக்கப்படுகின்ற தொகையாகும். அவர்கள் பாடுபட்டால்தான் திட்டம் நிறைவேறும். அரசு அலுவலர்களும் சேர்ந்துதான் திட்டம். எனவே அரசு அலுவலர்களுக்காக தரப்படுகின்ற ஊதியத் தொகையை திட்டத்திற்காக செலவழிக்கப்படுகின்ற தொகையாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். இதோ, அரசு அலுவலர்களுக்காக இந்த அரசு செய்த சாதனைகளின் தொகுப்பு!

# அரசு அலுவலர் - ஆசிரியர்களின் பொற்காலம் இது!

கலைஞர் அரசு 3வது முறையாக ஆட்சிக்கு வந்தவுடன் மாநில அரசின் 5வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாகவும் – அதைவிட அதிகமாகவும் தமிழக அரசு ஊழியர்களுக்கு 1989ஆம் ஆண்டு புதிய ஊதிய விகிதங்களை வழங்கியமையால் ஓராண்டில் ஏற்பட்ட கூடுதல் செலவு 443 கோடி ரூபாய். மீண்டும் நான்காவது முறையாச ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு மத்திய அரசின் ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில், மத்திய அரசு தனது ஊழியர்களுக்கு வழங்கிய ஊதிய உயர்வு அளித்த அதே நாளிலிருந்தே (1-1-1996) தமிழக அரசு அலுவலர்களுக்கும் பயன் கிடைக்கத்தக்க விதத்தில் தென்னகத்திலேயே முதலாவதாக ஆண்டு ஒன்றுக்கு 1,230 கோடி ரூபாய் கூடுதல் செலவில் புதிய ஊதிய விகிதங்களை வழங்கியது.

மேலும் ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் சில குறைபாடுகள் இருப்பதாக வந்த கோரிக்கையை ஏற்று ஒரு நபர் ஆணையத்தினை அமைத்து அதன் பரிந்துரைகள் அடிப்படையில் இடைநிலை, பட்டதாரி, முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு சுமார் 75 கோடி ரூபாய் கூடுதல் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது.

சத்துணவுப் பணியாளர்களுக்கு சுமார் 60 கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது.

மைய அரசு ஆசிரியர்களுக்கு வழங்கிய ஊதிய விகிதங்களை தமிழக அரசும் தமிழகத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கியதையொட்டி ஏற்பட்ட ஊதிய முரண்பாடுகளைக் களைவதற்காக அமைச்சுப் பணியாளர்களுக்கு மத்திய அரசு வழங்கிய ஊதியத்தை விட கூடுதலாக 5 விழுக்காடு கனி ஊதியம் 1.9.1998 முதல் வழங்கப்பட்டது.

அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் இதே நிலையில் இருக்கும் அனைத்துப் பணியாளர்களுக்கும் ஊதியத்தில் 5 விழுக்காடு தனி ஊதியம் வழங்கியதால் ஏற்பட்ட கூடுதல் செலவு 83 கோடி ரூபாய். ஆக மொத்தம் ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரையை ஏற்றதின் காரணமாக அரசு ஆண்டு ஒன்றுக்கு 1448 கோடி ரூபாய் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், சத்துணவுப் பணியாளர்கள் ஆகியோருக்கு கூடுதலாக வழங்கியது.

இது தவிர, ஒய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஒய்வூதியதாரர்களுக்கு 40 விழுக்காடு உயர்வு மற்றும் பல ஒய்வூதியப் பயன்களை வழங்கியதில் ஏற்பட்ட கூடுதல் செலவு 462 கோடி ரூபாய்.

1.1.96 முதல் 31.3.98 வரை ஊதிய உயர்வு நிலுவைத் தொகை வழங்கியதில் அரசுக்குச் செலவு 2400 கோடி ரூபாய்.

அரசு அலுவலர்களின் கோரிக்கையை ஏற்று வீட்டு வாடகைப்படி 1-4-1998 முதல் 100 விழுக்காடு

உயர்த்தப்பட்டதில் ஆண்டுக்கு கூடுதல் செலவு 100 கோடி ரூபாய்.

நகர ஈட்டுப்படி மத்திய அரசுக்கு இணையாக உயர்த்தப்பட்டதில் ஆண்டுக்கு கூடுதல் செலவு 20.17 கோடி ரூபாய்.

பயணப்படி 100 விழுக்காடு உயர்த்தப்பட்டதில் கூடுதல் செலவு 10 கோடி ரூபாய்.

**கிராம உதவியாளர்களுக்கு புதிய ஊதிய விகிதங்கள்**

கிராம உதவியாளர்களுக்கு ரூ.600–10–750 என்று இருந்த ஊதிய விகிதத்தை உயர்த்தி ரூ.1800–20–2240 என்ற ஊதிய விகிதம் அளிக்கப்பட்டது. இதில் பயன்பெற்ற கிராம உதவியாளர்களின் எண்ணிக்கை 26,250.

**சத்துணவு அமைப்பாளர்களுக்கு புதிய ஊதிய ஊதியம்**

சத்துணவு அமைப்பாளர்களுக்கு ரூ.200–5–250–10–400 என்றிருந்த ஊதிய விகிதத்தை உயர்த்தி ரூ.600–10–700–20–1100 என்ற ஊதிய விகிதம் அளிக்கப்பட்டது. இதில் பயன்பெற்ற சத்துணவு அமைப்பாளர்களின் எண்ணிக்கை 91,000.

**தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கும் உயர்த்தப்பட்ட ஊதியம்**

ஐந்தாவது ஊதியக்குழு பரிந்துரைகளையொட்டி அரசு அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கியதைப்போல, தொகுப்பூதியம், மதிப்பூதியம், நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் போன்ற ஊதிய இனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் 40 விழுக்காடு ஊதிய உயர்வு அளித்து, அவர்களுக்கு குறைந்தபட்ச உயர்வாக 50 ரூபாய்க்கு குறையாமல் ஊதியம் வழங்கப்பட்டது. இதன் காரணமாக பயன்பெற்றவர் களின் எண்ணிக்கை 2,04,571.

இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் மத்திய அரசு அகவிலைப்படியை உயர்த்தி அமல்படுத்திய நாளில் இருந்தே தமிழக அரசும் அதன் அலுவலர்களுக்கும் ஓய்வூதியதாரர்களுக்கும் அகவிலைப்படியை உயர்த்தி தந்துள்ளது.

**இதர சலுகைகள்**

பண்டிகை முன் பணம் பெறும் பட்டியலில் சுதந்திரதினம் மற்றும் குடியரசு தினம் சேர்க்கப்படாமல் இருந்தது. 96–97ஆம் ஆண்டு இந்த நாட்களும் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

சுதந்திரப் பொன் விழா ஆண்டு நினைவாக தியாக மனப்பான்மையோடும் கடமை உணர்வோடும் தங்கள் உயிரைத் துச்சமாக மதித்து திறமை காட்டி செயல்படுகின்ற அரசு அலுவலர்களாயினும் காவலர்களாயினும் அவர்களுடைய செயலையும் நிகழ்வையும் பொறுத்து அரசு விருது, பதவிஉயர்வு, பொற்கிழி போன்றவைகளை வழங்கும் திட்டம் இந்த ஆட்சியில் கொண்டுவரப்பட்டது.

**திருமணக் கடன் வழங்கும் திட்டம்**

அரசு அலுவலர் மகள் அல்லது மகனின் திருமணத்திற்காக வாங்கிய முதல் கடன் நிலுவையில் இருக்கும்போது அடுத்து இரண்டாவதாக ஒரு கடன் திருமணத்திற்காக வாங்க இயலாது என்ற தடை நீக்கப்பட்டது.

**அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நகர ஈட்டுப்படி**

அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்கும் திட்டம் முதன்முதல் 17.10.1967 அன்று அன்றைய அண்ணா அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்திட்டத்தின்படி சென்னை, மதுரை நகரங்களுக்கு அனுமதிக்கப்பட்ட நகர ஈட்டுப்படி 15.11.1971 அன்று கோவை மாநகருக்கும், 21.3.1975 அன்று சேலம், திருச்சி ஆகிய மாநகரங்களுக்கும் விரிவுபடுத்தப் பட்டது. 11.9.2000 முதல் நெல்லை மாநகருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**அரசு ஊழியர் இறந்தால், வாரிசுகள் கருணை அடிப்படையில் நியமனம்**

அரசு ஊழியர்கள் பணிக்காலத்தில் இறந்தால் அவர்களது வாரிசுக்கு அரசுப் பணி வழங்க வகை செய்திடும் கருணை அடிப்படையிலான பணி நியமனத் திட்டத்தை 15.2.1972 அன்று அறிமுகம் செய்த கலைஞர் அரசு தொடர்ந்து அதனைச் செயல்படுத்தி வருகிறது.

**அரசு ஊழியர்களுக்கு வாகனக் கடன்**

அரசு ஊழியர்களுக்கு வாகனக் கடன் வழங்கும் திட்டம் 1971–72ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்ட இரண்டு சக்கர வாகனக் கடன் 25,000 ரூபாய் என்பது 35,000 ரூபாயாகவும், புதிய கார் வாங்க வழங்கப்படும் முன் பணம் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாகவும் 1996–1997ல் உயர்த்தப்பட்டது.

**அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்**

பணியிலிருந்து திடீரென மரணம் எய்திடும் அரசு ஊழியர்களின் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 10 ஆயிரம் ரூபாய் வழங்கும் அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்புத்




திட்டம் இந்தியாவிலேயே எங்கும் இல்லாத திட்டமாக, தமிழகத்தில் முதன்முதல் 1974இல் அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்ட நிதியுதவி 20 ஆயிரம் ரூபாய் என்பதை, 1989இல் 40 ஆயிரம் ரூபாயாகவும், 60 ஆயிரம் என்பதை 1996இல் 1 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தியது இந்த அரசு.

**உள்ளாட்சி அலுவலர்களுக்கு நல்வாழ்வு நிதித் திட்டம்.**

அரசு அலுவலர்களுக்கு உள்ளதுபோல, பேரூ ராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் பணியாளர்களுக்கும் நல்வாழ்வு நிதித் திட்டம் தொடங்க ஆணையிடப்பட்டது. இந்த நிதிக்கு அரசு தனது பங்காக ஆண்டு தோறும் இருபது இலட்சம் ரூபாய் வீதம் வழங்கி வருகிறது. இதன்படி சிறப்பு சிகிச்சை மற்றும் சிறப்பு அறுவை சிகிச்சைக்கான செலவில் ஒரு இலட்சம் ரூபாய் அல்லது 75 விழுக்காடு இதில் எது குறைவோ அந்த அளவிற்கு உதவித் தொகை வழங்கப்படும்.

**அரசு ஊழியர்களுக்கு பொங்கல் போனஸ்**

போனஸ் வழங்கப்பட வேண்டும் என்ற அரசு ஊழியர்களின் நீண்ட காலக் கோரிக்கையை ஏற்று, 27.12.1990 அன்று 15 நாள் ஊதியத்தைத் தமிழக அரசு ஊழியர்களுக்கு போனஸாக வழங்க முதன்முதல் ஆணையிட்டது கலைஞர் அரசு. தொடர்ந்து செயல் படுத்தப்பட்டுவரும் அத்திட்டத்தின்மூலம் கடந்த ஆண்டில் 29 நாள் ஊதியம் போனசாக வழங்கப்பட்டது. போனஸ் பெறுவதற்கு நிர்ணயம் செய்யப்பட்ட ஊதிய வரம்பினைக் கடந்த பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் கருணைத் தொகை வழங்கிடவும் 1990ஆம் ஆண்டிலேயே ஆணையிட்டு, தொடர்ந்து அவ்வாறே வழங்கிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் அரசின் பங்கு அதிகரிப்பு**

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் ஓய்வு பெறும்போது அவர்களின் சிறப்பு சேமநல நிதியில் அரசின் பங்காக வழங்கப்படும் 5,000/– ரூபாயினை 15.9.2000 அன்று 10,000/– ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிடப் பட்டுள்ளது.

**புதிய சிறப்பு வருங்கால வைப்பு நிதித்திட்டம்**

"தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சிறப்பு வருங்கால வைப்பு நிதி 2000" என்ற புதிய திட்டத்தை 1.10.2000 முதல்

செயல்படுத்தியுள்ளது. இதன்படி 1.10.2000 முதல் பணியில் சேரும் ஒருவர் மாதம் 70/– ரூபாய் செலுத்தினால் 25 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் ஓய்வு பெறும்போது அவருக்கு 1,00,000/– ரூபாய் கிடைக்கும்.

அரசு ஊழியர்களோ, அவரது குடும்பத்தினரோ மிகக் கொடிய நோயினால் அவதியுறும் பொழுது, அவர்கள் உடனடி சிகிச்சை மேற்கொள்ள ஏதுவாக, மாநிலத்தில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளின் தரங்களை அறிந்து, பரிசீலனை செய்து பல தனியார் மருத்துவமனைகளை அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் சேர்த்துள்ளது.

**வீடுகட்டும் கடன் அதிகரிப்பு**

வீடு கட்டும் கடன் 4 இலட்சம் ரூபாய் என்பதனை 6 இலட்சம் ரூபாயாக 1.4.2000 முதல் உயர்த்தியதுடன் இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டினை 102 கோடி ரூபாயாகவும் உயர்த்தியது இந்த அரசு.

குடிமைப் பணியாளர் கூட்டு மன்றக் கூட்டம் (State Joint Council Meeting) ஆறுமாதத்திற்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும் என்ற அரசு அலுவலர் களின் கோரிக்கை ஏற்கப்பட்டு முதல் கூட்டம் 20–12–2000 அன்று நடைபெறவுள்ளது.

அரசு அலுவலர்களின் கோரிக்கையை ஏற்று 1995க்கு முன்பிருந்தவாறு இளநிலை உதவியாளர்கள் என்றும் தட்டச்சர்கள் என்றும் தனித்தனி பணிகள் ஏற்படுத்தப்படும் என்று 8–9–2000 அன்று ஆணையிடப்பட்டது.

தமிழக அரசின் மருத்துவத் துறையில் பல்வேறு மருத்துவமனைகளில் பதிலிப் பணியாளர்களாக உள்ளவர்கள் அனைவரும் விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் என்பதால் பணியிடங்களில் காலி இடங்கள் ஏற்பட்டால் பதிலிப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படும் என்று இந்த அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டு 21–8–2000 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அதைப்போலவே தொழுநோய்ப் பிரிவு தினக் கூலி பணியாளர்களை அரசுப் பணியில் நிரந்தரப்படுத்திடவும் ஆவன செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டு அதற்கான ஆணை 29–9–2000 அன்று பிறப்பிக்கப்பட்டது.

நெடுஞ்சாலையில் நீண்ட காலமாகத் தினக் கூலி அடிப்படையிலே பணியாற்றி வந்த 682 பேர் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்கள்.

கூட்டுறவு தணிக்கைத் துறையில் ஏற்பட்டுள்ள பதவி உயர்வுக்கான தேக்க நிலையைப் போக்க மேம்படுத்தப்பட்ட பணி இடங்கள் உடனடியாக அனுமதிக்கப்படும் என்று அறிவித்து அதற்கான ஆணை 20–9–2000 அன்று பிறப்பிக்கப்பட்டு விட்டது.

சமூகநலத்துறையில் பணிபுரியும் அங்கன்வாடி, ஊட்டச்சத்து குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கு பணி மூப்பின் அடிப்படையில் செவிலியர் பயிற்சி பெற ஏதுவாக வயதுவரம்பைத் தளர்த்திட அரசு 7–9–2000 அன்று ஆணை பிறப்பித்துள்ளது.

மாவட்டங்களில் 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் பணி மாறுதலில் செல்லும் அரசு அலுவலர்களுக்கு தொடர்ந்து அரசு குடியிருப்பில் வசிக்க 6–9–2000 அன்று அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது.

வீட்டு வசதி வாரியத்தில் வாடகை வீடு ஒதுக்கீடு பெறும் அரசு அலுவலர்கள் இதுவரை அந்த வீடு எந்த நாளிலிருந்து காலியாக இருந்ததோ அந்த நாளிலிருந்தே வாடகை செலுத்திட வேண்டிய நிலை இருந்துவந்தது. இதனால் குடியேறாமலேயே வாடகை செலுத்த வேண்டிய கட்டாயம் அரசு அலுவலர்களுக்கு இருந்தது. இதனை மாற்றி அமைத்துஇனி அரசு அலுவலர்களுக்கு வீட்டு வசதி வாரிய வீடு ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கிய நாள் முதற் கொண்டு வாடகை செலுத்தினால் போதும் என்று 11–9–2000 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தில் தொடர்ந்து 25 ஆண்டுகள் மாநிலத் தலைவராகத் தொண்டாற்றியவரும் அரசுக்கும் அரசு அலுவலர்களுக்கும் இணைப்புப் பாலமாக விளங்கியவரும் இலட்சக்கணக்கான அரசு அலுவலர்களின் பேரன்பிற்குரிய தலைவராக விளங்கியவருமான சிவ. இளங்கோ அவர்கள் அரசு அலுவலர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டினை போற்றும் வகையில் சென்னை பெரியார் நகரில் அவர் வாழ்ந்த அவரது வீடு அமைந்துள்ள எழுபதடி சாலை சிவ இளங்கோ சாலை என்று 19–10–2000 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

**ஆசிரியர்கள் நலன்**

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மத்திய அரசில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான இணையான ஊதிய விகிதம் மாநில அரசில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் அமல்படுத்தப்பட்டுள்ளது. 1–1–1996 முதல் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மத்திய அரசின் ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரைகளுக்கு ஏற்ப ஊதிய விகிதங்கள் திருத்தி அமைக்கப்பட்டன. அவ்வாறு திருத்தி அமைக்கப் பட்ட ஊதிய விகிதங்களை ஒரு நபர் ஆணையம் ஆய்வு செய்து ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களை மேலும் உயர்த்தி மத்திய அரசிற்கு இணையாகப் பரிந்துரை செய்தது. ஒரு நபர் ஆணையத்தின் அப்பரிந்துரைகளை அரசு அப்படியே ஏற்று பின்வருமாறு உயர்த்தி ஆணையிட்டது.

**இடைநிலை ஆசிரியர்கள்**

இடைநிலை ஆசிரியர்களுக்கு முதலில் அறிவிக்கப்பட்ட ரூ.4000–6000 என்ற ஊதிய விகிதம் ரூ.4500–7000 என்ற ஊதிய விகிதமாகவும், இவர்களுக்கு தேர்வு நிலை ஊதிய விகிதம் ரூ.5300–8300 என்றும், சிறப்பு நிலை ஊதிய விகிதம் ரூ.5900–9900 என்றும் உயர்த்தி வழங்கப்பட்டது. இதன் மூலம் 1,02,477 இடைநிலை ஆசிரியர்கள் பயன்பெற்றனர்.

**பட்டதாரி ஆசிரியர்கள்**

பட்டதாரி ஆசிரியர்களுக்கு முதலில் அறிவிக்கப்பட்ட ரூ.5000–8000 என்ற ஊதிய விகிதம் ரூ.5500–9000 என்ற ஊதிய விகிதமாகவும், இவர்களுக்கு தேர்வு நிலை ஊதிய விகிதம் ரூ.6500–10500 என்றும், சிறப்பு நிலை ஊதிய விகிதம் ரூ.8000–13500 என்றும் உயர்த்தி வழங்கப்பட்டது. இதன் மூலம் 42,859 பட்டதாரி ஆசிரியர்கள் பயன்பெற்றனர்.

**முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள்**

முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு முதலில் அறிவிக்கப்பட்ட ரூ.5900–9900 என்ற ஊதிய விகிதம் ரூ.6500–10500 என்ற ஊதிய விகிதமாகவும், இவர்களுக்கு தேர்வு நிலை ஊதிய விகிதம் ரூ.8000–13500 என்றும், சிறப்பு நிலை ஊதிய விகிதம் ரூ.9100–14050 என்றும் உயர்த்தி வழங்கப்பட்டது. இதன் மூலம் 17,445 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் பயன்பெற்றனர்.

**ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்**

ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு முதலில் அறிவிக்கப்பட்ட ரூ.5000–8000 என்ற ஊதிய விகிதம் ரூ.5300–8300 என்ற ஊதிய விகிதமாகவும், இவர்களுக்கு தேர்வு நிலை ஊதிய விகிதம் ரூ.6500–10500 என்றும், சிறப்பு நிலை ஊதிய விகிதம் ரூ.8000–13500 என்றும் உயர்த்தி வழங்கப்பட்டது. இதன் மூலம் 30619 ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் பயன்பெற்றனர்.

**நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்**

நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு முதலில் அறிவிக்கப்பட்ட ரூ.5500–9000 என்ற ஊதிய விகிதம் ரூ.5900–9900 என்ற ஊதிய விகிதமாகவும் இவர்களுக்கு தேர்வு நிலை ஊதிய விகிதம் ரூ.8000–13500 என்றும், சிறப்பு நிலை ஊதிய விகிதம் ரூ.9100–14050 என்றும் உயர்த்தி வழங்கப்பட்டது. இதன் மூலம் 5503 நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் பயன்பெற்றனர்.

**உயர்நிலைப் பள்ளி / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்**

உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு ரூ.6500–10500 ஊதிய விகிதம் வழங்கப்படுகிறது. மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு ரூ.8000–13500 ஊதிய விகிதம் வழங்கப்படுகிறது. இத்துடன் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.500 தனி ஊதியமும், மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.600 தனி ஊதியமும் 1–9–1998 முதல் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 3274 உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியங்களும், 1583 மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும் பயன் பெறுகின்றனர்.

பல்கலைக் கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதத்தை பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசு மாற்றியமைத்ததைத் தொடர்ந்து தமிழக அரசும் இவர்களின் ஊதிய விகிதத்தை முன் தேதியிட்டு 1–1–1996 முதல் மாற்றியமைத்து ஆணை பிறப்பித்தது. இதன் மூலம் சுமார் 28,000 கல்லூரி, பல்கலைக் கழக, பொறியியல் கல்லூரி ஆசிரியர்கள் பயன் பெற்றார்கள். அவர்களுக்கு 178 கோடி ரூபாய் நிலுவைத் தொகையாக வழங்கப்பட்டது.

இடைநிலைப்பள்ளி ஆசிரியர்களைப் பணி நியமனம் செய்யும்போது வேலை வாய்ப்பு அலுவலக பதிவு மூப்பின்படிதான் நியமிக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டதின் மூலம் கடந்த நான்கரை ஆண்டுகளில் ஏழையெளிய குடும்பங்களைச் சேர்ந்த 41,887 பேர் எந்தவித சிரமமும் இல்லாமல் ஆசிரியர் பணி பெற்றனர்.

''நல்லாசிரியர் விருது'' என்ற பெயரில் பல ஆண்டு களாகத் தரப்பட்டு வந்ததை – விருது பெறாத மற்ற ஆசிரியர்கள் எல்லாம் நல்ல ஆசிரியர்கள் இல்லையா என்ற எண்ணம் எழக் கூடும் என்பதால் ''டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது'' என்று 1997இல் இந்த அரசு மாற்றியது. மேலும் இந்த விருது பெறும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட விருதுத் தொகை 500 ரூபாய் என்பதை 1989இல் 1000 ரூபாயாகவும், 1997இல் 2000 ரூபாயாகவும் உயர்த்தியது.

பள்ளிகளில் உள்ள காலிப் பணி இடங்களுக்கு ஆசிரியர் நியமனம் செய்யப்படும்போது மாறுதல் கேட்டுள்ள ஆசிரியர்களுக்கு வாய்ப்பளித்த பின்னர் தான் மீதம் உள்ள காலி இடங்களில் புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் பணி அமர்த்தப்பட வேண்டும் என்று 13–9–2000 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

திறந்தவெளி பல்கலைக் கழகங்கள் மூலம் நேரடியாக முதுகலைப் பட்டம் பெற்று பி.எட். ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு இரண்டு ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

நிதி உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணி புரிந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு குடும்ப நலத் திட்டத்தின்கீழ்

அரசு ஆணைப்படி வழங்கப்பட வேண்டிய தொகையாகிய 5000 ரூபாய் வழங்குவது குறைவான நிதி ஒதுக்கீடு காரணமாக காலதாமதம் ஆவதைத் தடுக்க நிதி ஒதுக்கீட்டைக் கணக்கில் கொள்ளாமல் கருவூலங்கள் பட்டியலை அனுமதித்து தாமதமின்றி நிதி வழங்கப்பட வேண்டுமென்று 27–9–2000 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே ஆசிரியர்களுக்கும் மொத்தப் பணிக் காலத்தில் ஒருமுறை அடிப்படை பதவியில் தேர்வு நிலை, சிறப்பு நிலை ஆகியவற்றில் பணியாற்றிய காலத்தை கணக்கில் கொண்டு உயர் பதவியில் சிறப்பு நிலை நிர்ணயிக்க வேண்டுமென்று ஆணை 5–9–2000 அன்று வெளியிடப் பட்டுள்ளது.

800 ரூபாய் தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்ட தொழில் ஆசிரியர்களுக்கு நியமன நாள் முதல் காலமுறை ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று கடந்த கால அரசால் அறிவிக்கப்பட்டு செயல்முறை படுத்தப்படாமல் இருந்ததை மாற்றி அவர்களுக்கும் உரிய ஊதிய விகிதம் வழங்க 7–9–2000 அன்று ஆணையிடப்பட்டது.

நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் 1–6–1986 முதல் அரசு அலுவலர்கள் என்று அறிவிக்கப்பட்டும் அவர்களுக்குப் பணி விதிகள் நீண்டகாலம் இயற்றப்படாமல் இருந்தது. 28–8–2000 அன்று இதற்கான பணி விதிகள் வெளியிடப்பட்டுள்ளன.



ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளுக்கு சில்லறைச் செலவினம் வழங்குவதைப் போல மாநகராட்சிப் பள்ளிகளின் சில்லறைச் செலவினத்திற்காக கல்வி மேல் வரியிலிருந்து ஒதுக்கீடு செய்ய 20–9–2000 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**ஓய்வூதியம் பெறுவோருக்கான சலுகைகள்**

முழு ஓய்வூதியம் பெற 33 ஆண்டுகள் தேவை என்ற நிலையை மாற்றி, 30 ஆண்டு பணி போதும் என 1.7.1996 அன்று ஆணையிடப்பட்டுள்ளது. ஓய்வூதியம் கணக்கிட, அரசு அலுவலர் ஓய்வு பெறும் நாளன்று அவர் பெறும் அடிப்படை ஊதியத்தில் 50 விழுக்காடாக அவரது ஓய்வூதியம் நிர்ணயிக்கப்படும். ஓய்வு பெறும்போது, கடைசியாகப் பெற்ற மாத ஊதியத்தில், 50 விழுக்காடு அல்லது ஓய்வு பெற்ற நாளுக்கு முன்னர் கடைசி 10 மாத கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 விழுக்காடு இதில் எது அதிகமோ அந்தத் தொகையே ஓய்வூதியமாக 1.7.1996 முதல் வழங்கிட ஆணையிடப்பட்டது.

இத்திட்டம் மைய அரசாலோ அல்லது வேறு மாநில அரசுகளாலோ செயல்படுத்தப்படாத முன்னோடித் திட்டமாகும்.

அரசு அலுவலர்களின் நீண்ட கால கோரிக்கையான தனிப்பட்ட அலுவலுக்காக வழங்கப்படும் அரைச் சம்பளத்துடன் கூடிய விடுப்பினை (Half Pay Leave on Private Affairs) ஒப்படைப்பு செய்வதை அரசு ஏற்றுக்கொண்டு 90 நாட்களுக்கு மிகைப்படாமல் 50 விழுக்காடு விடுப்பினை ஒப்படைப்பு செய்து விடுப்புக்கால முழுச் சம்பளம் வழங்க 96–97இல் ஆணையிடப்பட்டுள்ளது.

ஓய்வு பெறும்பொழுது ஒப்படைப்பு செய்யும் ஈட்டிய விடுப்பிற்கு 180 நாட்களுக்கு மேலுள்ள நாட்களுக்கு விடுப்புக்காலச் சம்பளம் வழங்கும் போது வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற இதரப்படிகளும்



சேர்ந்து முழுச் சம்பளம் வழங்கப்படும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. ஓய்வு பெறும் போது 240 நாட்கள் ஈட்டிய விடுப்பினை ஒப்படை செய்து பணம் பெறும் திட்டத்தில் 180 நாட்களுக்கு மட்டுமே ஊதியத்துடன் அனுமதிக்கப்பட்ட வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி

போன்ற படிகளை எஞ்சிய 60 நாட்களுக்கும் அனுமதித்து 1996–97இல் அறிவித்து ஆணையிட்டது இந்த அரசு.

அரசுப் பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்டது போலவே 40 விழுக்காடு ஒய்வூதியத்தை உயர்த்தி, ஒய்வூதியதாரர்கள் பெற்று வந்த குறைந்தபட்ச ஒய்வூதியம் / குடும்ப ஒய்வூதியம் மாதம் 375 ரூபாய் என்பது 1275 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் பயனடைந்த ஒய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஒய்வூதியதாரர்கள் எண்ணிக்கை 3,27,488.

1.1.1996 முதல் இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்பு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்பது 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக கலைஞர் ஆட்சியில் உயர்த்தப்பட்டுள்ளது.

1.4.1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்குப் பணிக் கொடையைக் கணக்கிடும்போது அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப் படியைச் சேர்த்துக் கணக்கிட வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

1.4.1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் அரசு ஊழியர்கள் ஒய்வூதியத்தில் மூன்றில் ஒரு பகுதி என்பதற்குப் பதிலாக 40 விழுக் காடு வரை மொத்தமாக்கி (Commutation) பெறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

1.7.1996 முதல் ஒய்வூதியம் பெறுவோருக்கும் குடும்ப ஒய்வூதியம் பெறுவோருக்கும் மருத்துவப்படி திங்கள் ஒன்றுக்கு 30 ரூபாய் என்பது 50 ரூபாய் என உயர்த்தி வழங்கப்பட்டது.

1.1.1997 முதல் தமிழ்நாடு ஒய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்ட நிதிக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் ஓராண்டு தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஒய்வூதியதாரரின் குடும்பத்திற்கு 25,000 ரூபாய் குடும்பப் பாதுகாப்பு நிதியாக வழங்கப்படுகிறது.

1.1.1996இல், அனுமதிக்கப்பட்ட புதிய ஊதிய விகிதத்தின் நிலுவைத் தொகையில், இறுதியாக வழங்கப்பட வேண்டிய 40 விழுக்காடு நிலுவைத் தொகை ஒய்வூதியதாரர்களுக்கு நடப்பு நிதியாண்டில் வழங்கப்பட்டுவிட்டது.

**முன்னாள் கிராம அலுவலர் நலம்**

14–11–1980–இல் கடந்த கால அரசில் அவசரச் சட்டத்தினால் பணியிழந்து, வாழ்ந்து வரும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 175 ரூபாயை ஒய்வூதியமாக அதற்குரிய படிகளுடன் வழங்கவும், 14.11.1980–இல் பணியிழந்தவர்களில் மறைந்துவிட்ட முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு 100 ரூபாயைக் குடும்ப ஒய்வூதியமாக வழங்கவும் இந்த அரசினால் 23.8.1996 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டன. இவ்வாணைகளின்படி 5–12–1986 முதல் முன்னாள் கிராம அலுவலர்கள் சிறப்பு ஒய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டதால், ஒவ்வொரு முன்னாள் கிராம அலுவலரும் சிறப்பு ஒய்வூதிய நிலுவைத் தொகையாக ஏறத்தாழ 23,000 ரூபாய் பெற்று மகிழ்ந்து இந்த அரசைப் பாராட்டினர்.

பின்னர் 22.7.1998 அன்று சிறப்பு ஒய்வூதியம் 175 ரூபாய் என்பதை 250 ரூபாயாக உயர்த்தியும், குடும்ப ஒய்வூதியத்தை 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தியும் ஆணைகள் வெளியிடப்பட்டன. இதனால் இதர படிகளுடன் சேர்த்து தோராயமாக மாதமொன்றுக்கு 800 ரூபாய் அளவில் கிடைக்கும்.

முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மேலும் சலுகைகள் வழங்கும் நோக்கத்தில் பதவி ஒழிப்பு நாளான 14–11–1980 அன்று பணியிலிருந்தவர்களுக்கு மட்டுமல்லாமல், அன்றைய நாளில் தற்காலிகப் பணி நீக்கத்தில் இருந்தவர்களுக்கும், விடுப்பில் இருந்தவர்களுக்கும் இச்சிறப்பு ஒய்வூதியச் சலுகை 9.9.1998 அன்று நீட்டிக்கப்பட்டது.

அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோதே ஈட்டிய விடுப்பினைச் சரண் செய்து பணமாகப் பெறும் திட்டத்தை 10.9.1968 அன்று அறிமுகம் செய்யப்பட்டது.

அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்களுக்கு இருந்து வந்த ரகசியக் குறிப்பேட்டு முறையை ஒழித்திட வேண்டுமென 1940ஆம் ஆண்டு வெள்ளைக்காரர்கள் ஆட்சி முதல் இருந்து வந்த நீண்டகால கோரிக்கை 20.2.1972 அன்று கலைஞர் அரசினால் ஏற்கப்பட்டது.

1976ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த இரகசியக் குறிப்பேட்டு முறையை, 1990இல் மூன்றாவது முறையாக அமைந்த கலைஞர் அரசு மறுபடியும் நீக்கியது.

★ ★ ★

# கடமை ஆற்றிட ஊக்கம்; அரசு தரும் ஆக்கம்!

சட்டம் ஒழுங்கைப் பேணிக்காப்பதிலும், சமுதாய நல்லிணக்கம் மற்றும் நல்லுறவு போற்றி நலிந்த பிரிவினர், மகளிர் ஆகியோரின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும், தமிழகக் காவல்துறை தொடர்ந்து பெரும் பங்காற்றி வருகிறது. இப்பணிக்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றி வரும் காவல்துறை பணியாளர்களுக்கு இந்த அரசு நிறைவேற்றிய நலத்திட்டங்களும், அளித்துள்ள சலுகைகளும் எண்ணிலடங்கா.

**இந்தியாவிலேயே முதன்முறையாக காவல் துறைக்காக ஒரு கமிஷன்**

- காவல்துறையினரின் சங்கடங்களை எதிர்க் கட்சியாக இருந்த போது எடுத்துக் கூறிய கலைஞர் 1969 ஆம் ஆண்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன், ஆர். ஏ. கோபால சாமி, ஐ.சி.எஸ். அவர்களுடைய தலைமையில் இந்தியாவிலேயே முதல் முறையாக, காவல் துறையினருடைய நிலைமைகளை ஆராய்ந்து பரிந்துரைக்க ஒரு கமிஷனை அமைத்தார். அந்த கமிஷன் 133 பரிந்துரைகளை வழங்கியது. அவைகளில் 115 பரிந்துரைகள் உடனே ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டன.

**இரண்டாவது போலீஸ் கமிஷன்**

- 1989ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக கலைஞர் அரசு அமைந்த போது, முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம், ஐ.ஏ.எஸ். அவர்களுடைய தலைமையில் இரண்டாவது போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு அவர்கள் தந்த 112 பரிந்துரைகளில் 102 பரிந்துரைகள் மீது முடிவெடுத்து ஆட்சி அப்போது கலைக்கப் படுவதற்கு முன்பு, 79 பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட்டன.
- 1991–92ஆம் ஆண்டு முதல் 1995–96ஆம் ஆண்டு வரைக்கான முந்தைய ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் காவல் துறைக்காக செய்யப்பட்ட மொத்த ஒதுக்கீடு 1716 கோடி ரூபாயாகும். 1996–97ஆம் ஆண்டு முதல் 2000–2001ஆம் ஆண்டு வரைக்கான இந்த ஆட்சிக் காலத்தில் காவல் துறைக்காக செய்யப்பட்ட மொத்த ஒதுக்கீடு 3,988 கோடி ரூபாயாகும். அதாவது இரண்டு மடங்கிற்கு மேலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கடந்த கால ஆட்சியில் தேவையில்லாமல் கடற்கரையிலே உள்ள வரலாற்றுப் புகழ் கொண்ட டி.ஜி.பி. அலுவலகத்தை இடிப்பதற்கான ஆணை பிறப்பிக்கப் பட்டது. அந்த ஆணையை இந்த அரசு ரத்து செய்து, மீண்டும் அதே இடத்தில் டி.ஜி.பி. அலுவலகம் ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டு தற்போது அதே இடத்தில் செயல்பட்டு வருகிறது.



- பணிக்காலத்தில் வீர தீரச் செயல்களினால் மரணமடையும் காவலர் குடும்பங்களுக்கு கருணைத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று 3-6-1997இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

- மேலும் காப்பீட்டுத் திட்டத்தின்படி ரூபாய் ஒரு இலட்சம் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும்.

- இது தவிர தமிழ்நாடு குடும்பப் பாதுகாப்பு நல நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

- வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு செயல்பட முடியாத அளவிற்கு நிரந்தர ஊனம் அடைந்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை 20 ஆயிரம் ரூபாய் என்பது 50 ஆயிரம் ரூபாயாகவும், படுகாயம் அடைந்தவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாகவும், சாதாரண காயம் அடைந்தவர்களுக்கு 3 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி 3-6-1997இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

- பணிக்காலத்தில் வீர தீரச் செயல் புரிந்து அகால மரணமடைந்த காவல் துறையைச் சார்ந்தவர்களின் வீட்டுப் பிள்ளைக்கென மருத்துவம், பொறியியல் மற்றும் வேளாண்மை ஆகிய படிப்புகளில் சேர, தலா மூன்று இடங்களும் சட்டப் படிப்புக்கென இரண்டு இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**காவல் பணியாளரின் ஊதியம் உயர்வு**

- 1996ஆம் ஆண்டில் மத்திய அரசின் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைக்கேற்ப காவலர்களின் ஊதியம் ரூ. 2750-70-3800 என முதலில் நிர்ணயிக்கப்பட்டது. பின், மத்திய அரசு காவலர்களின் ஊதியம் ரூபாய் 3050-75-3950-80-4590 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தமையால் தமிழக காவலர்களின் ஊதியத்தையும் ரூபாய் 3050-75-3950-80-4590 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. மத்திய அரசில் ஒரே நிலை காவலர்கள்தான் உள்ளனர். தமிழக காவல் துறையில் இரண்டாம் நிலை, முதல்நிலை என இரண்டு நிலைக்காவலர்கள் உள்ளனர். தமிழக காவல் துறையில் இரண்டாம் நிலை காவலர்களுக்கு மத்திய அரசு காவலர்களுக்கு வழங்கும் சம்பளமான ரூ. 3050-75-3950-80-4590-ஐ தற்பொழுது தமிழக அரசு வழங்கியுள்ளது. முதல்நிலை காவலர்களுக்கு ஊதிய விகிதம் ரூ. 3200-85-4900 என்றும் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. மத்திய அரசு காவலர்களுக்கு இணையாக இரண்டாம் நிலை காவலர்களின் ஊதியத்தை உயர்த்தி வழங்கியது தமிழக வரலாற்றிலேயே இதுதான் முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. முந்தைய ஆட்சியில் இரண்டாம் நிலை காவலர்களின் ஊதியவிகிதம் 825-15-900-20-1200 என்றும் முதல் நிலை காவலர்களின் ஊதியவிகிதம் 950-20-1150-25-1500 என்றும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

- 1.1.96க்கு முன்பு தலைமைக்காவலர்களுக்கு ரூ.1200-30-1560-40-2040 என்றிருந்த ஊதிய விகிதம் தற்போது ரூ. 4000-100-6000 என வழங்கப்படுகிறது.

- 1.1.96க்கு முன்பு உதவி ஆய்வாளர்களுக்கு ரூ. 1600-50-2300-60-2660 என்றிருந்ததை ரூ. 5300-150-8300 எனவும், ஆய்வாளர்களுக்கு ரூ. 2000-60-2300-75-3200 என்றிருந்ததை தற்போது ரூ. 6500-200-10500 எனவும், துணை கண்காணிப்பாளர்களுக்கு ரூ. 2200-75-2800-100-4000 என்றிருந்ததை தற்போது ரூ. 8000-275-13500 எனவும், கூடுதல் கண்காணிப்பாளர்களுக்கு ரூ. 3000-100-3500-125-4500 என்றிருந்த ஊதியத்தை தற்போது ரூ. 10000-325-15200 எனவும், கண்காணிப்பாளர்களுக்கு 1.1.96க்கு முன்பு இருந்த ஊதியமான ரூ. 3700-125-4700-150-5000த்தை தற்போது ரூ. 12000-375-16500 எனவும் மாற்றி வழங்கப்பட்டு வருகிறது.

**சிறப்புப்படி ( Good Service Special Pay).**

- 1996-ல் இந்த அரசு அறிமுகப்படுத்திய சிறப்புத் திட்டத்தின்படி காவல்துறையில் களங்கமின்றி நற்பணியாற்றும் காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு - 15 ஆண்டுகள் நற்பணி புரிந்தவர்களுக்கு 1996 முதல் வழங்கப்பட்டு வந்த ஐந்து ரூபாயை பதினைந்து ரூபாயாகவும், 20 ஆண்டுகள் நற்பணி புரிந்தவர்களுக்கு 1996 முதல் வழங்கப்பட்டு வந்த ரூ. 7.50ஐ ரூ. 20 ஆகவும், 25 ஆண்டுகள் நற்பணி புரிந்தவர்களுக்கு 1996 முதல் வழங்கப்பட்டு வந்த ரூ. 10ஐ ரூ. 25 ஆகவும், 30 ஆண்டுகள் நற்பணியாற்றியோருக்கு 1996 முதல் வழங்கப்பட்டு வந்த ரூ. 15ஐ தற்போது ரூ. 30 ஆகவும், 35 ஆண்டுகள் நற்பணி புரிந்தோருக்கு 1996 முதல் வழங்கப்பட்டு வந்த ரூ. 20ஐ தற்போது ரூ. 40 ஆகவும் உயர்த்தி மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

**ஓட்டுநர்களுக்கான சிறப்புப் படி**

- ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும் சிறப்புப்படி, 1996-க்கு முன்பு வரை மாதம் ஒன்றுக்கு



ரூ.40/- என இருந்தது. தற்போது ரூ.120/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**செயல்திறமைக்கான படி** (Proficiency Pay)

- தலைமைக் காவலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5/- எனவும், காவலர்களுக்கு ரூ.3/- எனவும் வழங்கப்பட்டு வந்த செயல்திறமைப்படி, தலைமைக் காவலர்களுக்கு ரூ.15/- எனவும், காவலர்களுக்கு ரூ.10/- எனவும் 1.10.96 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**சீருடைப்படி**

- தற்போது காவல் பணியாளர்களில் காவல்துறை கண்காணிப்பாளர்கள் (இந்திய காவல் பணி அல்லாத) கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு ரூ. 40/- லிருந்து ரூ. 60 ஆகவும், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு ரூ. 25லிருந்து ரூ. 50 ஆகவும், தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர் ஆகியோருக்கு ரூ. 25லிருந்து ரூ. 40 ஆகவும் மேம்படுத்தப்பட்ட மாதாந்திர சீருடைப்படி வழங்கப்படுகிறது.

**இடர்ப்படி (Risk Allowance)**

- 1996-ல் காவலர் முதல் ஆய்வாளர் வரை வழங்கப்பட்ட இடர்ப்படி மாதம் ரூ.20/- என்பது தற்போது ரூ.60/- ஆகவும், கூடுதல் கண்காணிப்பாளர், துணைக் கண்காணிப்பாளர், உதவி தளவாய், துணைத் தளவாய் ஆகியோருக்கு வழங்கப்பட்ட இடர்ப்படி ரூ.60/- என்பது ரூ.70/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**சிறப்பு இடர்ப்படி (Special Risk Allowance)**

- 1996 வரையில் சிறப்புப் புலனாய்வுப் பிரிவில் பணிபுரியும் காவலர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட சிறப்பு இடர்ப்படி மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- ஆக இருந்தது. 1998 முதல் அது ரூ.1500/-ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

**மலைவாழ் படி**

- மலைவாழ் இடம் என்று அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் பணிபுரியும் காவலர்கள், தங்கள் ஊதியத்தில், 20 சதவிகிதத்தை மலைவாழ் படியாக பெறத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். இதன்படி, 1996 வரை அதிகபட்சமாக ரூபாய் 300 வழங்கப்பட்டது. தற்போது 1-9-98 முதல் ரூ.450/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**காவல் இசைக் குழுவினருக்குச் சிறப்பூதியம்**

- மாநில காவல் இசைக்குழுவில் சேமப்படை ஆய்வாளர் மற்றும் இசைக்குழு நடத்துநர்களுக்கு (Band Master) 1996ல் வழங்கப்பட்ட சிறப்பூதியமான ரூ.50ஐ 1998ல் ரூபாய் 150 ஆகவும், உதவி சேமப்படை ஆய்வாளர் மற்றும் இசைக்குழு உதவி நடத்துநர்களுக்கு (Assistant Band Master) 1996ல் வழங்கப்பட்ட ரூ. 25ஐ தற்போது ரூ. 113 ஆகவும், தலைமைக் காவலர்களுக்கு ரூ. 15 லிருந்து 1998 முதல் ரூ. 90 ஆகவும், காவலர் நிலை 1 மற்றும் நிலை 2 ஆகியோருக்கு இந்த சிறப்பூதியம் 1996லிருந்த ரூ. 10ஐ 1998ல் ரூ. 60 ஆகவும் மாற்றி வழங்கப்படுகிறது.
- இதே சிறப்பூதியம் ஆவடி படைக்கல மையக் குழுவிலுள்ள உதவி ஆய்வாளர்களுக்கு (பேண்ட்) 1996ல் ரூ. 25 ஆக இருந்ததை 1998ல் ரூ. 113 ஆகவும், அவில்தாகளுக்கு (பேண்ட்) ரூ. 10 என இருந்ததை 1998ல் ரூ. 75 ஆகவும், நாயக் மற்றும் லான்ஸ் நாயக் ஆகியோருக்கு 1996லிருந்த ரூ. 10ஐ 1998லிருந்து ரூ.60 ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

**உணவுக் கட்டணத் தொகை**

- காவல் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் களுக்கு 1997ல் உணவுக் கட்டணத் தொகையாக வழங்கப்பட்டு வந்த ரூ. 30ஐ இந்த ஆண்டு 55

ரூபாய் எனவும், தலைமைக் காவலர், முதல் நிலைக் காவலர்களுக்கு 20 ரூபாய் என இருந்ததை தற்போது 50 ரூபாய் ஆகவும், இரண்டாம் நிலை காவலர்களுக்கு 16 ரூபாய் என இருந்ததை தற்போது 45 ரூபாய் ஆகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

### உணவு முன்பணம் (Mess Advance)

- தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளுக்கு உணவுக்கான நிரந்தர முன்பணத்தினை (Mess Advance) ஒரே சீராக ரூ.5000/-லிருந்து ரூ.25,000/-ஆக உயர்த்தி ஆணை வழங்கப் பட்டுள்ளது.

### பயணப்படி (Travelling Allowance)

- 1989-ல் பயணப்படி உச்ச வரம்பு 40 விழுக்காடாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த உச்ச வரம்பினை தமிழ்நாடு சிறப்புக்காவல் படை குற்றப்புலனாய்வுத் துறையின் சிறப்புப் பிரிவு களிலுள்ளோருக்கு 40 விழுக்காட்டிலிருந்து 45 விழுக்காடாக உயர்த்தியும், மாவட்டங்கள் மற்றும் ஆயுதப்படை (நகரம்)யினருக்கு உச்சவரம்பு 30 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாகவும், ஒன்று அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாவட்டங்களில் பயணம் மேற்கொள்ளும்போது தரவேண்டிய பயணப்படியின் உச்ச வரம்பு 45 சதவிகிதத் திலிருந்து 53 1/3 சதவிகிதமாகவும் உயர்த்தப் பட்டுள்ளது.

### வாகன முன்பணம் (Vehicle Advance)

- 1996 ஆம் ஆண்டில், அலுவலர்கள் வாகனங்களை சொந்தமாக வாங்குவதற்கான வாகன முன்பணத் தொகை உயர்த்தப்பட்டது. சைக்கிள் வாங்க 1000 ரூபாயை 1,500 ரூபாயாகவும், மோட்டார் சைக்கிள்/ஸ்கூட்டர் புதியது வாங்க ரூபாய் 25,000த்திலிருந்து ரூபாய் 35,000 ஆகவும், பழைய ஸ்கூட்டர்/மோட்டார் சைக்கிள் வாங்க 1996லிருந்த ரூபாய் 8,000த்தை ரூபாய் 12,000 எனவும், மோட்டார் கார் புதிதாக வாங்க ரூபாய் 1,40,000 என இருந்ததை ரூபாய் 2,00,000 ஆக உயர்த்தியும், பழைய கார் வாங்க ரூபாய் 60,000த்திலிருந்து ரூபாய் 90,000 எனவும், மொப்பட் வாங்க ரூபாய் 5000 என்பதை ரூபாய் 12,000 எனவும் உயர்த்தி வழங்க ஆணையிடப் பட்டுள்ளது.

### அண்ணா பதக்கம் - தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம்

- 1969-ம் ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு முதல்வரின் காவல் பதக்கம், பாராட்டத்தக்க வகையில் பணியின்பால் ஈடுபாடு கொண்ட காவல்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டு வரை ஆண்டுக்கு 65 பேர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இந்த விருது இந்த ஆண்டு முதல் 100 பேருக்கு ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது. தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கம் - அண்ணா பதக்கம் பெறுகின்ற 40 காவலர் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விருதுத் தொகை ஒவ்வொருவருக்கும் 1,500 ரூபாயிலிருந்து 2,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 45 உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் விருதுத் தொகை ஒவ்வொருவருக்கும் 2,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. 15 காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அண்ணா பதக்க விருதுத் தொகை ஒவ்வொருவருக்கும் 4,000 ரூபாய் என்பது 5,000 ரூபாய் என வழங்கப்பட்டுள்ளது.
- இவை தவிர, இந்தப் பதக்கங்களைப் பெறு வோருக்கு மாதாந்திரப்படி காவலர்களுக்கு 20 ரூபாய் என்றிருந்ததை 40 ரூபாயாகவும், தலைமைக் காவலர்களுக்கு 25 ரூபாயிலிருந்து 50 ரூபாயாகவும் வழங்கிட 2-6-1997 அன்று ஆணையிடப்பட்டது.

### உத்தமர் காந்தி பதக்கம்

- கள்ளச்சாராயத்தை மிகச் சீரியமுறையில் தடுத்து சாதனை புரியும் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு 1996-ம் ஆண்டு முதல் உத்தமர் காந்தி பதக்கமும் 10,000 ரூபாய் பணமுடிப்பும் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை, 2 கூடுதல் காவல் கண்காணிப் பாளர்களுக்கும், 8 காவல் ஆய்வாளர் களுக்கும், 4 உதவி ஆய்வாளர்களுக்கும் பதக்கங்களும், பண முடிப்பும் வழங்கப்பட்டுள்ளன.

### பணிநியமனம்

- 1989-ல் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப் படாத காவலர்களில் தகுதியுடைய 1024 நபர்களுக்கு 1997-ல் நியமனம் வழங்கப்பட்டது. முந்தைய ஆட்சிக் காலத்தில் 1992-93-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆனால் பணி நியமனம்

செய்யப்படாத 329 காவலர்கள், இந்த அரசால் பணி நியமனம் செய்யப்பட்டு, 15-5-2000 முதல் காவலர் பயிற்சி பெற்று வருகிறார்கள். அதே போன்று கடந்த ஆட்சியில் காவலர்களாகத் தேர்வு செய்யப்பட்டு பட்டியல் வெளியிடப்படாமல் இருந்த 10,000 காவலர்களில், 1997-ம் ஆண்டு 5,801 ஆண் காவலர்களும், 3,052 பெண் காவலர்களும் தற்போதைய ஆட்சியில் பணி நியமனம் செய்யப்பட்டனர். 1998-ல் 3,671 பேர் காவலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சிக்குப் பிறகு தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணி நியமனம் செய்யப்பட்டனர். நடப்பு ஆண்டில் 4,000 பேர் தேர்வு செய்யப்படுவதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு இறுதிக்கட்டமான நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட உள்ளனர். 1000 பெண் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டு, முதல் கட்டமாக 584 பெண் காவலர்கள் 27.11.2000 முதல்



பயிற்சியில் உள்ளனர். மீதமுள்ள 416 பேர் அடுத்த கட்டமாக பயிற்சிக்கு அனுப்பப்பட உள்ளனர். 2000-2001 ஆம் ஆண்டில் 3,500 ஆண் காவலர்கள் பணி நியமனம் செய்யப்படுவதற்காக விண்ணப்பங்கள் வரப்பெற்று பரிசீலனையில் உள்ளன. அவர்களும் விரைவில் உடல் திறன் தேர்வுக்கு அழைக்கப்பட உள்ளனர்.

- உதவி ஆய்வாளர்களைப் பொறுத்தமட்டில், இந்த அரசு பதவி ஏற்றபின் 1994-95 ஆம் ஆண்டு முந்தைய ஆட்சியினரால் தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்படாத 600 உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவலர்- தலைமைக் காவலர் பிரிவில் உள்ள பட்டதாரிகளுக்குள் தேர்வு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்கள் 267 பேர் சேர்த்து மொத்தம் 867 பேருக்கு 2.6.97 முதல் பயிற்சி அளிக்கப்பட்டு உதவி ஆய்வாளர்களாக பணி அமர்த்தப் பட்டனர். இதேபோன்று 1994-95 ஆம் ஆண்டு தேர்வு பெற்று, பணி நியமனம் பெறாத 114 உதவி ஆய்வாளர்கள் 22.5.2000-ல் பணி நியமனம் செய்யப்பட்டு பயிற்சியில் உள்ளனர். 1997-98ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 881 உதவி ஆய்வாளர்களில், 524 பேர் பயிற்சிக்குப் பின் 1999-ல் காவல் நிலையங்களில் பணியமர்த்தப்பட்டனர். மீதமுள்ள 357 பேர் 22.5.2000 முதல் பணி நியமனம் பெற்று பயிற்சியிலுள்ளனர். இந்த 881 பேரில், 657 பேர் ஆண்; 224 பேர் பெண் ஆவர்.

**பதவி உயர்வுகள்:-**

- 10 ஆண்டுகள் பிழையின்றி பணிமுடித்த இரண்டாம் நிலை காவலர்கள் 18,100 பேர் முதல் நிலை காவலர்களாக கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் மட்டும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். மேலும், பத்தாண்டுகள் இரண்டாம் நிலை காவலர்களாகவும், ஐந்தாண்டுகள் முதல்நிலைக் காவலர்களாகவும் பணிமுடித்த தகுதி பெற்ற 22,400 முதல் நிலை காவலர்கள் கடந்த நான்கரை ஆண்டுகளில் தலைமைக் காவலர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். 25 ஆண்டுகள் மொத்த பணிக்காலம் முடித்து அதில் தலைமைக் காவலர்களாக பத்து ஆண்டுகள் முடித்தவர்கள் பதவி உயர்வு பெறுவதற்காக "சிறப்பு உதவி ஆய்வாளர்" என்ற பதவி உருவாக்கப்பட்டு 1998 மற்றும் 1999 ஆகிய இரு ஆண்டுகளில் மட்டும் 1,920 தலைமைக் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். இதே போன்று, 400 முதல் நிலை பெண் காவலர்கள் தலைமைக் காவலராக அக்டோபர், 96-ல் பதவி உயர்வு பெற்றனர்.

**சிறப்பு நலத் திட்டங்கள்**

- அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் ஒருவர் இறந்தால், தமிழ்நாடு காவல்துறை நல நிதியிலிருந்து பதவி வித்தியாசம் இன்றி அனைவருக்கும் ஒரே சீராக குடும்ப நிவாரணத்

தொகை 4,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக 8–9–1999 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

- காவலர்களின் குழந்தைகளுக்கு கல்விக் கொடையாக 2000–2001–ம் ஆண்டு 3,084 மாணவர்களுக்கு 75.72 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு காவலர் மருத்துவ உதவி நிதித் திட்டத்தின்கீழ், இந்தியாவில் காவலர்கள் மேற்கொள்ளும் சிகிச்சைகளுக்கு அதிகபட்சமாக ரூபாய் ஒரு இலட்சம் மருத்துவ உதவியாகவும், வெளிநாடுகளில் சிகிச்சை மேற்கொண்டால் மேற்கொண்டு ரூபாய் ஒரு இலட்சம் கடனாகவும் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு காவலர்கள் மாத சந்தாவாக ரூபாய் 10 செலுத்த வேண்டும்.

- காவல் துறையில் உள்ள 80 ஆயிரம் பேர்களுக்கு குடும்ப அட்டைகள் தனியாக 1997இல் வழங்கப்பட்டன.

- காவல் துறையினருக்கு மலிவு விலையில் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், அதிகபட்சம் நான்கு அலகிற்கு (Units) ஆகும் செலவான ரூ.427.40–ல் ரூ.164/– அரசு மானியமாக இந்த ஆண்டு முதல் வழங்கப் படுகிறது.

- பணியாளர் சிறப்பு பொது வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை திட்டத்தில் அரசின் பங்குத் தொகை 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் 1.10.2000 முதல் பணியில் சேரும் காவலர்களுக்கு அவர்களது சம்பளத்திலிருந்து மாதம் 50 ரூபாய் வீதம் பிடித்தம் செய்து அவர்கள் ஓய்வு பெறும் போது ஒரு இலட்சம் ரூபாய் மொத்த தொகையாக வழங்கப்படும்.

- காவலர்கள் ஓய்வு பெறும்போது ஒப்படைப்பு செய்யும் ஈட்டிய விடுப்பிற்கு 180 நாட்களுக்கு மேலுள்ள நாட்களுக்கு விடுப்புக் காலச் சம்பளம் வழங்கும்போது வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற இதரப் படிகளும் சேர்ந்து முழுச் சம்பளம் வழங்க 1996இல் கலைஞர் அரசு ஆணையிட்டுள்ளது.

**கருணை அடிப்படையில் நியமனம்**

- இதுவரை காவல் துறையில் 1975 முதல் 2000–ஆம் ஆண்டு வரை, 2,808 பேர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு உள்ளனர். இதில் இந்த நான்கரை ஆண்டு காலத்தில் மட்டும் 754 பேர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் அமைச்சுப் பணிகளில் மட்டுமே மேற்கொள்ளப் பட்ட கருணை அடிப்படை நியமனங்கள், தகுதி அடிப்படையில் காவலர் மற்றும் உதவி ஆய்வாளர் பணியிடங்களுக்கு தற்போது விரிவுபடுத்தப் பட்டுள்ளது. இதன் மூலமாக 28 ஆண்கள் மற்றும் 13 மகளிர் காவல் உதவி ஆய்வாளராகவும், 105 ஆண் மற்றும் 14 மகளிர் காவலராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 192 ஆண் காவலர்களும் 24 பெண் காவலர்களும் தேர்வு செய்யப்பட்டு, விரைவில் பணி நியமன ஆணை வழங்கப்பட உள்ளது.

**வீட்டு வசதி**

- காவலர்களுக்கு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் சார்பாக 1991 ஆம் ஆண்டு முதல் 1995–ஆம் ஆண்டு வரையில் 48 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் மொத்தம் 3,001 குடியிருப்புகளே கட்டப்பட்டன. 1996 முதல் 2000 வரையிலான நான்காண்டு காலத்தில் மட்டும் 189 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் 12,602 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் நடப்பு ஆண்டில் 99 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3,000 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- கடலோரக் காவல் படைக்கான கட்டடங்கள் 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், காவலர் பயிற்சிப் பள்ளிகளை மேம்படுத்து வதற்காக 8 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் நடந்து வரும் பணிகள் விரைவில் முடிவடையும் நிலையில் உள்ளன.

**காவலர் குடியிருப்புகளில் கழிப்பிடங்கள்:**

- 1997–98ஆம் ஆண்டில் கழிப்பிடங்கள் இல்லாமல் இருந்த 103 நகரங்களில் உள்ள 2,751 காவலர் குடியிருப்புகளில் 5 கோடியே 23 லட்சம் ரூபாய் செலவில் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**தனித்தனி மீட்டர்**

- மாநிலம் முழுவதுமாக தலைமைக் காவலர் களுக்கும், காவலர்களுக்குமென 22,717 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 13,932 வீடுகளுக்கு 1997ல் 4 கோடியே 18 லட்சம் ரூபாய் செலவில் தனித்தனி மின்சார மீட்டர்கள் பொருத்தப்பட்டன. மதுரை மாவட்ட ஆயுதப்படைக் காவலர்கள் 164 பேர் தாங்களாகவே சொந்தமாக

மீட்டர் பொருத்திக்கொண்டதால், அதற்கான செலவான 2 லட்சம் ரூபாய் அவர்களுக்கு திருப்பி வழங்கப்பட்டுள்ளது.

**மின்விசிறிகள்**

- தமிழகத்திலுள்ள 28,762 காவலர் குடியிருப்பு களில் 17,652 குடியிருப்புகளில் மின்விசிறிகள் இருந்தன. மின் விசிறிகள் இல்லாத 11,140 காவலர், தலைமைக் காவலர் குடியிருப்புகளிலும் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் 1998–99இல் ரூபாய் ஒரு கோடியே 67 லட்சம் செலவில் மின் விசிறிகள் பொருத்தப்பட்டன.

**காவல் நிலையங்கள்**

- 1991ஆம் ஆண்டு முதல் 1995–96ஆம் ஆண்டு வரைக்கான முந்தைய ஆட்சிக் காலத்தில் 23 புதிய காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் மட்டும் 71 புதிய காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. மேலும் 37 புறக்காவல் நிலையங்கள் முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டன.
- முந்தைய ஆட்சிக்காலத்தில் 1991–95–க்கு இடைப்பட்ட ஐந்தாண்டு காலத்தில் 16 காவல் நிலையங்களுக்கு மட்டுமே புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. ஆனால், கடந்த நான்காண்டு காலத்தில் (1996–2000) 171 காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப் பட்டுள்ளன.

**வாகனங்கள்**

- அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் பிரிவு அலுவலகங்களுக்கு வாகன வசதி செய்து தரப்பட வேண்டும் என்ற நோக்கில் கடந்த ஐந்தாண்டு காலத்தில் மட்டும் 1,577 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டு காவல் துறைக்கு வழங்கப் பட்டுள்ளன. இவற்றைத் தவிர, 1780 பழுதடைந்த வாகனங்களை நீக்கி விட்டு அவற்றிற்கு பதிலாக 1780 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.
- காவல் துறையை வலுப்படுத்தவும் நவீனப் படுத்தவும் பத்து கோடி ரூபாய் ஆண்டுதோறும் ஒதுக்கப்படுகிறது.
- ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ரூபாய் 20 ஆயிரம் வீதம் நாற்காலி, அலமாரி போன்ற மரச் சாமான்கள் வாங்கிட 1,228 காவல் நிலையங்களுக்கும் 2 கோடியே 45 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்து 6–7–98இல் ஆணை பிறப்பிக்கப்பட்டு அவ்வாறே வாங்கப்பட்டு விட்டன.

**தகவல் தொடர்பு**

- கணினிகள், நுண்ணலைத் தொலைபேசிகள் ஆகியவற்றோடு இணைக்கும் வகையில் உயர் நுண்ணலைச் சாதனங்கள், வாக்கி டாக்கிகள் மற்றும் இதர தகவல் தொடர்புச் சாதனங்கள் காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. காவல்துறை, சிறப்புக் காவல் படை, அதிரடிப்படை ஆகியவற்றிற்கு வி.எச்.எப்.கள் (V.H.Fs) மற்றும் கையில் எடுத்துச் செல்லும் வி.எச்.எப்.கள் நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் 1999–2000 ஆண்டில் ரூபாய் ஒரு கோடியே 35 லட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

**கணினி மயமாக்கல்**

- காவல் துறையில் கணினிமயமாக்கல் பெருமளவில் நடைபெற்று வருகிறது. 1996–ம் ஆண்டு வரை ரூ.46 இலட்சம் செலவில் 55 கணினிகள் மட்டுமே வாங்கப்பட்டன. 1996 முதல் 1999 ஆண்டு வரை 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் 429 கணினிகள் வாங்கப்பட்டுள்ளன. மேலும் 2000–ம் ஆண்டில் ஒரு கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் 181 கணினிகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணினிகளைக் கையாளவும் அவற்றைப் பயன்படுத்தவும் இதுவரை சுமார் 3,000 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- அடுத்த ஐந்தாண்டு காலத்தில் 2,000 கணினிகளை வாங்கி அவற்றை மாநகரக் காவல் ஆணையங்களின் கீழுள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும், காவல் கோட்ட அலுவலகங் களுக்கும் வழங்கவும், எல்லாப் பணியாளர் களுக்கும், அலுவலர்களுக்கும் கணினியில் பயிற்சி அளிக்கவும், மின்னஞ்சல் முறையில் தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் எந்நேரத்திலும் தகவல் அளித்திட தகவல் பரிமாற்றச் சேவையை மேம்படுத்தவும், சிறந்த ஒருங்கிணைப்புக்காக மாநகரத்திலுள்ள எல்லாப் பிரிவுகளுக்கும் இணைய வசதி (Internet) அளிக்கவும், கிடைக்கப் பெற்ற ஆதாரங்களை நல்ல முறையில் பயன்படுத்திட காவல்துறை ஆதாரங்கள் மற்றும் திட்டமிடல் முறையை ஏற்படுத்தவும் 70 கோடி ரூபாய் செலவில் நடப் பாண்டில் காவல்துறையை நவீன மயமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

• • •

# தலைநகரில் தடைபடாத் தண்ணீர் விநியோகம்!

தமிழகத்தின் தலைநகரம் சென்னை! மாநிலத்தில் உள்ள மாநகராட்சிகளில் மிகப் பெரிய மாநகராட்சி! மக்கள் தொகை 45 இலட்சம் பேர்! பதினான்கு சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட மாநகர மாவட்டம். இங்கு வாழும் மக்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்திட பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீருக்கான பல திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவற்றில் சில திட்டங்களே வெற்றிபெற்றன. ஆயினும் சென்னை மாநகரத்து மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட இந்த அரசு, தனது முயற்சிகளை இடைவிடாது செய்து வருகிறது.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்தின் மூலமாக 1995–96இல் 38.41 இலட்சம் மக்கள் பயன்பெற்று வந்ததற்கு மாறாக 2000–2001இல் பயன்பெறும் மக்களின் எண்ணிக்கை சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகள் உட்பட 60 இலட்சம் பேர் என்று உயர்ந்துள்ளது.

- 1996இல் இந்த அரசு மலர்ந்ததற்குப் பிறகு நாம் மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் காரணமாக ஆந்திர அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி இடையிடையே சிறு சிறு தடங்கல்கள் நேர்ந்த போதிலும் கிருஷ்ணா நீரைப் பெறத் தொடங்கினோம். 1996ஆம் ஆண்டில் 70 மில்லியன் கன அடியும், 1997ஆம் ஆண்டில் 2417 மில்லியன் கன அடியும், 1998ஆம் ஆண்டில் 2806 மில்லியன் கன அடியும், 1999ஆம் ஆண்டில் 1833 மில்லியன் கன அடியும் பூண்டி நீர்த் தேக்கத்தில் கிருஷ்ணா கால்வாயிலிருந்து தண்ணீர் கிடைக்கப் பெற்றது.
- சென்னை வாழ் மக்களுக்கு தினசரி வழங்கப்படும் குடிநீரின் அளவு 1995–96இல் 24 கோடி லிட்டர் என்பது கிருஷ்ணா நீர்வரத்துக்குப் பிறகு 1998–1999இல் 48 கோடி லிட்டராக இரண்டு மடங்கு அளவிற்கு உயர்ந்துள்ளது.
- ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு 95–96இல் 70 லிட்டராக இருந்தது, கிருஷ்ணா நீர் வருகைக்குப் பிறகு 96–97இல் 80 லிட்டராகவும் 1997–1998 முதல் 100 லிட்டராகவும் உயர்ந்துள்ளது.
- குடிநீர் சுத்திகரிக்கும் திறன் 1995–96இல் 32 கோடி லிட்டர் மட்டுமே. 1999–2000இல் அது 62 கோடி லிட்டராக உயர்ந்துள்ளது.
- 1995–96இல் 24 கோடி லிட்டராக இருந்த குடிநீரேற்றும் திறன் 1999–2000இல் 62 கோடி லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.
- 1995–96இல் குடிநீர் கொண்டு செல்லும் பெரும் குழாய்களின் மொத்த நீளம் 193 கிலோ மீட்டர். அது 1999–2000இல் 275 கிலோ மீட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- 95–96இல் 4 குடிநீர் வழங்கும் நிலையங்களே சென்னையில் இருந்தன. தற்போது 13 குடிநீர் வழங்கும் நிலையங்கள் உள்ளன.
- குழாய்கள் மூலம் 24 இலட்சம் மக்கள் 1995–96இல் பயனடைந்தனர் என்பதற்கு மாறாக தற்போது 48 இலட்சம் மக்கள் பயனடைந்து வருகின்றனர்.
- 1995–96இல் சென்னையில் மொத்தம் 1 இலட்சத்து 92 ஆயிரம் குடிநீர் இணைப்புகள் இருந்தன. இன்று 2 இலட்சத்து 37 ஆயிரம் குடிநீர் இணைப்புகள் உள்ளன.
- 1991 முதல் 1996 வரை கடந்த கால ஆட்சியில் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அபிவிருத்தி பணிகளுக்காக 312 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. ஆனால் இந்த ஆட்சியில் இந்த நான்கரை ஆண்டு காலத்தில் 958 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.



- இந்தியாவிலுள்ள மற்ற பெருநகரங்களோடு ஒப்பிடும்போது குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீரை அகற்றுதல் ஆகிய பணிகளில் சென்னைப் பெருநகரம் முதல் இடத்தை வகிக்கும் அளவிற்கு பணிகளைச் செய்துள்ளது.

- இந்தியாவின் மற்றொரு பெருநகரமான மும்பையைப் பொறுத்தவரையில் குடிநீர் வழங்குதல் 97 சதவிகிதப் பகுதிகளுக்கு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் கழிவுநீரகற்றுதலைப் பொறுத்தவரை 75 சதவிகிதப் பகுதிகளுக்கு மட்டுமே சேவைகள் வழங்கப்படுகின்றன. மற்றொரு பெரு நகரமான. கல்கத்தாவில் 70 சதவிகிதப் பகுதிகளுக்கு மட்டுமே குடிநீர் வழங்குதலும், 60 சதவிகிதப் பகுதிகளுக்கு மட்டுமே கழிவு நீரகற்றுதலும் நடைபெற்று வருகின்றன. இந்தியாவின் தலைநகரமான டெல்லியைப் பொறுத்த வரையில் 60 சதவிகிதப் பகுதிகளுக்கு மட்டும் குடிநீர் வழங்குதலும் 55 சதவிகித பகுதிகளுக்கு மட்டும் கழிவுநீரகற்றுதலும் நடைபெறுகின்றன.

- ஆனால் சென்னைப் பெருநகரத்தில் குடிநீர் வழங்குதலைப் பொறுத்தவரை 97 சதவிகித பகுதிகளுக்கும் கழிவுநீரகற்றுதலைப் பொறுத்த வரை 96 சதவிகித பகுதிகளுக்கும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

- உலக வங்கியின் தர உறுதிக் குழுவினர் 1999ஆம் ஆண்டு சென்னை பெருநகரத்திற்கு வந்து ஆய்வு செய்து இங்கு அமைந்துள்ள குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றும் வசதிகள் தெற்காசியாவிலேயே மிகச் சிறந்தவையாகும் என்று பாராட்டு தெரிவித்துள்ளனர்.

- 2000ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இங்கு வந்து ஆய்வு செய்த உலக வங்கியினர் சென்னை பெருநகர குடிநீர் வாரியம் நகரத்தில் வளர்ந்து வரும் குடிநீர் தேவையை நிறைவு செய்வதிலும் குடிநீரின் அளவு குறையும் போது குடிநீர் வழங்குதலை நிறைவாகச் செய்வதிலும் சிறந்த பணியாற்றி வருகிறதென்று பாராட்டியுள்ளனர்.

- வேளச்சேரி, கொளத்தூர், கொடுங்கையூர், சாலிக்கிராமம், விருகம்பாக்கம் பகுதிகளுக்கு குழாய் மூலம் குடிநீர் விநியோகம் விரிவுபடுத்தப் பட்டது.

- இந்த ஆண்டு, கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகக்குறைவான மழை (சராசரி ஆண்டு மழையில் 50 விழுக்காடுகள் குறைவு) பெய்ததால் ஏரிகளில் நீர் இருப்பு குறைந்தது. எனவே, பூண்டி, சோழவரம், செங்குன்றம் ஏரிகளில் 1.12.1999லிருந்த 5 ஆயிரத்து 983 கோடி லிட்டர் தண்ணீர் இருப்பை கணக்கில் கொண்டும் மற்ற ஆதாரங்களான செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 2 ஆயிரத்து 123 கோடி லிட்டர், இரட்டை ஏரியிலிருந்து 99 கோடி லிட்டர் மற்றும் நிலத்தடி நீர் 4 கோடி லிட்டர் கூடுதலாக எடுத்து அடுத்த பருவமழை வரை தொடர்ந்து தினசரி தடையின்றி குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து போரூர் ஏரிக்கு தண்ணீர் கொண்டு செல்ல இரு ஏரிகளையும் இணைக்கும் 11 கிலோ மீட்டர் நீளமுள்ள தந்திக்கல் கால்வாயில் தூர்வாரும் பணி 23.12.1999 அன்று பொதுப்பணித் துறையினரால் முடிக்கப்பட்டது.

- குடிநீர் விநியோக முறையில் சென்னை பெரு நகரில் இதுவரை குடிநீர் குழாய்கள் இல்லாத பகுதிகளுக்கு குழாய்கள் அமைத்து குடிநீர் வழங்கும் பணிகளை நான்கு கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றியுள்ளோம்.

- நொச்சிக்குப்பத்தில் உவர் நீரை நன்னீராக்கும் நிலையம் 44 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு தினமும் ஒன்றரை இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது.

- வீட்டுக் குழாய் இணைப்பு மற்றும் விநியோகக் குழாய்களில் நீர் கசிவினை கண்டுபிடித்து 87,000 இனங்களில் சீர்படுத்துதல் வேலையினை 52 கோடி ரூபாய் செலவில் முறையாக இயக்குதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- கழிவுநீர் வசதியற்ற கானகம் தரமணி, கொடுங்கையூர் மற்றும் வியாசர்பாடி ஆகிய இடங்களில் ஹட்கோ உதவி பெற்று 38 கோடி ரூபாய் செலவில் நிரந்தரமாக கழிவுநீர் அகற்றும் அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- ஆதிஆந்திரா குடியிருப்புகள் மற்றும் குடிசை களுக்கு ஐந்து கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் கழிவு நீர் அகற்றும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- சென்னைக் குடிநீர் வாரியத்தின் குடிநீர் விநியோக அமைப்பு முறையினை 16 மண்டலங்களாகப் பிரித்து முதற்கட்டமாக திருவல்லிக்கேணி, வள்ளுவர் கோட்டம் ஆகிய நீர் வழங்கும் நிலையங்கள் 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு 25-9-98 அன்று துவக்கி வைக்கப்பட்டன.

- இரண்டாம் கட்டப் பணியாக ஈக்காட்டு தாங்கல், கண்ணப்பர்திடல் ஆகிய இடங்களில் குடிநீர் விநியோக நிலையங்கள் கட்டும் பணிகள் முடிவடைந்துவிட்டன. சூளைமேடு, பட்டேல் நகர், குளத்தூர், வியாசர்பாடி, மைலாப்பூர், நந்தனம், வேளச்சேரி, பள்ளிப்பட்டு ஆகிய இடங்களில் விநியோக நிலையங்கள் கட்டும்பணிகள் 31 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன.

- தமிழ்நாடு குடிசைப் பகுதி குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு நிலுவையில் உள்ள குடிநீர் கட்டணமான 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் ஒன்றரை கோடி ரூபாய் கட்டணத்தையும் அரசு தள்ளுபடி செய்யும்.

- சென்னையை அடுத்துள்ள நகரப் பகுதிகளான மாதவரம், அம்பத்தூர், ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம் நகராட்சிகளிலும் பம்மல், அனகாபுத்தூர், மீனம்பாக்கம், சிட்லபாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம், வளசரவாக்கம், மதுரவாயல், போரூர் பேரூராட்சிகளிலும், பரங்கிமலை கன்டோண்மென்ட் பகுதியிலும், பொழிச்சலூர், ராமாபுரம் ஊராட்சிகளிலும் கீழ்நிலைத் தொட்டி, மேல் நிலைத் தொட்டி கட்டுமானப் பணிகள், நீரேற்று நிலையம், நீர் கொணரும் குழாய்கள் அமைத்தல் ஆகிய பணிகளுக்காக முப்பது கோடி ரூபாய்க்கு பணிகள் தொடங்கப்பட்டு முடியும் நிலையில் உள்ளன. இத்திட்டத்தின் மூலம் பதினைந்து இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.

- சென்னை குடிநீர் இரண்டாவது திட்டத்தின்கீழ் 2 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் 16 கழிவுநீர் நிலையங்கள் மேம்படுத்துதல், 36 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் கசிவு கண்டறிந்து தடுப்புத் திட்டம் மேற்கொள்ளுதல், 1 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் புழலேரியில் நீரேற்றும் நிலையம் கட்டுதல், 11 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் கொண்டு வரும் பெரும் குழாய்கள் அமைத்தல், 74 கோடி ரூபாய் செலவில் மண்டல குடிநீர் வழங்கும் குழாய்கள் அமைத்தல், 27 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் மண்டல நீரேற்றும் நிலையங்கள் அமைத்தல் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

- 84 இலட்சம் ரூபாய் செலவில் புழலேரியிலிருந்து போரூர் வரையில் சுத்திகரிக்கப்பட்ட நீரை எடுத்துச் செல்லும் குழாய்கள் அமைக்கும் பணி, 81 இலட்சம் ரூபாய் செலவில் வள்ளுவர்கோட்டம், திருவல்லிக்கேணி மற்றும் கண்ணப்பர்திடல் ஆகிய இடங்களில் தலைமை நீர்நிலையங்கள் அமைக்கும் பணி, 7 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் ஈக்காட்டுத் தாங்கல், சூளைமேடு ஆகிய இடங்களில் தலைமை குடிநீர் நிலையம் கட்டும் பணி, 2 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் வியாசர்பாடி ஏரிப் பகுதி, கொடுங்கையூர் மற்றும் கானகம் தரமணி ஆகிய பகுதிகளில் கழிவு நீர் அகற்றும் பணி, 84 இலட்சம் ரூபாய் செலவில் வேளச்சேரியில் கழிவு நீர் அகற்றும் வசதி, 82 இலட்சம் ரூபாய் செலவில் டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில் கழிவு நீர் அகற்றும் வசதி, 35 இலட்சம் ரூபாய் செலவில் சாரதி நகர், வ.உ.சி. நகர் ஆகிய பகுதிகளில் கழிவு நீர் அகற்றும் வசதி, 3 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் கழிவு நீர் குழாய்களை மாற்றுப் பாதையில் அமைக்கும் பணி,11 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் தூர்ந்து போன குடிநீர் குழாய்களை புனரமைத்து தலைமை குடிநீர் விநியோக முறையை

மேம்படுத்தும் பணி, 12 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் ஆலந்தூருக்கான திட்டப் பணிகள் ஆகியவை ஹட்கோ நிதி உதவியுடன் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- ஆலந்தூர் நகராட்சி மற்றும் பம்மல், அனகாபுத்தூர், பொழிச்சலூர், மீனம்பாக்கம், தோமையர்மலை, ராமாவரம், உள்ளகரம், புழுதி வாக்கம், போரூர், வளசரவாக்கம், மதுரவாயல் ஆகிய உள்ளாட்சிகள் மற்றும் அம்பத்தூர், ஆவடி நகராட்சிப் பகுதிகளில் வரும் ஜனவரி 2001 முதல் சென்னை நகரின் குடிநீர் விநியோக அமைப்பிலிருந்து கூடுதல் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டு ஐந்து கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்கும் குழாய்களை இணைக்கும் பணி நடைபெறுகிறது.

- போரூர் ஏரிக்கரையில் 250 குதிரைத் திறன் கொண்ட 3 விசை இறைப்பான்கள் நிறுவப்பட்டு 21.1.2000 முதல் செங்குன்றத்திலிருந்து போரூர் வழியாக ஈ.க்காட்டுத்தாங்கல் வரை அமைக்கப் பட்டுள்ள சிமெண்ட் கான்கிரீட் குழாயினைப் பயன்படுத்தி நாள் ஒன்றுக்கு 7.5 கோடி லிட்டர் முதல் 10 கோடி லிட்டர் வரை தண்ணீர் 18.5 கிலோ மீட்டர் ரிவர்ஸ் பம்பிங் (Reverse Pumping) முறையில் இறைக்கப்பட்டு, செங்குன்றம் அருகே உள்ள கீழ்ப்பாக்கம் சுத்திகரிப்பு நிலையம் செல்லும் மூடுகால்வாயில் விடப்பட்டு, பின் சுத்திகரிக் கப்பட்டு நகருக்கு குடிநீராக வழங்கப்படுகிறது.

- பஞ்செட்டி, மீஞ்சூர் போன்ற பகுதியில் உள்ள பெரிய ஆழ்துளைக் கிணறுகளை மேம்படுத்தியும் மேலும் புதியதாக ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டும் முன்பு எடுக்கப்பட்ட சுமார் 4 கோடி லிட்டர் தற்போது உயர்த்தப்பட்டு 8 கோடி லிட்டர் வரை நிலத்தடி நீர் சென்னை குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

- மேலும் சென்னை நகருக்குள் உள்ள வாரியத்தின் கிணறு களில் இருந்து நாளொன்றுக்கு ஒரு கோடி லிட்டர் தண்ணீர் எடுத்து விநியோகிக்கப் படுகிறது.

- குடிநீர் பற்றாக்குறையினால் சில பகுதிகளில் குழாய் மூலம் குடிநீர் வழங்க இயலாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை சமாளிக்க 338 லாரிகளில் நாளொன்றுக்கு 2 ஆயிரத்து 850 நடைகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. ஏற்கனவே இருந்த 2 ஆயிரத்து 525 தொட்டிகளுடன் புதிதாக 2 ஆயிரம் குடிநீர் தொட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. கூடுதலாக ஆயிரம் தொட்டிகள் வாங்கி தேவைக்கேற்ப வைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- 1992 ஆம் ஆண்டு பருவ மழையின் அளவு 848 மில்லி மீட்டராக இருந்தது. இதனால், 1993 ஆம் ஆண்டு முழுவதும் சராசரியாக நாள் ஒன்றுக்கு 105 மில்லியன் லிட்டர் மட்டுமே விநியோகிக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு பருவ மழையின் அளவு 607 மில்லி மீட்டர் மட்டுமே. ஆனால், இவ்வரசு எடுத்த பல்வேறு நடவடிக் கைகளினாலும், மூன்றாண்டுகள் தொடர்ந்து ஆந்திர மாநிலத்திலிருந்து கூடுதலாக தண்ணீர் பெறப்பட்டதாலும், இன்றும் நாளொன்றுக்கு 250 மில்லியன் லிட்டர் தண்ணீருக்கு குறையாமல் விநியோகிக்கப்படுகிறது.

- ஏற்கனவேயிருந்த சுமார் 4 ஆயிரம் இந்தியா மார்க் 2 பம்புகளைப் பழுது பார்த்ததுடன் புதிதாக 500 இந்தியா மார்க் 2 பம்புகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் தேவையைக் கருத்தில் கொண்டு, கூடுதலாக சுமார் ஆயிரம் பம்புகள் அமைக்க ஏற்பாடு செய்யப்படுகின்றன.

- தேவைக்கேற்ப கூடுதல் தொட்டிகள் வைத்து அதிக லாரிகள் மூலம் குடிநீர் வழங்கவும் கூடுதலாக புதிய இந்தியா மார்க் 2 பம்புகள் அமைத்து நிலைமையை சமாளிக்கவும் சென்னை குடிநீர் வாரியத்திற்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.



- குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்ட 1993 ஆம் ஆண்டு 49 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருந்தாலும், ஒரு நாள் விட்டு ஒரு நாள் தான் 22 கோடி லிட்டர் அதாவது நாள் ஒன்றுக்கு 11 கோடி லிட்டர் மட்டுமே வழங்கப்பட்டது.
- தற்போது இந்த அரசு எடுத்த பல்வேறு துரித நடவடிக்கைகளினால் 10 கோடி ரூபாய் செலவிலேயே 25 கோடி லிட்டர் குடிநீர் தினசரி தொடர்ந்து வழங்கப் பட்டு வருகிறது.
- வாரியம், தனது சொந்த நிதியில் இருந்தும், டுபிட்கோ (TUFIDCO), ஹட்கோ (HUDCO) நிறுவனங்களிடம் கடன் பெற்றும், கொடுங்கையூர் கோயம்பேடு, வில்லிவாக்கம், நெசப்பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள சுத்திகரிப்பு நிலையங்கள் 51 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படுகின்றன.
- இது தவிர, அடையாறு, கூவம் நதிகள் மற்றும் பக்கிங்காம் கால்வாய்,ஓட்டேரி கால்வாய் ஆகியவற்றில் கழிவு நீர் கலக்கும் சுமார் 350 இடங்களை அடைத்து அக்கழிவுநீரை மறுபடியும் கழிவு நீர் அமைப்புகளுக்கு திருப்பிச் செலுத்தவும் 17 கோடி ரூபாய் செலவில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- 2 இலட்சத்து 98 ஆயிரத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் 16 கழிவுநீர் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- 1 கோடியே 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் புழலேரியில் நீரேற்று நிலையம் கட்டப்பட்டுள்ளது.
- 11 கோடியே 94 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் குடிநீர் கொணரும் பெருங்குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- 74 கோடியே 9 ஆயிரம் ரூபாய் செலவில் மண்டல குடிநீர் வழங்கும் குழாய்கள் அமைக்கப் பட்டுள்ளன.
- 27 கோடியே 76 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் மண்டல நீரேற்று நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- 2 கோடியே 11 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் செலவில் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன்**

- 36 கோடியே 51 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் செலவில் நீரியற் கழிவுகளை எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- 15 கோடியே 57 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாய் செலவில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை (permeate) தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்லும் பணிகள் நடைபெற்றுள்ளன.

**ஹட்கோ நிதியுதவியுடன்**

- 83 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் செலவில் சுத்திகரிக்கப்பட்ட நீரை எடுத்துச் செல்லும் குழாய்கள் புழலேரியில் இருந்து போரூர் வரை அமைக்கப்பட்டுள்ளது.
- 80 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் வள்ளுவர் கோட்டம், திருவல்லிக்கேணி, கண்ணப்பர் திடல் ஆகிய இடங்களில் தலைமை நீர் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- 7 கோடியே 12 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் செலவில் ஈக்காட்டுத்தாங்கல், சூளைமேடு ஆகிய இடங்களில் தலைமைக் குடிநீர் நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன.
- 83 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் வேளச்சேரியில் விடுபட்ட பகுதிகளுக்கு கழிவுநீர் அகற்றும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- 82 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் செலவில் டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் வடக்குப் பகுதியில் கழிவு நீரகற்றும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- 34 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் செலவில் சாரதி நகர், வ.உ.சி. நகர், ஜோதி இராமலிங்க நகர், முத்துரங்கம் பிளாக், கட்டபொம்மன் பிளாக் ஆகிய பகுதிகளில் கழிவு நீரகற்றும் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- 3 கோடியே 91 இலட்சத்து 87 ஆயிரம் கழிவுநீர் குழாய்கள் மாற்றுப்பாதையில் அமைக்கப் பட்டுள்ளன.

சென்னை மட்டுமல்ல; அன்னைத் தமிழக முழுதுமுள்ள அனைத்து கிராம நகரப் பகுதிகளிலும் இந்த அரசின் இணையற்ற திட்டங்கள் இடைவிடாது நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

• • •

வணிகர்களும் நாட்டு மக்களின் ஒரு அங்கம்தான் என்பதை உணர்ந்து அவர்கள் வாழ்விலும் ஒளியேற்ற வேண்டும், அதே நேரத்தில் பொருட்களை வாங்குவோரும் பயனடைய வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசினால் செயல்படுத்தப்பட்ட சாதனைகளின் தொகுப்பு களைக் காண்போம்.

பெரும்பான்மையான பொருள்கள் மீதிருந்த பல முனை வரியை நீக்கி 1989–90ஆம் ஆண்டில் கலைஞர் அரசில் ஒரு முனை வரி கொண்டுவரப்பட்டது. பின்னர் வந்த ஆட்சியால் பல பொருள்களுக்கு பல முனை வரி விதிக்கப்பட்டது. 96இல் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் எல்லாப் பொருள்களின் மீதும் பல முனை வரியை அகற்றி ஒரு முனை வரியாக ஆக்கப்பட்டது.

1975ஆம் ஆண்டு இறுதியில் கலைஞர் அரசினால் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்ட "தமிழ்நாடு வணிகர் நல வாரியம்" 1976 சனவரியில் கலைஞர் அரசு கலைக்கப் பட்டமையால் தொடங்கப்படவில்லை. பின், 1989இல் கலைஞர் அரசு மீண்டும் அமைந்த போது, 25.9.1989 அன்று வெளியிடப்பட்ட ஆணையின்படி தொடங்கப்பட்டு, 28.9.2000 வரை 35,352 வணிகர்கள் ஆயுள் உறுப்பினர் களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அரசு ஆரம்ப காலத்தில் ஒதுக்கிய நிதி ரூ.2 கோடியைத் தவிர, அரசிடமிருந்து ஈட்டுத் தொகையாக ரூ.35,49,000 பெறப்பட்டு, 17.10.2000 வரை கல்வி ஊக்கத்தொகையாக 49 நபர்களுக்கு 1 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாயும், மருத்துவ உதவித் தொகையாக 15 நபர்களுக்கு 3 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாயும், தீ விபத்துக்கான உதவித்தொகையாக 27 நபர்களுக்கு 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாயும், மாணவர் ஊக்கத் தொகையாக 6 மாணவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும், குடும்பநல உதவியாக 118 குடும்பங்களுக்கு 38 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாயும், மாநில அளவிலான விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற ஒரு நபருக்கு வழங்கப்பட்ட தொகை 5 ஆயிரம் ரூபாயும் என மொத்தம் 217 நலிவுற்ற வணிகர்களுக்கு அளிக்கப்பட்ட ரூ.47 இலட்சத்து 67 ஆயிரம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இந்த வாரியத்தை மேலும் சீரமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழக வரலாற்றில் முதன்முறையாக 1999–2000 நிதிநிலை அறிக்கை தயாரிக்கும்முன் மாநிலத்திலுள்ள அனைத்து வர்த்தகச் சங்கங்கள், வணிகர் சங்கங்கள் ஆகியோரை அழைத்து அவர்களுடைய கருத்துகளைக் கேட்டு வரிச்சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. அதுபோலவே, 2000–2001 நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் முன்பும் 11.3.2000 அன்று இக்கூட்டம் நடத்தப்பட்டு கருத்துகள் கேட்கப்பட்டன.

விற்பனை வரி அமைப்பு மற்றும் நடைமுறைகளில் சீர்திருத்தங்கள் செய்வதற்காக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியான திரு சி.தங்கராசு அவர்களைத் தலைவராகக் கொண்டு குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகளைப் பெற்று அவற்றை இந்த அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. ஆண்டுவாரியாக வழங்கப்பட்ட வரிச் சலுகைகள் வருமாறு:–

**1996-97**

விற்பனை வரி மீது இருந்த 15 விழுக்காடு மேல்வரியும், 5 விழுக்காடு கூடுதல் மேல்வரியும் 17.7.1996 முதல் நீக்கப்பட்டது.

ரூ.100 கோடிக்குக் குறைவாக விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்கு கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. ( இது 98 – 99 ல் 25 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டது.)

பருப்பு வகைகள், மஞ்சள், மிளகாய், வெல்லம், புளி, தனியா, பெருங்காயம், சீரகம், சீயக்காய், பனங் கற்கண்டு ஆகியவற்றிற்கு 4 விழுக்காடு மற்றும் 3 விழுக்காடு வரியிலிருந்து வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

கரும்பின் மீது விதிக்கப்பட்ட 11 விழுக்காடு வரி மற்ற வரிகளோடு சேர்ந்து 14.7 விழுக்காடாக இருந்தது, 8 விழுக்காடாக குறைக்கப்பட்டது. 1–4–97 முதல் இது ஒரு குறிப்பிட்ட தொகை (Flat Rate) என்று வரையறுக்கப் பட்டது.

எட்டாம் அட்டவணையில் பட்டியலிடப்பட்ட தொழில் மூலதனப் பொருட்கள் (capital goods) 3 விழுக்காடு சலுகை வரி விதிப்பில் 17.7.1996 முதல் சேர்க்கப்பட்டது.

கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளுக்கு 3 விழுக்காடு வரியிலிருந்து வரிவிலக்கு அளிக்கப் பட்டது.

தேங்காய் மட்டை, நெல் உமி மற்றும் குருணை, அலுமினிய வீட்டு உபயோகப் பாத்திரங்கள், வெள்ளி மெட்டி, கொலுசு, அரைஞாண் கயிறு ஆகியவைகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

கம்ப்யூட்டர்கள், அதன் உதிரி பாகங்கள், பொரி கடலை, பட்டாணி, பட்டாணிக் கடலை, புகைப்படத் தொழிலில் பயன்படுத்தப்படும் சுருள், தாள் மற்றும் இரசாயனங்கள் ஆகியவற்றுக்கு 11 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக வரி குறைக்கப்பட்டது.

சமையல் எரிவாயு, எலெக்ட்ரானிக் கேஷ் ரிஜிஸ்டர், கணக்கிடும் மற்றும் பட்டியலிடும் பொறிகள், எலெக்ட்ரானிக் கருவிகள் மற்றும் எலெக்ட்ரானிக் பொருட்கள், எலெக்ட்ரானிக் கால்குலேட்டர்கள், வோல்டேஜ் ஸ்டெபிலைசர்கள், மரம், எலெக்ட்ரிக் பம்பு, செருப்பு, பாக்கு, சீவல் உள்ளிட்ட வாசனைப் பாக்கு, பிரஷர் குக்கர், உலர் பாட்டரிகள், உலர் செல்கள், இங்க், மின் விசிறி, மின்சார பல்புகள், டியூப் லைட்டுகள், பிட்டிங்ஸ், சோக் மற்றும் ஸ்டார்ட்டர்கள், நீர் வழங்குவதற்குப் பயன்படும் குழாய் போன்ற சாதனங்கள், காமிரா, என்லார்ஜர் மற்றும் லென்சுகள், பித்தளை, செம்புப் பாத்திரங்கள், ஆடியோ கேசட்டுகள், அலுமினியப் பொருட்கள் ஆகியவற்றுக்கு 11 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாக வரி குறைக்கப்பட்டது.

**வரிக்கொள்கை மாற்றம்**
**வணிக சமுதாய முன்னேற்றம்!**

வணிகக் குறியிடப்படாத வெண்ணெய், நெய், பிஸ்கட, மிட்டாய் மற்றும் சாக்லெட்டுகள், எழுதுகிற காகிதம், அச்சடிக்கத் தேவைப்படும் காகிதம், கம்ப்யூட்டருக்கு உபயோகப்படும் காகிதம், பால் கொண்டுசெல்ல பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகள் மற்றும் ரெடிமேடு ஆடைகளுக்கு 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக வரி குறைக்கப்பட்டது.

பருப்பு வகைகளிலிருந்து தயாரிக்கப்படும் மாவு வகைகளுக்கு 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக வரி குறைக்கப்பட்டது.

**1997-98**

யூரியா உரத்துக்கு விற்பனை வரி 4 விழுக்காட்டி லிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

சொட்டுநீர்ப் பாசன சாதனங்கள் போன்ற நீர்ப்பாசன சாதனங்களுக்கு வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

மீன் மற்றும் கால்நடைத் தீவனத்திற்கு 11 விழுக்காடு மற்றும் 4 விழுக்காட்டிலிருந்து முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

மூங்கிலால் செய்யப்பட்ட தட்டி, முறம், கூடைகள், தேங்காய் ஓடுகள், நிலக்கடலைத் தோல், சீயக்காய் பொடி, தொன்னை, சாம்பிராணி, சம்மட்டி, கடல் சிப்பி மற்றும் சிப்பிகளால் செய்யப்பட்ட பொருள்கள், தயிர், பஞ்சாமிர்தம், நாட்டு மருந்துகள் 39 மற்றும் புற்றுநோய், தொழுநோய், காசநோய்களுக்கான உயிர்காக்கும் மருந்துகள், ஊனமுற்றோர் பயன்படுத்தும் சைக்கிள் வாகனங்கள், கல்வி அட்டவணைகள், வரைபடங்கள், சுற்றுலா கையேடு, வரைபடங்கள், சூரியஒளி மின்கலன்கள் (Solar Cell) செங்கல் மற்றும் ஓடு செய்யப் பயன்படும் களிமண், அவுரி இலை மற்றும் காய், நிலவாகை செடி இலை, மரவள்ளிக் கிழங்கின் கப்பி மற்றும் திப்பி, பழைய வெள்ளியினால் ஆன மெட்டி, கொலுசு, அரைஞாண் கயிறு, ரூ.50/–க்கும் குறைவான காலணிகள், தங்க நகைகள் ஏற்றுமதி செய்வோர்க்கு மத்திய அரசு நிறுவனமான எம்.எம்.டி.சி. விற்கும் தங்கம் ஆகிய இனங்களுக்கு முறையே 11 சதவீதம், 8 சதவீதம், 4 சதவீதம் மற்றும் 2 சதவீதம் என்று இருந்த வரிகள் ரத்து செய்யப்பட்டன.

கைப்பெட்டிகள், ஆயில் இன்ஜின் பாகங்கள், மேசை, நாற்காலி போன்ற அறைகலன்கள், வணிகர் சின்னம் உள்ள (Branded) வெண்ணெய், நெய் ஆகியவற்றிற்கு வரி 11 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக குறைக்கப் பட்டுள்ளது.

மூக்குக் கண்ணாடி மற்றும் தட்டச்சுப் பொறிகளுக்கு வரி 20 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

காகிதப்பைகள், குடைகள், கைவினைப் பொருட்கள், 30 அடி சரக்குப் பொருட்கள் மற்றும் தார்ப்பாய் போன்ற இனங்களுக்கு வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

தமிழ் தட்டச்சுகளுக்கு 20 விழுக்காடு வரி என்பது 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

கண்ணாடி மணிகள், கண்ணாடி கோலி குண்டுகள், கொசு விரட்டிகள் மற்றும் அழிப்பான்கள், அதற்கு பயன்படும் வில்லைகள் முதலியவற்றிற்கு வரி 16 விழுக் காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

வறுத்த வேர்க்கடலை, தலைக்கவசங்கள், தாவரக் கழிவு கட்டிகள், ஜல்லி, பொம்மைகள், மின்னணுப் பொருட்களின் பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள் (Electronic parts and accessories) மாணவர்கள் ஓவியத்திற்குப் பயன்படுத்தும் எழுது பொருட்களுக்கு வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

வணிகச் சின்னம் இல்லாத காலணிகள், செப்பு, எவர்சில்வர் மற்றும் பித்தளையால் செய்யப்பட்ட வீட்டு உபயோகப் பாத்திரங்கள், சுவையூட்டப்பட்ட பால், கழிவு காகிதங்கள், கல்வி நிலையங்களுக்கு விற்கப்படும் விஞ்ஞானக் கருவிகள், தையல் மற்றும் சித்திர தையல் இயந்திர பாகங்கள் மற்றும் அதன் ஊசிகள் ஆகியவற்றின் மீதான வரி விகிதம் 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப் பட்டது.

மாநிலத்திற்குள் விற்பனை செய்யப்படும் தேங்காய், கொப்பரை போன்றவற்றிற்கு வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

பனியன் உள்ளிட்ட பின்னலாடைகளுக்கு வரி 4 விழுக்காட்டிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டது.

பருத்திக்கு கொள்முதல் வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

சரிகை மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்பட்டது. .

செயற்கை இழை, நூல் மற்றும் செயற்கை இழைகளுக்கு பிற மாநில முகவர்களுக்கு கிளை மாற்றமாகவோ அல்லது முகவர் விற்பனையாகவோ செய்யக்கூடாது என்ற நிபந்தனையின்பேரில் வரி 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப் பட்டது.

**1998-99**

சமையல் எண்ணெய்களுக்கு 4 விழுக்காட்டிலிருந்து வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

ரப்பர் பொருட்கள் தயாரிப்பாளர்கள் கொள்முதல் செய்யும் இயற்கை ரப்பர் மீது செலுத்த வேண்டிய கொள்முதல் வரிகள் 3 விழுக்காடிற்கு மேல் செலுத்த வேண்டிய வரியை, உற்பத்திப் பொருள் மீது செலுத்த வேண்டிய வரியிலிருந்து குறைத்துக் கொள்ளும் சலுகை அளிக்கப்பட்டது.

வணிகச் சின்னம் இடப்பட்ட ஐஸ்கிரீம் மீதான 16 விழுக்காடு வரி 11 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. பேக்கரியால் தயாரிக்கப்படும் வணிகச் சின்னம் இல்லாத உணவுப் பொருட்களின் மீதான வரி 8 விழுக்காடிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

வணிகச் சின்னமுள்ள மற்றும் வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கான 16 விழுக்காடு வரி முறையே 4 மற்றும் 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

தேங்காய் மற்றும் கொப்பரைத் தேங்காய் மீதான 2 விழுக்காடு வரி 1 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

கேளிக்கை வரி 40 விழுக்காட்டிலிருந்து புதிய திரைப்படங்களுக்கு 30 விழுக்காடு எனவும், பழைய திரைப்படங்களுக்கு 20 விழுக்காடு எனவும் குறைக்கப்பட்டது.

விழியினிடையே பொருத்தப்படும் ஆடிக்கு (Intra Ocular Lense) வரி விலக்கு அளிக்கப்பட்டது.

காசினி கீரைப் பொடிக்கு 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) வரி விலக்கு அளிக்கப்பட்டது.

எண்ணெய் எடுக்கப்பட்ட .அரிசி தவிட்டிற்கு 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

**1999-2000**

விசை உழுக்கருவிகளின் இழுவைகள் (Trailers of Powers Tillers) மீதான வரி 11 விழுக்காட்டிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகள் மீதான வரி 2 விழுக்காட்டிலிருந்து அரை விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. (சமச்சீர் வரிக் கொள்கைப்படி 23.1.2000 முதல் ஒரு விழுக்காடாக மாற்றப்பட்டது.)

தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகள் மொத்த விற்பனைத் தொகை மீதான கூடுதல் விற்பனை வரி நீக்கப்பட்டது.

பழுதடைந்த அல்லது தேய்ந்த நகைகளுக்கான கொள்முதல் வரி 2 விழுக்காட்டிலிருந்து அரை விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. (சமச்சீர் வரிக் கொள்கைப்படி 23.1.2000 முதல் ஒரு விழுக்காடாக மாற்றப்பட்டது.)

நவரத்தினங்கள் மீதான வரி 16 விழுக்காட்டி லிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

உடனடி சாம்பிராணி வில்லைகள் மற்றும் குச்சிகள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

உலர்ந்த ரொட்டித் துண்டுகள் (ரஸ்க்) மீதான வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

அடக்கமான பேரொளி குழல் விளக்குகள் (Compact fluorescent lamps) மீதான வரி 16 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

வாழ்த்து அட்டைகள் மற்றும் அழைப்பிதழ்கள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

கணினிகள் மற்றும் புற உறுப்புகள் மீதான வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

கணினிகள் மற்றும் புற உறுப்புகள் மொத்த விற்பனைத் தொகை மீதான கூடுதல் விற்பனை வரி நீக்கப்பட்டது.

செல்லுலார் தொலைபேசி மீதான வரி 11 விழுக் காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

தமிழ் தினசரி நாட்காட்டி மீதான வரி 8 விழுக்காட் டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

தொலையச்சுக் காகிதம், தட்டச்சுக் காகிதம், தட்டச்சு படிப்பெருக்கும் காகிதம் மற்றும் உயர்தன்மை காகிதம் (Bond Paper) மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

ரொக்கம் பதிவு செய்யும் மின்னணு பொறிகள் மற்றும் டிரான்சிஸ்டர் மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. (சமச்சீர் வரிக் கொள்கைப்படி 23.1.2000 முதல் 8 விழுக்காடாக மாற்றப்பட்டது.)

தடையில்லா மின் வழங்கும் அமைவுகள் (UPS) மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. (சமச்சீர் வரிக் கொள்கைப்படி 23.1.2000 முதல் 4 விழுக்காடாக மாற்றப்பட்டது.)

ஏற்றுமதிக்கு ஈடான இறக்குமதி செய்யத்தக்க உரிமம் போன்றவற்றிற்கு (REP Licences etc.) வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் பட்டது.

சலுகை வரி மூலம் மூலப் பொருட்களை கொள்முதல் சரக்கு மாற்றம் செய்வோர் செலுத்த வேண்டிய வரி 2 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

ஒவ்வொரு மாதமும் தாக்கல் செய்ய வேண்டிய படிவம்–17, ஒரு ஆண்டுக்கு ஒரு படிவம் தாக்கல் செய்யும் வகையில் தமிழ்நாடு பொது விற்பனை வரி விதி திருத்தம் செய்யப்பட்டது.

அனைத்து வகையான கொசு வலைகள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

நிலக்கடலைப் பருப்பு, எள், அரிசிப் பொரி, வறுகடலை மற்றும் பட்டாணிப் பருப்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட இனிப்புகள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

சூரிய ஒளியில் இயங்கும் விளக்குகள், புடவை விளிம்புப் பட்டிகள், காலணிப்பட்டிகள், பருத்தி நூல் கயிறு, பிரம்பினால் செய்யப்பட்ட தட்டி, கூடை மற்றும் முறம், இறால் உண்ணும் உணவு, கூனி இறால் உண்ணும் உணவு, நீராவி, கரும்புச் சக்கை ஆகியவற்றிற்கு 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

மின்னணு படிப்பெருக்கிப் பொறிகள், மின்னணு அட்டவணையிடும் பொறிகள், மின்னணு தொலையச்சுப் பொறி, ஒலித்தட்டை இயக்கச் செய்யும் கருவிகள், ஒலிப்பதிவு மற்றும் மறு ஒலிக்கருவிகள், தொலைக்காட்சிப் படமெடுக்கும் கருவிகள் மற்றும் படம் பதிவு செய்யும் கருவிகள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.(சமச்சீர் வரிக் கொள்கைப்படி 23.1.2000 முதல் 8 விழுக்காடாக மாற்றப்பட்டது.)

மின்னணு அல்லாத படிப்பெருக்கி இயந்திரங்கள் மீதான வரி 20 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

மோட்டார் வாகன பல்ப் மற்றும் ஒலிப்பான்கள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

இரும்பு அல்லாத உலோகக் கழிவுகள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் பட்டது.

கம்பளியால் பின்னப்பட்ட பொருட்கள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்

பட்டது.

சர்பத் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

காகித உறைகள் மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

மின்சார உதவியில்லாமல் தயார் செய்யப்படும் தகர கொள்கலன்கள் மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

**2000-2001**

மொசைக் கற்கள், செராமிக் சுவர், தள ஓடுகள் மீது விதிக்கப்பட்டிருந்த வரி 20 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

பளிங்குக் கற்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரியானது 20 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

செராமிக் துப்பரவுக் கலன்கள் மீது விதிக்கப்பட்டிருந்த 16 விழுக்காடு வரியானது 12 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

இஸ்திரிப் பெட்டிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள் போன்ற வீட்டு உபயோக மற்றும் வணிகத்திற்குரிய மின் சாதனங்கள் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

அனைத்துவகை மின் சக்திக் கருவிகள், (apparatus) உபகரணங்கள், சாதனங்கள் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

அனைத்து வகை மின்சக்திப் பொருட்கள் (Electrical Goods) மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப் பட்டது.

உருளைகள் (bearings) மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப் பட்டது.

மின்னணு பொருட்களின் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளின் மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் பட்டது.

நித்தியக் கல்யாணி இலை மற்றும் வேர், அடிசரக்கு இனங்கள், காது கேட்கப் பயன்படும் கருவிக்கான கம்பி (cord), அரைஞாண் கயிறு, பதப்படுத்தப்பட்ட பால், நாட்டுச் சர்க்கரை மற்றும் கற்கண்டு, வணிகச் சின்னமில்லாத மசாலாப்பொடி, வணிகச் சின்னமில்லாத காய்கறி வத்தல்கள், தமிழ் தினசரி காலண்டர்கள், காகித உறைகள் மற்றும் பைகள் ஆகியவற்றின் மீதான 11 விழுக்காடு, 8 விழுக்காடு, 4 விழுக்காடு மற்றும் 2 விழுக்காடு விற்பனை வரி அறவே நீக்கப்பட்டது.

அனைத்து கண்ணாடி மற்றும் கண்ணாடி கலன்கள், உலோகப் பூச்சுகள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப் பட்டது.

பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட கண்ணாடி சீசாக்கள் மீதான கொள்முதல் வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

பேஜர்கள், செராமிக் கற்கள் (ceramic bricks) மற்றும் வெளுப்புத் திரவத்தின் (bleach liquid) மீதான விற்பனைவரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

வறுகடலையின் மீதான விற்பனை வரி 4 விழுக் காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

மின்வாரியம், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசன் போன்ற மின் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும் டிரான்ஸ்பார்மர் எண்ணெய் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

கேளிக்கை வரிச் சட்டப்பிரிவு-4ன் கீழ் வரி செலுத்தும் திரையரங்குதாரர்கள் புதிய திரைப்படங் களின் மீது செலுத்தும் கேளிக்கை வரி 30 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

திரைப்படங்கள் குத்தகை மீதான 4 விழுக்காடு விற்பனை வரி அறவே நீக்கப்பட்டது.

ரூபாய் மூன்று லட்சத்திற்கு மேல், ஆனால் ரூபாய் பத்து இலட்சத்திற்குக் குறைவாக விற்பனைத் தொகை உள்ள வணிகர்கள், முதல் மூன்று இலட்சம் வரை உள்ள விற்பனை மீது வரி வசூல் செய்திராவிடில், அத்தொகையின் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரி ரத்து செய்யப்பட்டது.

ஆயுர்வேதா மற்றும் ஒமியோபதி மருந்துகளின் மீதான வரி- 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

அனைத்து வகை பருத்திக் கழிவுகள் மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப் பட்டுள்ளது.

பி.வி.சி. பைப்புகள் மற்றும் குழாய்கள் மீதான வரி 12 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப் பட்டுள்ளது.

சமச்சீர் வரிவிதிப்பு சம்மந்தமாக அனைத்து மாநில நிதியமைச்சர்கள் அடங்கிய கூட்டத்தில் தமிழக அரசு வலியுறுத்தியதின் காரணமாக அத்தியாவசியத் தேவைக்குப் பயன்படக்கூடிய பொருட்கள் மீதான வரியை 39 இனங்களில் வரி சீரமைப்புக் குழு குறைத்துள்ளது.

வணிக வரித்துறை மூலம் 1996-97இல் 353 கோடி ரூபாய்க்கும் 1997-98இல் 143 கோடி ரூபாய்க்கும் 1998-99இல் 81 கோடி ரூபாய்க்கும் 1999-2000இல் 25 கோடி ரூபாய்க்கும் 2000-2001இல் 76 கோடி ரூபாய்க்கும் வரிச் சலுகை தரப்பட்ட வகையிலும் முதல் ஆண்டு தரப்பட்ட சலுகை தொடர் ஆண்டுகளுக்கும் பொருந்தும் என்ற வகையிலும் ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்ட வரிச் சலுகைகளின் மதிப்பு 2,700 கோடி ரூபாயாகும்.

28.5.1993 முதற்கொண்டு 16.7.1996 வரை விற்பனைத் தொகை ரூ.5 இலட்சம் வரையில் இருந்த சுய வரி விதிப்பிற்கான உச்ச வரம்பு, 17.7.1996 முதல் ரூ.10 இலட்ச மாகவும், 1.4.1998 முதல் ரூ.10 இலட்சம் என்பது ரூ.20 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டு, 1999-2000 ஆண்டு வரிவிதிப்புக்கு அது ரூ.1 கோடி எனவும் படிப்படியாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒப்பந்தக்காரர்கள், ஆண்டு முடிவில் முடிக்கப் பெற்ற ஒப்பந்தப் பணித் தொகையில், கட்டிடப் பணி ஒப்பந்தத் தொகையில் 2 விழுக்காடு இணக்க வரியாகவும், மற்ற ஒப்பந்த பணித் தொகையில் 4 விழுக்காடு இணக்க வரியாகவும் விதிக்கப்பட்டுள்ளது. இதைப் போன்றே, தங்கம் மற்றும் வெள்ளி நகை வணிகர்களின் வியாபாரத் தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 இலட்சங்கள் மிகாதிருப்பின், அவர்கள் விருப்பத் தெரிவின்படி இணக்க வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. தங்கராசு. இ.ஆ.ப. (ஓய்வு) தலைமையிலான வணிக வரி சீரமைப்புக் குழு வழங்கிய பரிந்துரைகளுக்கேற்ப தங்கம், வெள்ளி நகைகள் விற்பனை, உணவு விடுதிகளில் நிகழும் விற்பனை ஆகியவற்றிற்கு படிமுறை (Slab System) வரி விகிதம் 1997–98இல் அறிமுகம் செய்யப்பட்டது.

விற்பனை வரி விதிக்கத்தக்க குறைந்தபட்ச விற்பனைத்தொகை அளவு ரூ.1 இலட்சம் என்பது ரூ.3 இலட்சமாக 1996–97இல் உயர்வு. இதனால் 40 ஆயிரம் வணிகர்கள் பயனடைகிறார்கள்.

வணிகராகப் பதிவு செய்ய நிர்ணயிக்கப்பட்ட மொத்த விற்பனைத் தொகைக்கான வரம்பு ரூ.75 ஆயிரம் என்பது 1998–99இல் ரூ.1.50 இலட்சமாகவும், 1999–2000இல் ரூ.3 இலட்சமாகவும் உயர்வு.

**வரித் தள்ளிவைப்புத் திட்டம்**

வட்டியில்லா வரித் தள்ளி வைப்பு மற்றும் வரித் தள்ளுபடித் திட்டத்தின் கீழ், இதுவரை 992 கோடியே 51 இலட்சம் ரூபாயை தொழில் நிறுவனங்கள் பயன்படுத்திக் கொண்டுள்ளன.

**சமாதான் திட்டம்**

வணிக வரித்துறை வாயிலாகச் சமாதான் திட்டம் 1.6.1999 முதல் கொண்டு வரப்பெற்று, மொத்தம் 1706 வணிகர்கள் பயன் பெற்றனர். இதன் வாயிலாக 19 கோடியே 93 இலட்சம் ரூபாய் வரி நிலுவை வசூலிக்கப் பட்டு, 47 கோடியே ஆறு இலட்சம் ரூபாய் வரி நிலுவைத் தள்ளுபடிச் செய்யப்பட்டது.

**சோதனைச் சாவடிகள் நீக்கம்**

இடைமாநில சோதனைச் சாவடிகள் நீங்கலாக, உள்மாநிலத்தில் அமையப் பெற்ற சோதனைச் சாவடிகளில் 15 சோதனைச் சாவடிகள் 31.5.2000 அன்று வெளியிடப்பட்ட ஆணையின் மூலம் நீக்கப்பட்டன. இந்த அரசாணை 1.9.2000 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டது.

வணிக வரித்துறையில், வரிவிதிப்பு வட்டங்கள், சோதனைச் சாவடிகள், உதவி ஆணையர், துணை ஆணையர், இணை ஆணையர் மற்றும் ஆணையர் அலுவலகங்களில் மொத்தம் 246 கணினிகள் மூன்று கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் பொருத்தப்பட்டன.

**பத்திரப் பதிவில் முத்திரைத் தீர்வை சலுகைகள்**

தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தால் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த ஒதுக்கீட்டுதாரர்களுக்கு எழுதித் தரப்படும் கிரைய ஆவணங்களின் மீது செலுத்தப்படும் முத்திரைத் தீர்வைக்கு விலக்கு அளித்து 8.1.1998 அன்று ஆணையிடப்பட்டது.

படித்து வேலையின்றி இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் நோக்குடன் 19 மற்றும் 20.7.1997 ஆகிய நாட்களில் ஆவண எழுத்தர்களுக்கான உரிமத் தேர்வு நடத்தப்பட்டு தேர்ச்சி பெற்ற 22,000 பேருக்கும் ஆவண எழுத்தர் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே செய்யப்படும் பாகப்பிரிவினை ஆவணங்கள் மீது விதிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை 4 சதவீதம் என்பது 2 சதவீதமாகக் குறைத்து 13.8.1997இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது..

ரூ.3 ஆயிரத்திற்கு மேற்படாத அசையாச் சொத்துக்கள் விற்பனையில் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தில் இருந்து முழு விலக்கு 27.7.1998இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதிலும் கூடுதலாக 1524 முத்திரைத் தாள் விற்பனை இடங்களை உருவாக்கி 6.7.98இல் ஆணையிடப்பட்டுள்ளது.

ஒத்தி ஆவணங்கள் மீதான முத்திரைத் தீர்வை 7 சதவிகிதம் என்பதை 4 சதவிகிதமாக குறைத்து 13.8.97இல் ஆணையிடப்பட்டுள்ளது.

வீட்டுவசதிக் கடன் நிறுவனங்கள் பொதுமக்களிடம் அடமானம் பெறும் சொத்துக்களை மறு ஈடு வைத்து கடன் பெற விதிக்கப்படும் 13 விழுக்காடு முத்திரைத் தீர்வை 0.1 விழுக்காடாக குறைத்து 17.12.97இல் ஆணையிடப் பட்டதால் வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனங்கள் அதிக நிதி ஆதாரங்களைத் திரட்டி, வீடு கட்டுபவர்களுக்கு அதிக அளவில் கடன் வசதிகளை அளிக்கிறது.

26.2.1999 அன்று அறிமுகப்படுத்தப்பட்ட சமாதான் சலுகை திட்டத்தின்கீழ் 1.3.1999 அன்று முத்திரைத் தனித் துணை ஆட்சியரிடம் நிலுவையில் உள்ள ஆவணங்களில் வழிகாட்டி மதிப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மதிப்பின்மீது விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வை மற்றும் ஏற்கனவே செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை ஆகிய இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டுத் தொகையில் 50 சதவிகிதத்தினை செலுத்தி ஆவணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் வகையில் 1.3.1999 முதல் 30.9.1999 வரை செயல்படுத்தப்பட்டது. இதன்மூலம் 36,813 ஆவணங்கள் முடிக்கப்பட்டு 34 கோடியே 56 இலட்சம் ரூபாய் வருவாய் ஈடப்பட்டுள்ளது.

பதிவுத்துறையை கணினிமயமாக்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, ஆவணங்கள் பாதுகாப்பு, சான்றிட்ட நகல்கள், வில்லங்கச் சான்று, வழிகாட்டி மதிப்பு தகவல் போன்றவை உடனடியாக வழங்கப்பட ஆவன செய்யப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் நெடுஞ்சாலை, நீர்ப்பாசனம், மின்உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் போன்ற பெரும் உள்கட்டமைப்புத் திட்டங்கள் குறித்து 50 கோடி ரூபாய்க்கு மேல் எழுதிக் கொடுக்கும் அடமான ஆவணங்கள் மீது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வையை ரூ. 25 இலட்சம் எனவும், பதிவுக் கட்டணம் ரூ. 5 இலட்சம் எனவும், 2.12.1999 அன்று குறைத்து ஆணையிடப்பட்டது.

புதிய வரிக் கொள்கை மாற்றத்தினாலும் – வரி விதிப்பு குறித்து வணிகப் பெருமக்களின் பிரதிநிதிகளுடன் கலந்து பேசுகிற நிலையை இந்த அரசு கடைப்பிடித்ததாலும் – விற்பனை வரி சம்பந்தமான ஆலோசனைக் குழுக்களின் பரிந்துரைகளை பெருமளவு ஏற்றுக் கொண்டதாலும் – நாலரை ஆண்டுகளில் 2,700 கோடி ரூபாய் அளவுக்குச் சலுகைகளையும் வரிவிலக்குகளையும் வழங்கியும்கூட 1996ஆம் ஆண்டு விற்பனை வரி மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் 5,023 கோடி ரூபாய் என்பது இந்த ஆண்டு சுமார் 8,000 கோடி ரூபாய் அளவுக்கு உயருமென்றால் இந்த அரசின் வணிகர் உறவும் வரிக் கொள்கையின் பலனும் பெற்றுள்ள வெற்றிக்கு அடையாளம்.

• • •

# எங்கெங்குக் காணினும் திட்டங்கள்; எண்ணிலடங்காச் சாதனைகள்!



பொதுத்துறை

பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளையொட்டி, ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 17–ஆம் நாள் தியாகிகள் தினமாகக் கொண்டாடப் படும் என 17.7.99 அன்று அறிவிக்கப்பட்டு, தொடர்ந்து கொண்டாடப் பட்டு வருகிறது.

சுதந்திரத் திருநாள் பொன்விழா கொண்டாட்டத்தையொட்டி, 15.8.1997 முதல் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கும், மொழிப்போர் தியாகிகளுக்கும் மாத ஒய்வூதியம் ரூ.1500/– என்பது ரூ.3000/– என் இந்த அரசால் உயர்த்தப்பட்டது. அத்துடன் அவர்களுக்கு 1.8.1990 முதல் மருத்துவப்படி ரூ.15/– வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத் தக்கது.

15.8.1997 முதல் அவர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்கு மாதாந்திர குடும்ப ஒய்வூதியம் ரூ.750/– என்பது ரூ.1500/– ஆக உயர்த்தப்பட்டது.

மத்திய அரசின் தியாகிகள் ஒய்வூதியம் பெறுவோர்க்கு மாநில அரசு வழங்கும் மாத ஒய்வூதியம் ரூ.250/– என்பது ரூ.500/– ஆக 1.4.1997 முதல் உயர்த்தப்பட்டது.

சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பகங்கள் மூலம் வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்க 4.5.1999 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொறியியல் பட்டப் படிப்பில், விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு ஒதுக்கீடு ஒரிடம் என்று இருந்து வந்ததை 1999–2000 ஆம் ஆண்டு முதல் ஐந்து இடங்கள் என்றும், 2000–2001 ஆம் ஆண்டிலிருந்து அதனை பத்து இடங்கள் என்றும் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இயற்கை எய்திடும் விடுதலைப் போராட்ட வீரரின் ஈமச்செலவிற்காக 1000 ரூபாய் வழங்க

வேண்டுமென்று 1989ஆம் ஆண்டு அறிவித்த கலைஞர் அரசு அந்த ஆயிரம் ரூபாயை 2000 ரூபாயாக தற்போது உயர்த்தியுள்ளது. மேலும் வட்டாட்சியர் தகுதிக்கு குறையாத அதிகாரி ஒருவர் நேரில் சென்று அரசு சார்பில் மரியாதை செய்ய வேண்டுமென்றும் அரசு ஆணையிட்டது.

மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர் களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.150/– வீதமும், வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசுதாரர்களுக்கு மாதம் ரூ.300/– வீதமும் வழங்கப்பட்டு வந்த உதவிப்பணம் 30.8.1996 முதல் மாதம் ஒன்றிற்கு ரூ.500/– ஆக உயர்த்தப்பட்டது.

முன்னாள் முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களின் உதவியாளர் திரு. பாலு அவர்களுக்கு ரூ.3.50 இலட்சத்தில் இலவசமாக இல்லம் அளிக்கப்பட்டுள்ளது.

ஒய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகளுக்கு 1990ஆம் ஆண்டு முதல் அரசு போக்குவரத்துகளில் இலவசப் பயணச் சலுகை; 1996இல் இச்சலுகை அவர்களின் வாரிசுகளுக்கும் நீட்டிப்பு.

மனித உரிமைகள் மீறல் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் எளிதாகவும், விரைவாகவும் நிவாரணம் பெறும் பொருட்டு மாநில மனித உரிமைகள் ஆணையம் 17.4.1997 அன்று ஏற்படுத்தப்பட்டது.

சாதிக்கலவரங்கள் ஏற்படாவண்ணம் தடுக்கும் எண்ணத்தோடு 15.5.97 அன்று அரசால் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப் பட்ட முடிவிற்கிணங்க மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் ஊராட்சி அளவிலும் அமைதிக் குழுக்களை அமைத்து சமுதாய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு அமைதிக் கூட்டங்களை நடத்துமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

சாதி / மதக் கலவரங்களில் இறந்தவர்கள் குடும்பத் திற்கு 1.1.97 முதல் நிவாரணத் தொகை ரூ.2 இலட்சம் வீதம் வழங்க 22.5.98 அன்று அரசு ஆணை பிறப்பித்தது.

தமிழகத்தில் குறிப்பாக தென் மாவட்டங்களில் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்களுக்கான அடிப்படை காரணங்களை கண்டறியவும், இதுபோன்ற வகுப்புக் கலவரங்கள் உருவாகாமல் தடுக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைக்கவும், தீண்டாமைச் சட்டம் செம்மையாகச் செயல்படுத்தப் படுகிறதா என்பதைக் கண்டறியவும், உச்சநீதிமன்ற ஒய்வுபெற்ற நீதிபதி திரு. எஸ். மோகன் அவர்கள் தலைமையில் உயர்மட்டக்குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டது. அக்குழு அளித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளில் பெரும்பாலானவை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு செயல்படுத்தப் படுகின்றன.

சாதிக் கலவரங்களை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் அரசால் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் 22.10.1998 மற்றும் 26.10.1998 ஆகிய இரு தினங்களிலும் சென்னையில் கூட்டப்பட்டது.

சமத்துவ சமுதாய மறுமலர்ச்சியினை ஏற்படுத்த அரசாங்கத்தில் தனியாக "சமூக சீர்திருத்தத் துறை" என்ற ஒரு துறை உருவாக்கப்பட்டது.

கோவையில் முஸ்லீம்கள் மற்றும் இந்துக்கள் மத நல்லிணக்கத்திற்காக பாடுபட்டு மதத் தீவிரவாதி களால் கொலை செய்யப்பட்ட திரு. கோட்டை அமீர் அவர்களின் பெயரால் "கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம்" என்ற பதக்கம் வழங்க 16.6.2000 அன்று அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

கார்கில் போராட்டத்தின்போது மரணமடையும் தமிழகத்தைச் சார்ந்த வீரர்களின் குடும்ப நலனுக்காக "கார்கில் இராணுவ வீரர் நிதி" என்ற நிதியை அரசு ஏற்படுத்தியது. இந்நிதியில் 18.10.2000 வரை பொது மக்களிடமிருந்து நன்கொடையாக ரூபாய் ஐம்பத்தொன்பது கோடியே இரண்டு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து நூற்று அறுபத்து நான்கு மற்றும் பைசா ஒன்பது மட்டும் பெறப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து ரூ.50/– கோடி தேசிய பாதுகாப்பு நிதிக்கு பிரதமரிடம் அளிக்கப்பட்டது. போராட்டத்தின் போது மரணமடைந்த இராணுவ வீரர்களின் குடும்பம் ஒவ்வொன்றிற்கும், கருணைத் தொகை ரூ.5/– இலட்சம், உயர் வருவாய் குடியிருப்பு, குடும்பத்தில் ஒருவருக்கு கருணை அடிப்படையில் வேலை, உயிரிழந்த வீரரின் குழந்தைகளுக்கு தொழில் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு என கார்கில் போராட்டத்தில் உயிரிழந்த 19 வீரர்களின் குடும்பங்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

கடும் புயலினால் பாதிக்கப்பட்ட ஒரிசா மக்களுக்கு உடனடியாக உதவிடும் வகையில் தமிழக அரசின் சார்பில் ரூபாய் 50 இலட்சம் வழங்கப்பட்டது. மேலும், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.3/– கோடி மதிப்புள்ள வேட்டி, சேலைகள், ரூ.1/– கோடி மதிப்புள்ள பால் பவுடர், ரூ.44 இலட்சம் மதிப்புள்ள உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் ரூ.2 இலட்சம் மதிப்புள்ள அவல், வெல்லம் ஆகியவைகள் தமிழக அரசின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டன.

13.5.96–க்குப்பின் (19.10.2000 வரை) இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 30,173 பேருக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரண தொகை 41 கோடியே 89 இலட்சம் ரூபாயாகும்.

தென்மாவட்டங்களின் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புக்கான திட்டங்களை வகுத்து அளித்திட, நீதியரசர் திரு.இரத்தினவேல் பாண்டியன் அவர்களைத் தலைவராகவும், திரு.ஆர்.ஏ.சீத்தாராம தாஸ் அவர்களைத் துணைத் தலைவராகவும், திரு.ஏ.வெங்கடராமன் அவர்களை உறுப்பினராகவும் கொண்டு அமைக்கப்பட்ட குழு, தனது அறிக்கையை அளித்தது. அந்த அறிக்கையின் பரிந்துரைகளையொட்டி, தென்மாவட்டங்களில் புதிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள், தோட்டக்கலைப் பயிர் சிறப்புத் திட்டம், கண்மாய்களைப் பராமரிக்கும் திட்டம், மென் பொருள் வளர்ச்சிக்கான திட்டம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கான பல திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

**போக்குவரத்துத்துறை**

தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களின் சிறப்பான செயல்பாட்டிற்காக தேசிய உற்பத்தித் திறன் குழு ஆண்டு தோறும் வழங்கும் 10 விருதுகளில் 1997இல் 7 விருதுகளையும் 1998–99இல் 3 விருதுகளையும் பெற்றுள்ளது தமிழகம்.

கடந்த நான்கரை ஆண்டுகளில் வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் 9477. புதிய வழித்தடங்கள் 1468 ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பேருந்துகளுக்கு மேல் கூண்டு கட்டுதல், உதிரி பாகங்கள் வாங்குதல், பயணச்சீட்டு அச்சிடுதல் போன்றவைகளில் சிக்கன நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு, ஊழல் வழிமுறைகள் அகற்றப்பட்டதன் வாயிலாக 141 கோடியே 44 இலட்சம் ரூபாய் அரசுக்கு சேமிப்பு கிடைத்துள்ளது.



கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதிகளைப் பெருக்கிட மினி பஸ் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை 2334 மினி பஸ்கள் இயக்கப்படுகின்றன. மேலும் 2112 மினி பஸ்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

புறநகர் பேருந்துக் கட்டணங்களைப் பொறுத்தவரை ஒரு கிலோ மீட்டருக்கு ஆந்திராவில் 32 காசு, கர்நாடகாவில் 25.75 காசு, மராட்டியத்தில் 30 காசு, குஜராத்தில் 25.56 காசு, ராஜஸ்தானில் 28 காசு, அரியானாவில் 35.36 காசு, ஒரிசாவில் 26 காசு, கேரளாவில் 28 காசு, ஆனால் தமிழ்நாட்டில் 22 காசுதான். சொகுசுப் பேருந்துக் கட்டணத்தைப் பொறுத்தவரை ஒரு கிலோ மீட்டருக்கு ஆந்திராவில் 52 காசு, கர்நாடகாவில் 46 காசு, மராட்டியத்தில் 37.5 காசு, ராஜஸ்தானில் 46 காசு, அரியானாவில் 53.04 காசு, ஒரிசாவில் 32 காசு, கேரளாவில் 50 காசு, ஆனால் தமிழ்நாட்டில் 30 காசுதான்.

வாகனங்களுக்கு அளிக்கப்படும் முன்பதிவு எண்கள் மற்றும் சிறப்பு எண்கள் பெற செலுத்த வேண்டிய பதிவுக் கட்டணத் தொகை, 50 சி.சி.க்கு திறன் மிகாத மோட்டார் வாகனங்களுக்கு ரூ.5000லிருந்து ரூ.500 எனவும், 50 சி.சி.க்கு அதிகமான திறன் கொண்ட மோட்டார் வாகனம் மற்றும் மூன்று சக்கர (ஆட்டோ ரிக்சா உட்பட) வாகனங்களுக்கு ரூ.5000லிருந்து ரூ.1000 எனவும், ரூ.4 இலட்சத்திற்கு மிகாத விலையுள்ள வாகனங்களுக்கு ரூ.5000லிருந்து ரூ.3000 எனவும் குறைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சட்டமன்ற உறுப்பினர்களால் அவர்களது பெயரிலேயே பதிவு செய்யப்படும் வாகனங்களுக்கு முன்பதிவு எண் மற்றும் சிறப்பு பதிவு எண்கள் பெற பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஓய்வூதியத்திட்டம் கலைஞர் அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வழங்கப்படுகிறது.

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை**

இளைஞர் நலன்களைக் கவனிப்பதற்காகவே புதியதொரு துறையைத் தொடங்கி அதற்காக தனியொரு அமைச்சரை நியமித்தது இந்த அரசுதான்.

மாணவர்கள் அல்லாத இளைஞர்கள் மத நல்லிணக்கத்துடனும் உடல் ஆரோக்கியத்துடனும் வாழ, 5,000 விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் உருவாக்க ஆணை பிறப்பித்தபோதிலும் இதுவரை 6,998 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.



விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையம் ஒன்றிற்கு 25000 ரூபாய் வீதம் 5000 மையங்கள் அமைக்க அரசு 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் திருத்தியமைக்கப்பட்ட பொதுக்குழு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் 8.2.97 அன்று கூடி, அதில் விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்/வீராங்கனைகளை ஊக்குவிக்கும் பொருட்டு விளையாட்டு ஊக்க உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சார்ந்த விளையாட்டு வீரர்/ வீராங்கனைகள் பல்வேறு வெற்றிகளையும் சாதனைகளையும் நிகழ்த்துவதை ஊக்குவித்திட, அவர்களுக்கு "முதலமைச்சர் மாநில விளையாட்டு விருது" வழங்கவும், இவ்விருதுடன் விருதுத் தொகை ரூ.1 இலட்சம் வீதம் வழங்கவும், இந்த அரசு ஆணையிட்டு இதுவரை மொத்தம் 12 பேருக்கு 12 இலட்சம் ரூபாய் விருதுத் தொகை வழங்கப் பட்டுள்ளது.

தமிழக அணிகளின் சார்பில் மணிப்பூரில் நடைபெற்ற 4வது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பதக்கங்களை வென்ற 118 விளையாட்டு வீரர்/வீராங்கனைகளுக்கு தமிழக அரசு ரூ.24.15 இலட்சம் ரொக்கப் பரிசுகளாக வழங்கி ஊக்குவித்தது.

நலிந்த நிலையில் உள்ள 13 முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மாதம் ரூ.500/– வீதம் ஒய்வூதியம் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

1999–2000இல் பன்னாட்டு விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு விமானக் கட்டணமாக நபர் ஒன்றுக்கு ரூ.25,000/– வீதம் 9 நபர்களுக்கு ரூ.2,25,000/– வழங்கப்பட்டுள்ளது.

### வனவளம் மற்றும் சுற்றுச்சூழல்துறை

ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ரூபாய் 499 கோடி மதிப்பீட்டில் "தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம்" எனும் மாபெரும் திட்டம் 1997–98 முதல் செயல்படுத்தப்படுகிறது. 1999 இறுதிவரை ரூபாய் 236 கோடி செலவில் ஏறத்தாழ 5.60 இலட்சம் ஏக்கர் பரப்பில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 2000–2001 இல் ரூ.109 கோடி செலவில் 1.89 இலட்சம் ஏக்கர் பரப்பில் 200 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

வன விலங்குகளைப் பாதுகாத்திட 9 புதிய வன விலங்குகள் சரணாலயங்கள் அமைக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு, அனுமதி கிடைக்கப் பெற்ற திருச்சி கரைவெட்டி, ஈரோடு வெள்ளோடு வடமுகம் ஏரி ஆகிய இடங்களில் புதிய சரணாலயங்கள் அமைக்க ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

வனவிலங்குகளால் தாக்கப்பட்டு உயிரிழந்தோர் குடும்பத்திற்கும், நிரந்தரமாக ஊனமுற்றோர்க்கும் வழங்கப்பட்ட நிவாரணம் 5,000 ரூபாய் என்பது 4.10.1996 அன்று 50,000 ரூபாய் எனவும், 12.9.2000 அன்று அதுவே 1 இலட்சம் ரூபாய் எனவும் உயர்த்தப்பட்டுள்ளது. படுகாயம் அடைந்தோருக்கு வழங்கப்பட்ட நிதியுதவி 3,000 ரூபாய் என்பது 4.10.1996இல் ரூ.10,000 எனவும், பின்னர் 12.9.2000இல் ரூ.20,000 ஆகவும் உயர்த்தப்பட்டது.

3 கோடியே 26 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான எல்காட் (ELCOT) நிறுவனத்தின் மூலம் வனத்துறையை கணினி மயமாக்குவதற்கு 13.7.2000 அன்று ஆணை வெளியிடப்பட்டது.

வனப் பணியில் உபயோகப்படுத்தப்பட்ட 21 பழைய வாகனங்களுக்குப் பதிலாக ரூ.84 இலட்சம் செலவில் 21 புதிய பெட்ரோல் ஜீப்புகள் 2000–2001ஆம் ஆண்டில் வாங்கி வனத்துறையிடம், 19.6.2000 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.



சென்னைப் பெருநகர் நீர்வழிகளான கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஒட்டேரி நல்லா, மாம்பலம் வடிகால், கேப்டன் காட்டன் கால்வாய் ஆகியவற்றைத் தூய்மைப்படுத்தி அதன் சுற்றுச் சூழல்களைச் சீரமைக்கும் பணிக்காக 1700 கோடி ரூபாய் செலவில் ஒரு பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நிதியுதவி கோரி மைய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டது. மேலும் இந்த தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் திருச்சி, கரூர், மதுரை, நெல்லை, தஞ்சை, குடந்தை, மயிலாடுதுறை ஆகிய நகரங்களும், சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் திருச்செந்தூர், இராமேசுவரம் ஆகிய நகரங்களும் பயனடையும். இதனைப் பரிசீலித்த மைய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் தேசிய நதிநீர்ப் பாதுகாப்பு இயக்ககம் ரூ.491.52 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு 29.9.2000 அன்று ஒப்புதல் அளித்து 1–1–2001 அன்று இந்தப் பெருந்திட்டம் சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது.

**கால்நடை வளம்**

ஆசியாவிலேயே முதலாவதாக கால்நடைக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்காக 1990ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியிலேதான் ஒரு புதிய பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

கடந்த நான்கரை ஆண்டுகால ஆட்சியில் 120 புதிய கால்நடை மருந்தகங்கள் புதிதாக தொடங்கப்பட்டதோடு 50 மருந்தகங்கள் மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டன. கரூர், திருவாரூர், உதகமண்டலம், மேக்கிரிமங்கலம் ஆகிய 4 கால்நடை மருத்துவமனைகள் பிரதம மருத்துவமனையாகத் தரம் உயர்வு. 2126 பார்வை கிளை நிலையங்கள் கால் நடைகளுக்காக புதிதாகத் தொடங்கப்பட்டன. 91 முதல் 96 வரை நடைபெற்ற ஆட்சியில் 60 புதிய கால்நடை மருந்தகங்களே தொடங்கப்பட்டன.

கால்நடை மருத்துவமனைகளில் வளர்ப்புப் பிராணி களுக்கு 5 ரூபாய் வீதம் வசூலிக்கப்பட்டு வந்த மருத்துவக் கட்டணம் 1996இல் நீக்கப்பட்டது.

கால்நடைகளுக்குக் குடற்புழு நீக்கத்திற்காக வசூலிக்கப்பட்ட ஒரு ரூபாய் கட்டணம் 1996இல் இந்த ஆட்சியில் ரத்து செய்யப்பட்டதால் பயனடைந்த கால்நடைகள் 3 கோடியே 62 இலட்சத்து 37 ஆயிரம்.

கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு 2 கோடியே 56 இலட்ச ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கால்நடை மருத்துவர்கள் எண்ணிக்கை 174.

கால்நடைப் பண்ணைகளில் தினக்கூலிகளாகப் பணிபுரிந்த 1185 பேரில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த 877 பேர் 1997–98இல் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர்.

கால்நடைப் பாதுகாப்புத் துறையில் பணியாற்றி இறந்துபோன ஊழியர்களின் வாரிசுகள் 181 பேருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம்.

1997–98இல் தென் மாவட்டங்களில் நீலநாக்கு நோய் தாக்கி இறந்த கால்நடைகளுக்காக ஏழை, எளிய விவசாயிகளுக்கு 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டது.

**மீனவர் நலம்**

சிங்காரவேலர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் மீனவர்களுக்காக கடந்த நான்கரை ஆண்டுக் கால ஆட்சியில் 20,000 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு 12,665 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. முந்தைய ஐந்தாண்டு கால ஆட்சியில் 4824 வீடுகளே கட்டப்பட்டன. வீடு கட்டும் செலவு ரூ.32,000 என்பது ரூ.37,000 ஆக உயர்த்தப்பட்டது. 1998–99இல் ரூ.1 கோடி செலவில் பழுதுபார்க்க திட்டமிடப்பட்ட 2000 மீனவர் குடியிருப்புகளில், 1,841 குடியிருப்புகளில் பணிகள் முடிவடைந்துள்ளன.

323 மீனவ குடியிருப்புகளில் 1188 தெரு விளக்குகள் 95,40,270 ரூபாய் செலவில்



பொருத்தப்பட்டுள்ளன. 36 மீனவ குடியிருப்புப் பகுதிகளுக்கு ரூ.1 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் முந்தைய ஆட்சியிலே செயல்படுத்தப்படவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மீனவர் மகளிர் கூட்டுறவு சங்கங்களுக்கு 31.80 இலட்சம் ரூபாய் செலவில் இலவசமாக 25 மோட்டார் பொருத்திய 5 சக்கர வாகனங்கள் வழங்கப் பட்டுள்ளன.

மீனவர் காப்புறுதித் திட்ட நிதி ரூ.35,000 என்பது ரூ.50,000 ஆக 10.12.2000த்தில் உயர்த்தப்பட்டது. இது தவிர மாநில அரசு செயல்படுத்தும் காப்புறுதி திட்டத்தில் ரூ.15,000 வழங்கப்படுகிறது.

மீனவர் குழு காப்புறுதி திட்டத்தின் கீழ் 201 மீனவ குடும்பங்களுக்கு 60 இலட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது. மீனவர் விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ் 902 மீனவ குடும்பங்களுக்கு 2 கோடியே 45 லட்ச ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளன.

சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 1996க்குப்பின் ஒவ்வொரு ஆண்டிலும் மீன் பிடிப்பு இல்லாத நான்கு மாதங்களுக்கு மொத்தம் 8,32,259 மீனவர்களுக்கு மாதம் ரூ.270 வீதம் மொத்தம் 58 கோடியே 68 இலட்சத்து 39 ஆயிரத்து 780 ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய மீன்பிடி படகுகளில் உள்பொருத்தும் இயந்திரத்திற்கு ரூ.12,000/- வீதமும், வெளிப்பொருத்தும் இயந்திரத்திற்கு ரூ.10,000/- வீதமும் கடந்த நான்கு ஆண்டுகளில் 6,675 இயந்திரங்களுக்கும், 1,521 வலைகளுக்கும் - மொத்தம் 8 கோடியே 34 இலட்சத்து 81 ஆயிரத்து 437 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த டீசல் மானியம் லிட்டருக்கு 35 காசு என்பதை 45 காசாக உயர்த்தி 97-98ஆம் ஆண்டு முதல் இந்த ஆட்சியில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக 7 ஆயிரம் பயனாளிகள் 5 கோடியே 21 இலட்சம் ரூபாய் டீசல் மானியமாகப் பெற்றுள்ளனர். முந்தைய ஆட்சியில் 2498 பயனாளிகள் மட்டுமே வெறும் 62 இலட்சம் ரூபாய் அளவிற்கு டீசல் மானியமாகப் பெற்றனர்.

தமிழக மீனவர்களைக் காத்திட ரூ.4.50 கோடி செலவில் நீலம், கயல், பவளம், முத்து, வலம்புரி என்னும் பெயர்களில் 5 ரோந்துப் படகுகள் 16.11.1999 முதல் இயக்கப்படுகிறது.

விபத்தில் இறக்கும் மீனவ மகளிர் குடும்பங்களுக்கு 2000-2001இல் ரூ.15,000; காயமடையும் மகளிருக்கு ரூ.7,500 நிவாரண உதவி.

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர் காணாமல் போய் அவர் திரும்பி வரும் வரையில் அவரது குடும்பத்தைக் காத்திடும்பொருட்டு நாள் ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் நிதி உதவி வழங்கிடவும், இலங்கை கடலோரக் காவல் படையினரால் சுடப்பட்டு உயிரிழக்கும் மீனவர் குடும்பத்திற்கு பாதுகாப்பு நிதியாக ஒரு இலட்சம் ரூபாயும் கலைஞர் ஆட்சியில்தான் தற்போது முதன் முதலாக வழங்கப்படுகிறது.

***சிறுதொழில் வளர்ச்சி***

தமிழகத்திலுள்ள தேயிலை, ஜவ்வரிசி, கயிறு, தீப்பெட்டி, கைவினைப் பொருட்கள் முதலியவை சார்ந்த 335 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடந்த நான்கரை ஆண்டுகளில் ரூ.1630 கோடிக்கு விற்பனைகள் செய்யப்பட்டு சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. 1991 முதல் 1995-96 வரை நடைபெற்ற ஆட்சியில் 1062 கோடி ரூபாய்க்குத்தான் விற்பனை நடைபெற்றது.

நான்கரை ஆண்டு கால இந்த ஆட்சியில் 4715 சிறு தொழில் நிறுவனங்களுக்கு 93.54 கோடி ரூபாய் முதலீட்டு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. முந்தைய ஐந்தாண்டு கால ஆட்சியில் 3367 சிறு தொழில் நிறுவனங்களுக்கு 43.76 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது.

நான்கரை ஆண்டுக் கால ஆட்சியில் 14,779 சிறுதொழில் நிறுவனங்களுக்கு 32 கோடி ரூபாய் குறைந்த அழுத்த மின்கட்டண மானியமாக வழங்கப்பட்டுள்ளது. முந்தைய 5 ஆண்டுக் கால ஆட்சியில் வெறும் 8.94 கோடி ரூபாய் மட்டுமே இந்த மானியமாக வழங்கப்பட்டது.

இந்த ஆட்சியில் 851 சிறுதொழில் நிறுவனங்களுக்கு 3.45 கோடி ரூபாய் ஜெனரேட்டர் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. முந்தைய ஐந்தாண்டு கால ஆட்சியில் 1.30 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது.

சிறு தொழில் நிறுவனங்களுக்கு ஆட்சியில் 214 கோடியே 36 இலட்ச ரூபாய் அளவிற்கு வட்டியில்லாத விற்பனைவரி ஒத்திவைப்பு சலுகையாக வழங்கப்பட்டுள்ளது. முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டுக் காலத்தில் 137 கோடி ரூபாய் அளவிற்கு மட்டுமே இந்தச் சலுகை வழங்கப்பட்டது.

நான்கரை ஆண்டுகளில் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள சிறுதொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 1,43,562. அவைகளில் 2,813.38 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 12,66,021 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

**வீட்டு வசதித் துறை**

பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்காக 5 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் 12,946 மனைகளும், குறைந்த வருவாயினருக்காக 21 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் 9,345 மனைகளும், 5,952 வீடுகளும், நடுத்தர வருவாயினருக்காக 126 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் 9,960 மனைகளும், 8,600 வீடுகளும், 493 அடுக்குமாடி குடியிருப்புகளும், உயர்



வருவாயினருக்காக 234 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் 7,924 மனைகளும், 4,190 வீடுகளும், 2,907 அடுக்குமாடி குடியிருப்புகளும் புதிதாகக் கட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 115 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் 2,790 அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அரசின் இந்த நாலரை ஆண்டுகளில் மட்டுமே வாரியம் 982 கோடியே 82 இலட்சம் ரூபாயினை வருவாயாக வசூலித்துள்ளது. ஆனால் முந்தைய அரசு ஐந்தாண்டுகளில் ஈட்டியுள்ள வருவாய் 491 கோடியே 62 இலட்சம் ரூபாய் மட்டுமே!

இந்த நாலரை ஆண்டுகளில் வாரியம் 785 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மனை மற்றும் குடியிருப்புகளை விற்பனை செய்துள்ளது. முந்தைய ஐந்தாண்டு கால ஆட்சியில் 517 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மனை மற்றும் குடியிருப்புகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது.

மாவட்ட தலைமை இடங்களான திருவள்ளூர், விழுப்புரம், தேனி, பெரம்பலூர், கரூர், திருவாரூர், தூத்துக்குடி, நாமக்கல், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் அரசு அலுவலர்களுக்கு 948 குடியிருப்புகள் 30 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இவை நீங்கலாக விழுப்புரம் பெருந்திட்ட வளாகப் பகுதி, திருப்பூர், மேட்டூர், சேலம், நாகர்கோயில், பாளையங்கோட்டை, ஈரோடு ஆகிய நகரங்களில் 636 குடியிருப்புகள் 24 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகள் சலுகை வாடகையில் அரசு அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருக்க ஏதுவாக ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அனைத்து நவீன வசதிகள் அடங்கிய 240 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 44 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

1995 – 96ம் ஆண்டு வரை ஆண்டுதோறும் 40,000 முதல் 45,000 வரை புதிய வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது. தற்போது ஆண்டுதோறும் 70,000 முதல் 80,000 வீடுகள் கட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

1996க்கு முன்னர் புதிய வீடுகள் கட்ட ஆண்டுதோறும் 150 கோடி ரூபாய் முதல் 200 கோடி ரூபாய் வரை வழங்கப்பட்டு வந்த கடனுதவி உயர்த்தப்பட்டு தற்போது ஆண்டிற்கு 650 கோடி ரூபாயளவிற்கு கடனுதவி வழங்கப்படுகிறது.

குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான கடனுதவி 55 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சமாகவும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான கடன் 80 ஆயிரத்திலிருந்து 2 இலட்சம் ரூபாய் ஆகவும் மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலம் வழங்கப்படுகின்ற வீட்டுவசதிக் கடன் 3 இலட்சம் ரூபாயிலிருந்து அதிகபட்சமாக 7 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

1996ம் ஆண்டிற்கு முன்னர் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் வீடற்ற ஏழை எளியோருக்கு ஆண்டுதோறும் 30,000 வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது. 1996க்குப் பின் 50,000 என உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த நான்கரையாண்டுகளில் கட்டப்பட்டுள்ள 2,68,654 வீடுகளில் ஊரகப் பகுதிகளில் மட்டும் 1,84,774 புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதில் குறிப்பாக 1,64,808 வீடுகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை எளியோருக்கு கட்டப்பட்டதாகும். கடந்த நான்கரையாண்டுகளில் ஊரகப் பகுதிகளில் பயனடைந்தோரின் பங்கு 68 விழுக்காடாகும்.

இந்தியாவில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் நிதியுதவி மூலம் கட்டப்பட்டுள்ள 15 லட்சம் வீடுகளில் தமிழ்நாட்டில் மட்டும் 66 விழுக்காடுகளுக்குமேல் – அதாவது 9,89,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்**

கலைஞர் அரசினால் 1972–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு ஏழை நடுத்தர மக்களின் வரப்பிரசாதமாக விளங்கும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 1991 முதல் 1996 வரை 6,666 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 47 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டன. கடந்த நான்கரை ஆண்டு கலைஞர் ஆட்சியில் 13,001 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 138 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**1996-97**ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் அவர்கள் விரும்பினால் அக்குடியிருப்புகளை எளிய முறையில் சொந்தமாக்கப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் அந்த வகையில் சுமார் **41** ஆயிரம் குடியிருப்புகள் ஏழையெளிய மக்களுக்குச் சொந்தமாக்கப்பட்டுள்ளன.

நகரங்களில் குடிசைப்பகுதிகளின் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை மேம்படுத்தும் பொருட்டு அடிப்படை வசதிகளான சாலைகள் அமைத்தல், தெரு மின் விளக்குகள் அமைத்தல், மழைநீர் வடிகால் அமைத்தல், குளியலறை மற்றும் கழிப்பறை கட்டுதல் போன்ற அடிப்படை வசதிகளைக் கொண்டு சுற்றுப்புறச் சூழ்நிலைகளை மேம்படுத்தி அப்பகுதிகளை நல்ல உறைவிடங்களாக மேம்படுத்தும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆட்சிக்காலத்தில் **1991** முதல் **1996** வரை **65,007** குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். **9** கோடியே **93** இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டன. கடந்த நான்கரையாண்டு இந்த ஆட்சியில் **1,04,903** குடும்பங்கள் பயனடைந்தனர். **20** கோடியே **10** இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் இதர மாநகரங்களில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் தீ விபத்துக்களால் பொருட்சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு ஓர் உடனடி நடவடிக்கையாக இம்மாநகரங்களில் குடிசைப்பகுதிகளில் வாழும் **50,025** குடும்பங்களுக்கு கல்நார் தகடு கூரைகளாலான வீடுகள் அமைக்கும் திட்டத்தை நான் **1998-1999** ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அறிவித்து, இதுவரை **28,018** குடும்பங்களுக்கு **37** கோடியே **70** இலட்சம் செலவில் சுற்றுச் சுவர்களுடன் கூடிய கல்நார் தகடுகளாலான கூரை வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சென்னை, மதுரை, ஈரோடு, கோவை, சேலம், திருச்சி, வேலூர், திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய நகரங்களில் குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு உலக வங்கி நிதியுதவியுடன் அடிப்படை வசதிகள் அமைத்து மனை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் **1996-98** ஆண்டுகளில் **3,293** குடும்பங்களுக்கு **4** கோடியே **22** இலட்சம் ரூபாய் செலவில் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சென்னை மற்றும் இதர நகரங்களில் வெவ்வேறு பகுதிகளில் பல்வேறு கட்டங்களில் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு மாடிப் படிகளை சீர் செய்தல், தளங்களைச் சீரமைத்தல், மழைநீர்க் கசிவினை தடுக்க ஓடுகள் பதித்து கூரைத் தளங்களை சீரமைத்தல், தரைகளைப் பூசுதல், வெளிப்புறச் சுவர்களைப் பூசுதல் போன்ற பழுதுபார்ப்புப் பணிகள் **1996-99** ஆண்டுகளில் **47,500** குடியிருப்புகளுக்கு **14** கோடியே **50** இலட்சம் ரூபாய் செலவில் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பறக்கும் ரயில் திட்டம்**

திருமயிலை முதல் வேளச்சேரி வரையிலான பறக்கும் ரயில் திட்டம் (**MRTS**) **10.60** கிலோ மீட்டர் நீளப் பகுதிக்கான திட்டச் செலவான **733** கோடி ரூபாயில் தமிழ்நாடு அரசு மூன்றில் இரண்டு பங்கு செலவினையும், மத்திய அரசு மூன்றில் ஒரு பங்கு செலவினையும் ஏற்கிறது. **30.9.2000** முடிய மொத்தம் **281** கோடியே **16** இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன. **2002** ஆம் ஆண்டு மார்ச் திங்களில் முடியும்.

**கோயம்பேட்டில் பேருந்து நிலையம்**

சென்னையில் தற்போது இயங்கிவரும் பேருந்து முனையங்களான எஸ்பிளனேட், எம்.யூ.சி, பேசின் பாலம் மற்றும் பிராட்வே ஆகிய இடங்களில் நிலவி வரும் போக்குவரத்து நெரிசல்களையும், சுகாதாரமற்ற நிலைமைகளையும் மற்றும் போக்குவரத்து பிரச்சினைகளையும் குறைப்பதற்காக, புறநகர் பேருந்துமுனையம் ஒன்றை நகரத்தையொட்டியுள்ள கோயம்பேட்டில் அமைப்பதற்கான வேலை நடைபெற்று வருகிறது. அரசு இத்திட்டத்திற்காக **89** கோடியே **21** இலட்சம் ரூபாய்க்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்து, இத்திட்டப் பணிகளை செயல்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் அளித்துள்ளது.

ஏற்றுக்கொண்ட பொறுப்பை இனிது நிறைவேற்றுவதிலும், கடமையாற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பதிலும், சிந்தனை செயல் அனைத்தும் இந்த நாடு செழிப்பதற்காகவே செலவிடுவதிலும் எந்த அளவுக்கு இணையற்று விளங்குகிறது இந்த அரசு என்பதை விளக்கும் சரித்திரச் சான்றுகள்தான் இவைகள்.

● ● ●

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368927

பதிவு எண் M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு












